Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 23 ஞாயிற்றுக்கிழமை (07.07.2013) பக்கங்கள் 20 ஓசை – 280

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225596
Hotline: 0212229797



ஆட்டம் காணும் (06)


மாணவர்களுக்கு (07)


பலப்பரீட்சை (08)


பாட்டும் நானே (10)


புனிதர் பட்டம் (18)


# 13 ஆவது திருத்தத்தை பலவீனமாக்க ஒருபோதும் அனுமதிக்கமுடியாது

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் பலவீனமாக்க முயலும் பட்சத்தில் அதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோமென ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் தமிழ் ஊடகவியலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்கள் கடந்த காலங்களில் மாயாமான்களை நம்பி ஓடியதன் காரணமாகவே அழிவுகளையும் ஏமாற்றத்தையும் சந்திக்க வேண்டிய நிலையேற்பட்டது. இந்நிலையில் நாம் இணக்க அரசியலின் ஊடாக பல விடயங்களை சாதித்துள்ளோம்.

அந்தவகையில், மக்களின் நலன்களை முன்னிறுத்தியதாக திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தி வெற்றியும் கண்டுள்ளோம்.

அந்தவகையில் மாகாணசபையூடாகவே எமது மக்களுக்கான அரசியல் உரிமையை வென்றெடுக்க முடியுமென்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம். இருந்த போதிலும் அதை எதிர்த்தவர்கள் இன்று முதலைக்கண்ணீர் வடிக்கின்றனர்.

எமது பிரச்சினைகளுக்கு நாமே தீர்வு காணவேண்டுமானால் அதற்கு மக்களது ஆதரவு முக்கியமானது. இந்நிலையில் நடைபெறவுள்ள வடமாகாண சபைத்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வேட்புமனு அறிவித்தல் 11 இல் வெளிவரும்

(கொழும்பு)

வடமாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 24 அல்லது 25 ஆம் திகதிகளில் நடைபெறுமென தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் சில கட்சிகளின் பிரதிநிதிகளுடன் நடைபெற்ற

(19) ஆம் பக்கம் பார்க்க

# 13 ஆவது திருத்தச் சட்டம்; மாற்றியமைக்கக்கூடாது

## இந்தியா தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிரும் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்றும் அவற்றை நீர்த்துப் போகச் செய்யாமல், அவற்றுக்கு அப்பாலும் சென்று அந்த விடயங்கள் தொடர்பில் அர்த்தமுள்ள மேம்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்றும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவுக்கு சென்றிருந்த அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்சித்தை சந்தித்துள்ளார்.



இதன்போது அமைச்சர் வடமாகாணத்துக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள விடயத்தை இந்திய வெளியுறவு அமைச்சரிடம் பசில் ராஜபக்ஷ தெரிவித்த போதே, இந்தியாவின் இந்தக் கருத்தை குர்சித் அவரிடம் கூறியுள்ளார்.

வடமாகாண தேர்தல் அறிவிக்கப்பட்டமை குறித்து தனது

(19) ஆம் பக்கம் பார்க்க

## முப்பரிமாண கொள்கையில் வடக்கில் அபிவிருத்தி

### புதுடில்லியில் பசில்

(புதுடில்லி)

வடபகுதியை இராணுவமயமற்றதாக மாற்றுதல், அபிவிருத்தி செயற்பாடுகளை முனனெடுத்தல் மற்றும் நாட்டில் ஜனநாயகத்தை ஸ்தாபித்தல் ஆகிய குறிக்கோள்களுடன் வடபகுதிக்கான அபிவிருத்தி செயற்பாடுகள் முப்பரிமாண கொள்கையின்படி முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர்

(19) ஆம் பக்கம் பார்க்க

## தெரிவுக்குழு கூடுவது தொடர்பில் இந்திய அழுத்தம் தேவையற்றது

### என்கிறார் அமைச்சர் நிமால்

(கொழும்பு)

தேசியப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு அனைத்து கட்சிகளினதும் பங்களிப்புடனேயே கூடவேண்டுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளமையை தெரிவுக்குழுவின் தலைவர் நிமல் சிறிபால டி சில்வா கண்டித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது,

நாடாளுமன்றத் தெரிவுக்குழு

(19) ஆம் பக்கம் பார்க்க

## மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை மீது தொடரும் கவனம்

(ஜெனிவா)

இலங்கை, மனித உரிமைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒரு நாடு என அமெரிக்கா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 23 ஆவது கூட்டத்தொடரில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றிய ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கான அமெரிக்கப் பிரதிநிதி



(19) ஆம் பக்கம் பார்க்க

# ஒருங்கிணைப்புக்குழு எண்ணிக்கை; மாற்றியமைத்தது கூட்டமைப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது ஒருங்கிணைப்புக் குழுவின் அங்கத்தவர் தொகையை நான்காக அதிகரித்துள்ளது. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று மாலை 5.00 மணியளவில் கொழும்பில் சந்தித்துக் கலந்துரையாடிய வேளையே இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி ஒவ்வொரு கட்சிக்கும் தலா மூவர் வீதம் பதினைந்து பேரை உள்ளடக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக்குழுவை அமைப்பதென்று முன்னர் இணக்கம் காணப்பட்டிருந்த விடயத்தில் சிறு மாற்றமாக ஒவ்வொரு கட்சிக்கும் தலா நால்வர் வீதம் இருபது பேரும் கூட்டமைப்பின் இரா. சம்பந்தனோடு ஒருங்கிணைப்புக்குழுவில் மொத்தம் இருபத்தொரு பேராகவும் அதிகரிப்பதென்று முடிவெடுக்கப்பட்டது.


மற்றும் இந்த ஒருங்கிணைப்புக் குழுவானது எதிர்வரும் 11 ஆம் திகதி சந்திப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் தமிழரசுக் கட்சி சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், சுமந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் சங்கையா, ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ சார்பில் அதன்

(19) ஆம் பக்கம் பார்க்க

# புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகள் சமூக விரோத செயல்களில் ஈடுபடவில்லை

## - அமைச்சர் சந்திரசிறி கஜதீர



புனர்வாழ்வு பெற்று சமூகத்தில் இணைக்கப்பட்ட பின்னர் முன்னாள் போராளிகள் எந்த வித சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடவில்லை.

இதற்காகவே அர சாங்கம் அவர்களுக்கு பொருளாதாரரீதியில் பல்வேறு உதவிகளைச் செய்ய முன்வந்திருப்பதாக சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று விஜயம் செய்த அமைச்சர் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் சமூகத்தில் இணைக்கப்பட்ட முன்னாள் போராளிகளைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பொருளாதார, அரசியல் மற்றும் சமூகப் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர், புனர்வாழ்வு அதிகாரசபையின் தலைவர் மற்றும் அமைச்சின் அதிகாரிகளும் அமைச்சர்களுடன் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் போராளிகள் வாழ்ந்து வரும் இரு கிராமங்களுக்கு வருமாறு தமக்கு அவர்கள் அழைப்பு விடுத்திருந்ததாகவும் நேரம் போதாமை காரணமாக அங்கு செல்லவில்லை. என்றும் இருப்பினும் சில தினங்களில் அங்கு செல்ல எண்ணியிருப்பதாகவும் தெரிவித்ததுடன், இவ்வாறு சமூகத்தில் இணைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகள் எந்தவித சமூக விரோத செயல்களிலும் ஈடுபடவில்லை. இதனால் ஜனாதிபதியின் ஒப்புதலுடன் பல்வேறு நலத்திட்டங்களும் அரசினால் இவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

அவ்வாறு கடந்தவாரம் ஜனாதிபதியின் ஒப்புதலுடன், சமூகத்தில் இணைக்கப்பட்ட 4500 முன்னாள் போராளிகளுக்கு கடன்கள் வழங்கப்படவுள்ளதாகவும், இதற்கு தமது அமைச்சிற்கு ஜனாதிபதி அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் முன்னாள் போராளிகளின் குடும்பங்களின் அழிவடைந்த சொத்துக்கள் போன்றவற்றிற்கு இழப்பீடுகள் வழங்க அமைச்சிற்கு அங்கீகாரம் கிடைத்திருப்பதாகவும் மேலும் சிவில் பாதுகாப்பு குழுவில் இணைந்து அவர்களுக்கு சம்பளக் கொடுப்பனவு வழங்கவும், அவர்களது குடும்பங்களை சமூக பொருளாதார ரீதியில் உயர்த்திடவும் அமைச்சு முன்னின்று செயற்பட்டுவருவதாகவும் தெரிவித்தார். (பா)

# வருடாந்த மஹோற்சவம்

(திருநெல்வேலி)

நல்லூர் பால கதிர்காம வருடாந்த மஹோறசவம் நாளை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பதினைந்து நாட்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 5.00 மணிக்கு தீர்த்தோற்சவம் இடம்பெறும். தினமும் மாலை 5 மணிக்குப் பூஜைகள் ஆரம்பமாகும். (137)

# துறையூரில் கால்பந்தாட்டம்; இறுதியாட்டம் இன்று

(வேலணை)

வேலணை துறையூர் ஐயனார் சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்றுவரும் மாபெரும் கால்பந்தாட்டப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் (உதயன்)கலந்துகொள்ளவுள்ளார்.

துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் இப்போட்டித் தொடரில் தீவகத்திற்குட்பட்ட 35 இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குபற்றுகின்றன.

காலிறுதி, அரையிறுதி மற்றும் இறுதிப் போட்டிகள் இடம்பெற்று வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (21)

# திருடப்பட்ட ஒட்டியாணம் பொலிஸாரால் மீட்பு

பருத்தித்துறை முனீஸ்வரர் ஆலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் ஆலய திருவிழா உற்சவம் இடம்பெற்று வந்த நிலையில், 8 பவுண் நிறையுடைய சுவாமியின் ஒட்டியாணம் களவாடப்பட்டுள்ள நிலையில் பொலிஸாரினால் அது மீட்கப்பட்டுள்ளது.

இவ் ஆலய உற்சவத்தின் 8 ஆம் திருவிழா இடம்பெற்ற வேளை சுவாமிக்கு நகை சாத்துவதற்காக ஆலய பிரதம குருவினால் உதவியாளருக்கு நகை கொடுக்கப்பட்ட நிலையில் பின்னர் சுவாமிக்கு நகை சாத்தப்படவில்லை.

இதனை அறிந்த ஆலய நிர்வாகத்தினர் பிரதம குருவிடம் கேட்டபோதே விடயம் தெரிய வந்தது. உதவியாளர் ஆட்டோவில் ஏறிச் செல்வதை அவரே பிறிதொரு குருக்களிடம் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

இதனை அந்த குருக்கள் ஆலய நிர்வாகத்தினருக்குத் தெரியப்படுத்தியதுடன், ஆலய நிர்வாகத்தினர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து குறித்த நகையுடன் சென்ற உதவியாளர் கொடிகாமம் பகுதியில் பேருந்தில் சென்றவேளை பொலிஸார் அவரை கையும் மெய்யுமாக கைது செய்துள்ளனர்.

எனினும் ஆலய நிர்வாகத்தினர் குறித்த உதவியாளருக்கு பொது மன்னிப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவரை பொலிஸார் விடுவித்த தாகத் தெரிவிக்கப்படுகிறது. (116)

# கால்நடை அபிவிருத்தி; மேலும் இரு நிலையங்கள்

(முழங்காவில்)

பூநகரி கால்நடை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் தமது கொள்வனவையும், உற்பத்தியையும், அபிவிருத்தி செய்யும் நோக்கில் மேலும் இரு நிலையங்களைத்திறந்து செயற்பட ஆரம்பித்துள்ளது.

முழங்காவில், ஜெயபுரம் பகுதிகளில் இயங்கும் கிளை நிலையங்கள் ஊடாக பால் கொள்வனவு செய்யவும். தயிர், நெய், யூஸ் ஆகியவற்றை உற்பத்தி செய்யவும், ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக கால் நடை அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தலைவர் தெரிவித்தார்.

இங்கு உற்பத்தி செய்யும் யூஸுக்கும், தயிருக்கும் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும், பொது மக்கள் மத்தியிலும் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. (112)

# வருடாந்த விளையாட்டு விழா

(ஆனைக்கோட்டை)

ஆனைக்கோட்டை ஐக்கிய சனசமூக நிலைய அடைக்கல மாதா முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் ஜீ.வி.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் லயன் இ.எஸ்.பி.நாகரத்தினம் பிரதம விருந்தினராகவும், கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் வலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சி.குகனேசன், அதிபர் நவலக்சுமி சந்திரகுமார், அதிபர் நா.தனபாலசிங்கம், அதிபர் கு.திலீபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.



நேற்று மாலை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் யாழ்.போக்குவரத்து பொலிஸ் அதிகாரி சமிந்த சில்வா உரையாற்றுவதையும், இரவு நேர விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் துவிச்சக்கர வண்டிகளுக்கான ஒளித்தெறிப்பு ஸ்ரிக்கர்களை ஒட்டும் வேலைத்திட்டத்தை யாழ்.பொலிஸார் மேற்கொள்வதையும் காணலாம்.

(படங்கள். ஆர்.இராஜகுமார்.)


## நியத்த ஜய

உத்தியோகபூர்வ முடிவு

வெற்றி வாரம் 167 | திகதி 2013.07.05 | வர்ணம் நீலம்

வெற்றி இலக்கங்கள்

ஆங்கில எழுத்து

24 33 47 52 Y

பரிசுத் தொகை ரூபா. 13,471,200/- வெல்லப்படவில்லை

| பரிசு வகை | பரிசுத் தொகை | வெற்றியாளர்களின் எண்ணிக்கை | மொத்த பரிசுத் தொகை ரூ. |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுக்கு | 1,000,000/- | 00 | - |
| ஏதேனும் 3 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 50,000/- | 04 | 200,000/- |
| ஏதேனும் 3 இலக்கங்களுக்கு | 1,000/- | 207 | 207,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 1,000/- | 378 | 378,000/- |
| ஏதேனும் 2 இலக்கங்களுக்கு | 60/- | 8898 | 533,880/- |
| ஏதேனும் 1 இலக்கம் மற்றும் ஆங்கில எழுத்துக்கு | 40/- | 4656 | 186,240/- |
| ஏதேனும் 1 இலக்கத்திற்கு | 20/- | 117047 | 2,340,940/- |
| ஆங்கில எழுத்திற்கு | 20/- | 16907 | 338,140/- |
| நான்கு இலக்கங்களை மற்றும் ஆங்கில எழுத்து பொருந்துபவர்கள் முலம் | 13,471,200/- | - | - |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | | | 4,184,200/- |

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசுத்தொகை ரூபா. 13,700,100/-

2013.07.09ம் திகதி செவ்வாய்க்கிழமை அடுத்த சீட்டிழுப்புக்கு செல்லுப்படியாவது மஞ்சள் வர்ண டிக்கட்களாகும்

வெற்றி பெறும் டிக்கட்கள் 6 மாதத்திற்கு செல்லுப்படியாகும்.

நியத்த ஜய

வளமான வாழ்வுக்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02.

தொ.பே. 011 2333546/47

(C/2926)

web : www.dlb.lk

# இயற்கைச் சமநிலையை பேணுவதில் மாணவர்களுக்கும் முக்கிய பங்குண்டு

## சப்ரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி. இனோக்கா குடவிதானகே

(வடமராட்சி)

பாடசாலை மாணவர்கள் இயற்கையை நேசிக்கப் பழக வேண்டும். இயற்கைச் சமநிலையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளைத் தவிர்த்தல் வேண்டும் என சப்ரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி. இனோக்கா குடவிதானகே தெரிவித்தார்.

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஏற்பாட்டில், யாழ். மாவட்டத்திலிருந்து 35 மாணவர்களும் ஆசிரியர்களும் வெளிக்களக் கல்விப் பயணததை மேற்கொண்டு தொண்டைமானாற்றில் இயங்கும் வெளிக்கள நிலையத்திற்கு அண்மையில் விஜயம் செய்தவேளை அங்கு இடம்பெற்ற உயிர்ப்பல்வகைமை தொடர்பான மாணவர்களுக்கான செயலமர்வில் கலநது கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இயற்கைச் சமநிலையில் உள்ள சூழலை மனிதர்கள் குழப்புவதால் தான் உயிர்களின் சமநிலைய்யில் ஒரு தளம்பல் ஏற்படுகின்றது.

இயற்கைக் காடுகளை அழிப்பதாலும், காடுகளில் சுதந்திரமாகத் திரிகின்ற விலங்குகளை வேட்டையாடுவதாலும், நீர் நிலைகளை மாசுபடுத்துவதாலும் மனிதுர்கள் தான் இயற்கையில் பேரழிவுகளை ஏற்படுத்துகின்றனர். மனிதர்களின் இத்தகைய செயல்களினாலேயே பூகோள வெப்பநிலை உயர்வு, வெள்ளப் பெருக்கு, வரட்சி, மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. எனவே மாணவர்கள் இயற்கையை நேசிப்பதுடன் அதனைப் பாதுகாக்கவேண்டும் என தெரிவித்தார்.

தொடர்ந்து வல்வெட்டித்துறை நகர பிதாவும் தொண்டைமானாறு வெளிக்கள நிலைய உப தலைவருமான நடராஜா அனந்தராஜ் உரையாற்றுகையில்,

உயர்தர வகுப்பு விஞ்ஞானக் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டையும், ஆராய்வு ஊக்கத்தையும் உயர்த்தும் நோக்கில் 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த வெளிக்கள நிலையம், பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் விஞ்ஞானக் கல்வியை உயர்த்தியதில் பெரும் பங்காற்றியுள்ளது. இங்கு வருகின்ற மாண வர்களுக்கும் சூழலியல் தொடர்பான பல தகவல்களை இந்தப் பிரதேசம் வழங்கிக் கொண்டிருக்கின்றது.

இவை போன்ற செயலமர்வுகளைத் தொடர்ந்து இங்கு நடத்த கல்வித் திணைக்களமும், வெளிக்கள நிலையமும் முன்வர வேண்டும் என்றார்.

தொடர்ந்து படக்காட்சி மூலம் உயிர்ப்பல்வகைமை தொடர்பான விளக்கங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. இதில் தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் தலைவர் பேராசிரியர் திருமதி.குகநாதன், உப தலைவர் திருமதி.க.இராஜாராம், பொருளாளர் உலகநாதன், அல்போன்ஸ் ஆகியோரும், சிறுவர்கள் மகிழ்வக நிலையத்தின் இணைப்பாளர் ஸ்ரீ கஜேந்திரன் மற்றும் நெதர்லாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த சூழலியல் கல்வி ஆய்வை மேற்கொள்ளும் மாணவர்களும், உறுப்பினர் க.ஜெயராஜா ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.

## விசேட பொதுக்கூட்டம்

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

அரசாங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் கிளிநொச்சி மாவட்டத் தலைவா அ.கனகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## முத்துமாரி அம்மன் வருடாந்த மஹோற்சவம்

வடமராட்சி அருள்மிகு வேவிலந்தை முத்துமாரி அம்மன் வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை 9 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெறம்.

இதில் தேர் உற்சவம் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும், மறுநாள் 22 ஆம் திகதி காலை 6 மணியளவில் சமுத்திர தீர்த்தமும் நடைபெற்று மாலை 5 மணியளவில் கொடி இறக்கம் இடம்பெறும். (150)

# வீதியில் குவிக்கப்பட்டுள்ள கற்கள்; விபத்துக்களை எதிர்நோக்கும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பகுதியில் வீதி விபத்துக்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சுன்னாகம் நகரை அண்டிய பகுதியில் கே.கே.எஸ். வீதியில் பாதை வேலைக்காக காபெற் வீதியில் கற்கள் குவிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சுன்னாகம் பழைய பொலிஸ் நிலையம் முன்பாக வீதியில் குவிக்கப்பட்டுளள கற்குவியலில் மோதுண்டு அண்மையில் இரவுவேளை ஒருவர் விபத்துக்குள்ளாகி படு காயமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அதே கற்குவியலில் கடந்த வியாழக்கிழமை இரவு ஆசிரியர் ஒருவர் மோதுண்டு காயமடைந்தார். வீதி வேலைக்காக குவிக்கப்பட்ட கற்கள் உரியமுறையில் அகற்றப்படாமலும் உரிய பாதுகாப்பு குறியீடுகள் இடப்படாமையுமே இவ் விபத்துக்களுக்கு காரணம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, கடந்த வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் சுன்னாகம் ஜெற் மோட்டோஸ் சந்தியில் நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் சிறுகாயங்களுக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு வீதியில் குவிக்கப்பட்டுள்ள கற்குவியலால் நாளாந்தம் விபத்துக்கள் ஏற்படுவதாகவும, அதனூடாகச் செல்லும் வாகனங்கள் மிகுந்த அவதானத்துடன் செல்லவேண்டியுள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே விபத்தை ஏற்படுத்தும் கற்குவியலை வீதி புனரமைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிய தரப்பினர் அவற்றை அகற்றி போக்குவரத்தை இலகுபடுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (66)




வடமாகாண ப.தெ.வ.அ.கூ.ச.சமாசம்
வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி
சுன்னாகம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்
ஆகியவற்றின் முன்னாள் தலைவரும்
யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை
யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம்
என்பவற்றின் முன்னாள் உபதலைவருமான

## கணபதி மெய்யழகன்

அவர்களின் மரணச்செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையும் அதிர்ச்சியும் அடைவதோடு அவரது பிரிவினால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியினதும் அங்கத்துவ சங்கங்களினதும் பணிப்பாளர்கள், பணியாளர்கள் ஆகிய நாம் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா இறைவனின் சந்நிதியில் இளைப்பாற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலிகாமம் ப.தெ.வ.அ.கூ.ச.கொத்தணியும்
சங்கானை, தெல்லிப்பளை, சுன்னாகம், மானிப்பாய்,
பண்டத்தரிப்பு, கோண்டாவில், காரைநகர் ஆகிய பனை
தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும்

# கலை வளர்ச்சி மையத்தின் இசையரங்கும், நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் இசையரங்கும் நூல் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ தாணு மகாதேவக்குருக்கள், அருளுரையை நல்லை ஆதீன குருமணி சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், வாழ்ததுரையை இணுவில் சிவகாமி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சாம்பசிவ சோம சபேசக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர், பேராசிரியர் சி.விசாகரூபன், செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை தலைவர் க.தேவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். கௌரவ விருந்தினர்களாக சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கயான் சமரக்கோன், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிங்க ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை பிரபல எழுத்தாளர் கலாபூஷணம் கே.எஸ்.ஆனந்தன் வழங்கவுள்ளார். இன்னிசைக் கச்சேரியில் பாட்டு தவநாதன் றொபேட், வயலின் கே.குகபரன், மிருதங்கம் கே.பிரணவன், கெஞ்சிரா கிருப்பா அனந்தகோபன், கடம் கே.ரவி சங்கர், முகர்சிங் கே.நந்தகுமார் ஆகியோர் இம்பெறவுள்ளனர்.

# கணக்கு வைத்துள்ள மாணவர்கள் வங்கிக் கிளைய்யால் கௌரவிப்பு

(வடமராட்சி)

பருத்தித்துறை தேசியசேமிபபு வங்கியில் கணக்கு வைத்திருக்கும் 5 ஆம் ஆண்டு மாணவர்களில் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 63 மாணவர்களை பருத்தித்துறை தேசியசேமிப்பு வங்கி பாராட்டிக் கௌரவித்துப் பரிசில்களை வழங்கியுள்ளது.

இம் மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் விழா பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் வங்கி முகாமையாளர் கேபகீரதன் தலைமையில் நடைபெற்றது.

விழாவிலே வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் எ.ரவீந்திரன் பிரதம விருந்தினராகச் கலந்துகொண்டார்.

இறைவரித் திணைக்கள மாவட்ட பிரதிஆணையாளர் பீ.சிவாஜி தேசிய சேமிப்பு வங்கியின் வட பிராந்திய முகாமை யாளர் வி.அருளானந்தம், பருத் திததுறை வர்த்தக சங்கத்தலைவர் எஸ்.பத்மநாதன், வர்த்தகர் பொன. இராசதுரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

விருந்தினர்கள், 63 மாணவர்களையும் பாராட்டிக் கௌரவித்து பரிசில்களை வழங்கினர். வங்கி உத்தியோகத்தர் எஸ்.ஆதவன் நன்றிதெரிவித்து உரையாற்றினார். (01)

கவலை நம் சவப்பெட்டிக்கு ஓர் ஆணி சேர்க்கிறது. கலகல வெனும் சிரிப்பு ஓர் ஆணியை கழற்றுகிறது -பீட்டர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## மக்களது துன்பத்தை அரசியலாக்குவோர்!

போர் முடிவுக்குப் பின்னர் உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்துதல் என்பது பெருமளவு சவால்களும் பிரயத்தனங்களுடனுமே இதுவரை 90 வீதத்திற்கும் அதிகமான குடியமர்வு சாதிக்கப்பட்டிருக்கிறது. இயல்பாகவே படைத்தரப்பினர் பாதுகாப்புக் காரணங்களுக்காக உயர்பாதுகாப்பு வலயத்தைத் தளர்த்த தயக்கம் காண்பித்து வருவது அனைவரும் அறிந்ததே.

ஆயினும் பெருமளவு பகுதிகளை அவர்கள் மக்கள் குடியமர்வுக்காக கைவிட்டுள்ளனர் என்பதையும் யாரும் மறுத்துரைக்க முடியாது. திரும்பவும் போருக்கான சாத்தியங்கள் இங்கு இல்லை என்பது உறுதியாகிவிடும் போது மக்கள் நிலங்கள் யாவும் அவர்கள் வசமாக வேண்டும் என்பதே அனைவரது விருப்பமுமாகும். அதற்கான முயற்சிகளைத் தொடர்ந்து செய்தபடி இருப்பது அந்த மக்கள் மீது கரிசனையுள்ளவர்களது வேலையும் கடமையுமாகும்.

முயற்சிகளைச் செய்கிறபோது தோல்விகளும் தவிர்க்க முடியாமல் வரும். எதுவும் செய்யாமலிருப்பவர்கள் எதிலும் தோல்வியுறாமலும் இருந்துவிட முடியும். எந்தக் கப்பலும் துறைமுகத்திலேயே தரித்து நின்றால் பாதுகாப்பாகவே நிற்கும். ஆனால் கப்பல் அதற்காகவா கட்டப்படுகிறது? என்று கேட்கும் ஆங்கிலப் பழமொழியும் ஒன்றுண்டு.

மக்களின் மீள்குடியமர்வுக்காக எந்த முயற்சியையும் செய்யாமல், அதை வெறும் பிரச்சார முழக்கத்திற்கே பயன்படுத்தி வருபவர்கள், அத்தகைய முயற்சிகளில் தடங்கலோ தோல்வியோ நேரும்போது அதைப் பார்த்துக் குதூகலிப்பதும் ஆரவாரிப்பதும் எந்தவகை மனோநிலை என்று புரியவில்லை.

மக்கள் கல்யாணம் காட்சிக்கென்று சிறுகச் சிறுகச் சேர்த்த பணத்தைச் சுருட்டிக்கொண்டு அந்த நிதிநிறுவனத்தையே மூடிவிட்டு ஓடியவர்கள், திரும்ப வந்து அந்தப்பணத்தில் பத்திரிகை வியாபாரமும் செய்யக் கூச்சப்படாதவர்கள்தான், மக்களின் ஊருக்குப் போகும் முயற்சியில் தடங்கல் உண்டானதிலும் அரசியல் லாபம் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொள்ள முடியும்.

ஆனால் மக்களை அவரவர் இடங்களில் மீளக்குடியமர்த்தி முடிப்பதில் உறுதியோடிருப்பவர்கள், தங்கள் முயற்சியைத் தொடர்ந்து செய்துகொண்டேயிருப்பார்கள். திருவிளையாடல் தருமி பாணியில் சொன்னால், பாட்டெழுதிப் பேர் வாங்கும் புலவர்களுக்கும் குற்றம் கண்டுபிடித்தே பேர் வாங்கும் புலவர்களுக்குமான வேறுபாடு போன்றதுதான் இது.

குற்றம் எதில்தான் கண்டுபிடிக்க முடியாது? வடமாகாணத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள், தொண்டராசிரியர்கள் என்று சுமார் ஆயிரம் பேருக்கு சமீபத்தில் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது ஒன்றும் இன்று தீர்மானித்து இன்றே கிடைத்ததல்ல. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பல மாதங்கள் வருடங்களாக எடுத்த கடும் முயற்சியின் பலனாக இப்போது கைகூடி நம் இளைஞர்களுக்குக் கிடைத்ததே அந்த வேலைவாய்ப்புகள்.

த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் வெகு அலட்சியமாக, "எல்லாம் தேர்தல் வாக்குகளுக்காக வேலை கொடுக்கிறார்கள்" என்று சொல்லிவிட்டுப் போகிறார். இருந்துவிட்டுப் போகட்டுமே! தேர்தலுக்காக என்றாலும் நம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கூடிவருவதை ஏன் மறுக்க வேண்டும்? தேர்தல் வாக்குகளுக்காக வெறுமனே உணர்ச்சிகர வீரவசனங்களை அள்ளி அள்ளிக் கொடுத்து ஏமாற்றுவதை விட அவர்கள் வாழ்வதற்கு வேண்டிய வேலையைக் கொடுப்பது எவ்வளவோ மேல் இல்லையா?

- ஆசிரியர்

# தெரிவுக்குழுவில் இணையுங்கள் கூட்டமைப்பிடம் கே.பி.கோரிக்கை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்க வேண்டும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக குழுவில் விலகியிருப்பது பொருத்த மானதல்ல என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தலில போட்டியிடுவது குறித்து எவரும் தம்மிடம் ஆலோசனை கோரவில்லை எனவும், போட்டியிடுவது குறித்து நினைத்துப் பார்க்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பதில்லை என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீர்மானம வருத்தமளிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் சகல முயற்சிகளுக்கும் ஒத்துழையாதிருப்பதனை விடுத்து, பிரச்சினைக்கு தீர்வு காணும் முனைப்புக்களில் ஈடுபட வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்று தங்களது கருத்துக்களை கூட்டமைப்பு வெளியிட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்காமையின் ஊடாக தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் செயன்முறையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாமதப்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் காலங்களில் தமிழர்களின் சகல பிரச்சினைகளுக்கும் அரசியல் ரீதியான தீர்வுத் திட்டமொன்றையே எட்ட முடியும் எனவும், வேறு வழிகளில் தீர்வுத் திட்டங்களை காண முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# தேர்தல் களத்தில் குதிப்பதா? அடுத்த வாரம் இறுதி முடிவு

## ஜனநாயக மக்கள் முன்னணி அறிவிப்பு

(கொழும்பு)

மத்திய, வடமேல், வட மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் தொடர்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி கொழுமபில் கூடும் கட்சியின் அரசியல் குழு இறுதி முடிவு எடுக்கும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பாக மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

மாகாணசபைத் தேர்தல்கள் தொடர்பாக கண்டி, நுவரெலிய, மாத்தளை, புத்தளம் மாவட்டங்களில் போட்டியிடுவது பற்றி ஐக்கிய தேசியக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி, நவ சிஹல உறுமய மற்றும் சில மலையக கட்சிகளிடமிருந்து அழைப்புகள் கிடைத்துள்ளன.

விடுக்கப்பட்ட அழைப்புகள் தொடர்பாக தற்போது ஆராயப்பட்டு வருகிறது.

வட மாகாண சபை தேர்தல் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எடுக்கவுள்ள நிலைப்பாடு தொடர்பிலும் நாம் அக்கறை கொண்டுள்ளோம். இந்த அனைத்து விடயங்கள் தொடர்பிலும் நமது அரசியல்குழு எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆராய்ந்து முடிவுகள் எடுக்கும் என்றார்.

# குவைத்தில் திருட்டு இலங்கையர் கைது

(கொழும்பு)

குவைத் - ரிக்கா பகுதியில் வைத்து தனது தொழில் தருநரின் காரில் இருந்து 6,500 குவைத்தினார் பணத்தை திருடிய இலங்கை ஆண் பணியாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த திருட்டுச் சம்பவம் குறித்து ரிக்கா பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பணத்தை வாகனத்தில் வைத்துவிட்டு ஆடை மாற்றுவதற்கு வீட்டுக்குள் சென்ற வேளை தனது பணம் திருடப்பட்டதாக தொழில் தருநர் தெரிவித்துள்ளார். கைதுசெய்யப்பட்ட இலங்கையர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# ஜனாதிபதி சட்டத்தரணிக்கு ஐம்பது கோடி இழப்பீடு

## அவதூறு வழக்கில் தீர்ப்பு

'சிலுமின' பத்திரிகையில் பிரசுரமான செய்தியொன்றினால் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷவுக்கு அபகீர்த்தி ஏற்பட்டமைக்கு 50 கோடி ரூபா இழப்பீடு செலுத்துமாறு லேக்ஹவுஸ் நிறுவனத்திற்கு வழங்கிய உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மீண்டும் உறுதி செய்துள்ளது.

ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த உத்தரவை இடைநிறுத்துமாறு லேக்ஹவுஸ் நிறுவனம் தாக்கல் செய்திருந்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.இந்த வழக்கு முன்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது லேக்ஹவுஸ் நிறுவனம் சார்பாக எந்தவொரு அதிகாரியும் நீதிமன்றில் பிரசன்னமாகாத நிலையில் நீதவான் ஒருதலைப்பட்சமாக தீர்ப்பு வழங்கியிருந்தார்.

இதனையடுத்து வழக்கு விசாரணை இடம்பெற்ற தினத்தில் தமது அதிகாரிகளால நீதிமன்றில் பிரசன்னமாக முடியாமல் போனதால் தீர்ப்பினை மீள் பரிசீலனை செய்யுமாறு லேக்ஹவுஸ் நிறுவனம் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தது.

ஆயினும் அந்த மனுவை நிராகரித்த நீதிபதி ஏற்கனவே வழங்கப்பட்டிருந்த தீர்ப்பை நேற்று மீண்டும் உறுதிசெய்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஆவதற்கான கனவுடன் விஜேதாஸ ராஜபக்ஷ வாழ்வதாக 'சிலுமின' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருந்த கட்டுரையொன்றில தமக்கு அபகீர்த்தி ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்து 50 கோடி ரூபா இழப்பீடு கோரி ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு புதிய இணையம் ஆரம்பம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழு பரிந்துரைகளை செயற்படுத்தும் விதம் குறித்த தேசிய செயற்திட்டம் அடங்கிய இணையத்தளம் ஒன்று (http://www.llrcaction.gov.lk/) திறக்கப்பட்டுள்ளது.


ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் மாலை இதற்கான நிகழ்வு இடம்பெற்றது.

இதன்மூலம் உலகத்தில் உள்ள எந்த நபருக்கும் கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை செயற்பாடு குறித்து அறிந்து கொள்ள முடியும்.

இந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டமை காலத்தில் தேவை என ஜனாதிபதி செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

**வித்துவானுக்குப் பணம் கொடுப்பவர்தான் கச்சேரியில் எதைப் பாட வேண்டுமெனத் தீர்மானிப்பார் எனக் கூறுவர். கூட்டமைப்புக்குப் புலம்பெயர் அமைப்புகளிலிருந்து நிதி கிடைக்கின்றது. கூட்டமைப்பின் உள்வீட்டுச் சண்டை சில மாதங்களுக்கு முன் சந்திக்கு வந்த போது வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் பணம் பற்றிய கணக்கு வழக்குகள் எங்கே என்ற கேள்வி எழுந்ததை நினைவு கூரலாம்.**

# புலம் பெயர் அமைப்புகளின் தாளத்துக்கு ஆடும் கூட்டமைப்பு தீர்வை ஓரங்கட்டுகின்றது



■ சங்கர சிவன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் அவர்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்த மக்களுக்காகவா? அல்லது வெளிநாடுகளில் சுகபோக வாழ்க்கை வாழும் புலம் பெயர் அமைப்புகளுக்காகவா?

ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயத்தின்போது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் 26.06.2013 புதன்கிழமை பாரிஸ் நகரத்தில் இணையத் தளமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலிருந்து இக்கேள்வி எழுகின்றது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்ன என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெளிவாக முன்வைத்துள்ளது என்றும் அவ்வாறான தீர்வை அரசாங்கம் முன்வைக்காத வரை புலம்பெயர் மக்களின் எந்தக் கோரிக்கையையும் நிராகரிக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை என்றும் அந்த நேர்காணலில் அவர் கூறியிருக்கின்றார்.

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வை முன்வைத்திருப்பதாக சுரேஷ் இப்போது கூறியது ஒரு புதிய கதை. அரசியல் தீர்வுத் திட்டமொன்றை முன்வையுங்கள் என்று அரசியல். ஆர்வலர்களும் விமர்சகர்களும் நீண்ட காலமாகக் கூட்டமைப்பைப் பார்த்துக் கேட்டு வருகின்ற போதிலும் கூட்டமைப்புத் தலைவர்களுக்கு அது செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே இருக்கின்றது. மங்கள முனசிங்கவின் சிபார்சுகள், திஸ்ஸ விதாரணவின் அறிக்கை, சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்று கூட்டமைப்புத் தலைவர்கள் கூறி வருகின்றார்களேயொழியத் தாங்களாகவே தீர்வுத் திட்டமொன்றைத் தயாரித்து வெளியிடுவதற்குத் தயாராக இல்லை. மேலே கூறிய ஆவணங்களின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வொன்றை முன்வைக்க வேண்டும் என்று ஊடக அறிக்கைகளிலும் ஊடக வியலாளர் மாநாடுகளிலும் அடிக்கடி சொல்லி வருபவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். அரசியல் தீர்வைக் கூட்டமைப்பு தெளிவாக முன்வைத்திருக்கின்றது என்று இன்று அவர் கூறுவது பல கேள்விகளை எழுப்புகின்றது.

கூட்டமைப்பு அரசியல் தீர்வுக்கான திட்டமொன்றை முன்வைத்திருப்பது பற்றித் தமிழ் மக்களுக்கு எதுவும் தெரியாது. இரகசியமாக அரசாங்கத்திடம் தீர்வை முன்வைத்திருப்பதாகக் கூறினாலும் அது நம்பகமானதாக இல்லை. அரசாங்கத்திடம் தீர்வை முன்வைத்திருப்பது உண்மையானால் மங்கள முனசிங்கவின் சிபார்சு, திஸ்ஸ விதாரணவின் அறிக்கை, சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கூறி வருவதற்கான காரணம் என்ன? இந்த ஆவணங்கள் தான் கூட்டமைப்பு முன்வைத்திருக்கும் தீர்வுத் திட்டமா? அப்படியானால் அந்த நேரத்தில் அவற்றை எதிர்த்தது ஏன்? மங்கள முனசிங்கவின் சிபார்சு, திஸ்ஸ விதாரணவின் அறிக்கை, சந்திரிகாவின் தீர்வுத் திட்டம் ஆகியவற்றில் ஏற்றுக்கொள்ள முடியாத அம்சங்கள் இருக்கின்றன என்று இத்தலைவர்கள் அன்று கூறினார்கள். ஏற்றுக்கொள்ள முடியாத அந்த அம்சங்களை இப்போது ஏற்றுக்கொள்கின்றார்களா? அதனால்தான் அந்த ஆவணங்களின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்று கூறுகின்றார்களா?

இலங்கையில் அடுத்தடுத்துப் பொய் கூறித் தமிழ் மக்களை ஏமாற்றுவது போல, வெளிநாட்டில் யாரையோ ஏமாற்றுவதற்காகத் தீர்வை முன்வைத்திருப்பதாக சுரேஷ் பொய் கூறுகின்றாரா? என்று கேட்கத் தோன்றுகின்றது.

புலம் பெயர் அமைப்புகள் பற்றிய விடயத்துக்கு அடுத்ததாக வருவோம்.

அவ்வாறான (எவ்வாறான என்பது சுரேஷுக்கே வெளிச்சம்) தீர்வை அரசாங்கம் முன்வைக்கும் வரை புலம் பெயர் மக்களின் எந்தக் கோரிக்கையையும் நிராகரிக்க வேண்டிய தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை எனக் கூறுவது குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. மேலே கூறிய மூன்று ஆவணங்களின் அடிப்படையில் அரசாங்கம் தீர்வை முன்வைக்க வேண்டும் என்கிறார்கள். அது தான் சுரேஷ் கூறும் "அவ்வாறான" தீர்வா? கூட்டமைப்பு அரசியலில் அடிக்கடி தோன்றும் பல குழப்பங்களைப் போலவே இதுவும் ஒன்று என்பதால் இதைப் பற்றி அதிகம் பேசாமல் விடுவோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலம்பெயர் அமைப்புகளின் கோரிக்கைகளையே நடைமுறைப் படுத்தி வருகின்றது என்பதை சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிந்தோ தெரியாமலோ வெளிப்படுத்திவிட்டார். அரசாங்கம் (அவ்வாறான) தீர்வை முன்வைக்கும் வரை புலம் பெயர் மக்களின் கோரிக்கைகளை நிராகரிக்க வேண்டிய தேவை இல்லை எனக் கூறுவது இப்போது அக்கோரிக்கைகளைக் கூட்டமைப்பு ஏற்று வருகின்றது என்று அர்த்தமாகின்றது.

புலிகளை வழி நடத்தும் புலம் பெயர் அமைப்புகள் இலங்கையின் சமகால யதார்த்தத்தை விளங்கிக் கொண்டவையல்ல. இலங்கையில் இனப்பிரச்சினைக்கு நடைமுறைச் சாத்தியமான தீர்வைப் பற்றி அவற்றுக்குச் சிறிதளவேனும் அக்கறை இல்லை. புலிகள் விட்டுச் சென்ற பணியைத் தொடர்வதாகக் கற்பனை செய்யும் இப்புலம் பெயர் அமைப்புகள் தனிநாட்டு இலக்குடன் செயற்படுபவை. அரசியல் தீர்வுக்குச் சாதகமான முறையில் கூட்டமைப்பு செயற்படுவதைப் புலம் பெயர் அமைப்புகள் விரும்புவதில்லை. வித்துவானுக்குப் பணம் கொடுப்பவர்தான் கச்சேரியில் எதைப் பாட வேண்டுமெனத் தீர்மானிப்பார் எனக் கூறுவர். கூட்டமைப்புக்குப் புலம்பெயர் அமைப்புகளிலிருந்து நிதி கிடைக்கின்றது. கூட்டமைப்பின் உள்வீட்டுச் சண்டை சில மாதங்களுக்கு முன் சந்திக்கு வந்த போது வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் பணம் பற்றிய கணக்கு வழக்குகள் எங்கே என்ற கேள்வி எழுந்ததை நினைவு கூரலாம். "புலம் பெயர் மக்களின் கோரிக்கையை நிராகரிக்க வேண்டியதில்லை" என்று சுரேஷ் கூறியதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ள வேண்டியது என்னவென்றால் நிதி வழங்கும் புலம் பெயர் அமைப்புகளின் கோரிக்கைகளுக்கு அமைவாகவே கூட்டமைப்பு செயற்படுகின்றது என்பதாகும்.

அரசியல் தீர்வுக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்கும் வகையில் செயற்படக் கூடாது என்று புலம் பெயர் அமைப்புகள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாகவே கூட்டமைப்பு செயற்படுவதைப் பல விடயங்களில் அவதானிக்கலாம். அரசியல் தீர்வுக்கான சந்தர்ப்பங்களை ஒவ்வொன்றாகக் கூட்டமைப்பு நொண்டிச் சாட்டுகள் சொல்லித் தட்டிக் கழித்து வருவதற்கு இதுவே காரணம்.

புலம் பெயர் அமைப்புகளின் தாளத்துக்கு ஆடிக்கொண்டிருக்காமல் பல்வேறு பிரச்சினைகளுக்கும் துன்பங்களுக்கும் மத்தியில் இங்கே வாழ்கின்ற தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்திச் செயற்படுவதற்குக் கூட்டமைப்பு முன்வர வேண்டும். வடமாகாண சபைத் தேர்தல் இதற்கு நல்ல சந்தர்ப்பம். இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமொன்றை இத்தேர்தலில் கூட்டமைப்பு முன்வைக்குமா? இன்று வரை அதற்கான அறிகுறி எதுவும் இல்லை. வலிகாமம் வடக்குக் காணிப் பிரச்சினை மாத்திரம் தேர்தலுக்குப் போதுமானது என்று கூட்டமைப்பு கருதுவது போலத் தெரிகின்றது. இந்தக் காணிப் பிரச்சினை தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் முக்கியமானது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதே அளவுக்கு இனப்பிரச்சினையும் முக்கியமானது என்பதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வலிகாமம் வடக்குக் காணிப் பிரச்சினை தொடர்பான பிரசாரத்தைக் கூட்டமைப்பு இப்போதே ஆரம்பித்துவிட்டது. கூட்டமைப்புக்குச் சொந்தமான பத்திரிகை இக்காணிப் பிரச்சினை தொடர்பாகச் சென்றவாரம் வெளியிட்ட கட்டுரை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குச் சேறு பூசுவதையே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்தது.

காணிச் சுவீகரிப்பை 1999 மார்ச் 12ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அம்பலமாக்கிய அமைச்சர் டக்ளஸ் இப்போது ஏன் அதைத் தடுக்கவில்லை என்று இப்போது தடுக்க முடியாதவர் முதலமைச்சர் ஆன பின் தடுப்பாரா என்றும் சிறுபிள்ளைத் தனமாகக் கேள்வி கேட்டிருக்கிறார் கட்டுரையாளர்.

காணி சுவீகரிப்பை 1999 மார்ச் 12ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் அம்பலப்படுத்தினார் எனக் கூறுகின்ற அதேவேளை, அப்போது கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அது பற்றி எதுவும் அறிந்திருக்கவில்லை என்பதையும் அது அவர்களின் இயலாமையை வெளிப்படுத்தியது என்பதையும் சேர்த்துச் சொல்லியிருக்கவேண்டும்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்த வரையில் பலகாரம் தான் முக்கியமேயொழிய சிலுசிலுப்பு முக்கியமல்ல. கூட்டமைப்புக் காரரைப் போல் கார்ணிவல் ஆர்ப்பாட்டங்கள் செய்வதில் அவருக்கு நாட்டமில்லை. ஆரவாரம் இல்லாமல் அரசாங்கத்துடன் பேசிக் காரியங்கள் சாதிப்பதே அவரின் நடைமுறை. காணிப் பிரச்சினை தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கின்றது. அதன் பலனாகவே இப்போது மயிலிட்டியில் வணக்கத் தலங்களுக்குப் பக்தர்கள் செல்லக் கூடிய நிலை உருவாகியது.

தனி மனிதனாகச் சாதிப்பவற்றிலும் பார்க்க மாகாண முதலமைச்சர் என்ற வகையில் கூடுதலாகச் சாதிக்க முடியும் என்பது கட்டுரையாளருக்கு விளங்கவில்லை.

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைப் பொறுத்த வரையில் பலகாரம் தான் முக்கியமேயொழிய சிலுசிலுப்பு முக்கியமல்ல. கூட்டமைப்புக் காரரைப் போல் கார்ணிவல் ஆர்ப்பாட்டங்கள் செய்வதில் அவருக்கு நாட்டமில்லை. ஆரவாரம் இல்லாமல் அரசாங்கத்துடன் பேசிக் காரியங்கள் சாதிப்பதே அவரின் நடைமுறை.**

# வலு குன்றாத 13ஆவது திருத்தம் தடையற்ற பூரண அமுலாக்கம்

## டில்லியின் விருப்பத்தை வெளிப்படுத்தினார் குர்ஷித்



(புதுடில்லி)

அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல் செய்ய வேண்டும் என்றும் அதன் வலு சிறிதளவும் குன்றாமல் பாது காக்கப்படவேண்டும் எனவும் இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் இலங்கை - இந்திய உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என இந்தியா வலியுறுத்தியுள்ளது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவை புதுடில்லியில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

வடக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவுள்ள செய்தியை பஷில் ராஜபக்ஷ குர்ஷித்திடம் தெரிவித்துள்ளார். 13ஆவது அரசியலமைப்பு சட்டமூலத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் சல்மான் குர்ஷித் இதன்போது குறிப்பிட்டுள்ளார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் 13ஆவது அரசியலமைப்பு சட்டமூலத்தை வலுவிழக்கச் செய்யும் வகையில் இலங்கை செயற்படக் கூடாது என சல்மான் குர்ஷித் வலியுறுத்தியுள்ளார். தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் இலங்கை அரசாங்கத்தினால் நியமிக் கப்பட்டுள்ள நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் அனைத்து அரசியல் கட்சிகளும் அங்கம் வகிக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

### அதிகாரத்தில் இருக்கும்போது

## மோசடி செய்த உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடத் தடை

(கொழும்பு)

வட மத்திய மற்றும் மத்திய மாகாண சபைகளின் 12 முன்னாள் உறுப் பினர்களுக்கு தேர்தலில் போட்டியிட முடியாது என தெரிவிக்கப்படுகிறது,12 முன்னாள் உறுப்பினர்களுக்கு இம்முறை தேர்தலில் போட்டியிடக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்காது என ஜனாதிபதி விசாரணைப் பிரிவு அறிவித் துள்ளது.

குறித்த உறுப்பினர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் விசா ரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

விலைமனுக்கோரல், லஞ்ச ஊழல் மோசடி, குற்றச்செயல்கள், தாக்குதல்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்செயல் களுடன் தொடர்புடைய காரணத்தினால் இவர்கள் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்பை இழந்துள்ளனர்.

## பிரதீப் காரியவசம் மீதான வழக்கு குற்றப் பத்திரிகையில் குளறுபடி

### திருத்தம் கோரி மன்றில் விவாதம்

(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் கணவன் பிரதீப் காரியவசமிற்கு எதிராக ஊழல் தடுப்பு ஆணைக்குழு தாக்கல் செய்த வழக்கு, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதீப் காரியவசம் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, தமது தரப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட முதலாவது குற்றப்பத்திரிகையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டமை சட்ட விரோதமானது என்று தெரிவித்தார்.

இதற்கு விளக்கமளிக்கப்படாமல், வழக்கு விசாரணைக்கான திகதியை தீர்மானிக்கவேண்டாம் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இதன் அடிப்படையில், எதிர்வரும் செப்டம்பர் மாதம் 6ஆம் திகதி ஆரம்ப எதிர்ப்பு வாதத்தை தாக்கல் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டார்.

த பினான்ஸ் நிறுவனத்தின் பங்குகளை கொள்வனவு செய்யும் போது, அரசாங்கத்துக்கு களங்கம் ஏற்படும் வகையிலும், சட்ட விரோதமான முறையிலும் செயற்பட்டதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

# அதிகாரங்களை அகற்றினால் அரசு ஆட்டம் காணும்

### அமைச்சர் ராஜித ஆரூடம்



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டம் ரத்து செய்யப்பட்டால் அதுவே அரசாங்கத்தின் முடிவாக அமையும் என ஆளும் கட்சியின் அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

13ஆவது திருத்தச்சட்டத்தை ரத்துச் செய்வதில் பிரச்சினை கிடையாது எனவும், அவ்வாறு ரத்துச் செய்தால் அரசாங்கம் உடனடியாக ஆட்சியை விட்டு வெளியேற நேரிடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். 13ஆவது திருத்தச்சட்டத்திற்கு எதிரானவர்களை தேசப்பற்றாளர்களாக கருத முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்கள் இனவாதிகளாகவே அடையாளப்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். இன சமூகங்களுக்கு இடையில் நிலவி வரும் புரிந்துணர்வின்மையை களைய வேண்டுமாயின் அரசியல் ரீதியான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக அதிகாரங்களை பகிர்வதே தற்போதைக்கு காணப்படும் மிகவும் சிறந்த தீர்வுத் திட்டமாக அமைந்துள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஐக்கிய இலங்கைக்குள் இந்தத் தீர்வுத் திட்டத்தை வழங்க முடியும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் செய்யக் கூடிய சாத்தியங்கள் கிடையாது என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, ஆளும் கூட்டணி கட்சிகளான ஜே.என்.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற கட்சிகள் 13ஆவது திருத்தச்சட்டத்தை ரத்துச் செய்ய வேண்டுமென வலியுறுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சுகாதார அமைச்சில் நிதி மோசடி தடுத்து நிறுத்த குழு நியமனம்

மருந்து பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கேள்வி அறிவித்தலின் போதும், சுகாதாரத் துறை சம்பந்தமான நிர்மாணப் பணிகளுக்கான கேள்வி அறிவித்தலின் போதும் மோசடிகளை தடுப்பதற்கான குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்தக் குழுவை நியமித்துள்ளார்.இதற்கு சுகாதார அமைச்சின் செயலாளர் நிஷால் ஜயதிலக தலைமை தாங்குகிறார்.

## அரச சொத்துக்களை நாசம் செய்தனரா? சிரேஷ்ட அமைச்சருக்கு எதிராக வழக்கு

சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரட்ன உள்ளிட்ட 19 பேருக்கு எதிராக சட்ட மா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளது.வரகாபொல கொஷம் பாதெனிய பிரதேசத்தில் நீர் விநியோகத்திட்டமொன்றை சேதப்படுத்தி பத்து இலட்சம் ரூபா நட்டம் ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.இந்த வழக்கு வரகாபொல நீதவான் சனத் ஜே. மொரவக்கவினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

கடுமையான எச்சரிக்கையுடன் கூடிய பிணையின் அடிப் படையில் விடுதலை செய்யப்பட்டுள்ள அமைச்சர் அதாவுத உள்ளிட்ட சந்தேக நபர்கள் வழக்கு விசாரணைகளில் நேரடியாக முன்னிலையானார்கள்.

இந்த வழக்கு எதிர்வரும் 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப் பட்டது.இதேவேளை, வரகா பொல நீதிமன்ற வளாகத்திற்குள் அமைச்சர் அதாவுத செனவிரட்ன அத்துமீறி பிரவேசித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சட்டத்தரணிகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்ட வாகனத் தரிப்பிடத்தில் அமைச்சரின் வாகனம் நிறுத்தப்பட்டதாகவும் இதனால் பொலிஸார் நெருக்கடிகளை எதிர்நோக்கியதாகவும் நீதிமன்ற வட்டாரத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அதிகாரங்கள் அகற்றப்படும் வரை வடக்கில் தேர்தல் வேண்டாம்

### தெற்கில் கிளம்புகிறது பூதம்

(கொழும்பு)

மாகாண சபைகளுக்கு தற்போது உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் முற்றாக அகற்றப்படும் வரை வடக்கில் மாகாண சபைத்தேர்தல்களை நடாத்தக்கூடாது என்று சிங்கள அடிப்படைவாதக் குழுக்கள் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

வட மாகாணசபைத் தேர்தலை ஒத்தி வைக்குமாறு தேசப்பற்றுடைய அமைப்புக்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளன. தேசப்பற்றுடைய அமைப்புக்களின் ஒன்றிணைந்த கூட்டணி இந்தக் கோரிக்கையை முன் வைத்துள்ளது.


காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் 13ஆவது திருத்தச் சட்டத்திலிருந்து நீக்கப்படும் வரையில் இவ்வாறு மாகாண சபைத் தேர்தல் ஒத்தி வைக்கப் பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பிரதான கூட்டணி கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சி, 13ஆவது திருத்தச்சட்டத்தின பிரிவினைவாத சரத்துக்களை நீக்குமாறு கோரியுள்ளதாக குறித்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டில் இன முறுகல் நிலைமைகள் ஏற்படுவதனை தடுப்பதற்காகவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டது என தெரிவித்துள்ளது. அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் செய்யாது வடமாகாணசபையில் தேர்தலை நடாத்தி ஈழத்தை அமைக்க சிலர் முயற்சிப்பதாகக் குறிப்பிட்டுள்ளது. இந்த முயற்சிகளுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ துணை போகக் கூடாது என வலியுறுத்தப்பட்டுள்ளது

## மாகாண சபைகளுக்கு வேட்பு மனு அடுத்த வாரம் வர்த்தமானி அறிவித்தல்

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு கலைக்கப்பட்டு வட மாகாண சபை ஏற்படுத்தப்பட்டுள்ளதால் இம்மூன்று மாகாண சபைகளுக்கும் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தேர்தல் நடாத்தப்படவுள்ளது. இந்நிலையில் இத்தேர்தலுக்கான வேட்பு மனு கோரும் வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரம் வெளியிடப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அத்துடன், மாகாண சபைகளை கலைப்பது குறித்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று முன்தினம் இரவு தனக்கு கிடைக்கப்பெற்றதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

# கலாசார மண்டபங்கள் ஊடாக கலைகள் வளர்க்கப்படவேண்டும்



(வடமராட்சி)

'மேலைத்தேயக் கலாசாரங்கள் எமது பாரம்பரிய கலாசாரங்களை சீர்குலைத்து வருகின்றது. நாம் எமது கலை கலாசாரங்களை பேணிப்பாதுகாக்க வேண்டும். அத்தகைய செயற்பாடுகளுக்காக கலாசார மண்டபங்களின் தேவைப்பாடுகள் உள்ளன என ஈ.பி.டி.பி வடமராட்சி பிரதேச அமைப்பாளரும், பருத்தித்துறை பிரதேசசபை எதிர்கட்சித்தலைவருமான ஐ.ஸ்ரீரங்கேஸ்வரன தெரிவித்தார்.

உடுப்பிட்டி, வல்லை வீதியிலுள்ள வாசிகசாலையடியில் கடந்த வியாழக்கிழமை கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் விழா கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில இடமபெற்றது. இந்நிகழ்வில பிரதம விருந்தினராக கலந்து கொண்டு கலாசார மண்டபத்திற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இக்கலாசார மண்டபம் அமைப்பதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் கலாசார அமைச்சு 10 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. இதன் முதற்கட்டமாக 04 மில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது. இப்பகுதியில் பொது மண்டபங்கள் கிடையாது. எனவே உடுப்பிட்டிப் பகுதியை தெரிவு செய்து இக்கலாசார மண்டபத்தை அமைக்க தீர்மானித்தோம. அதற்கமையவே இம்மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப் பட்டுள்ளது. இது எமது கலை கலாசார நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு மட்டுமல்ல ஏனைய பொது வைபவங்களையும் நடாத்த வசதியாக இப்பகுதி மக்களுக்கு பயன்படும் என தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவர் அருணாசலம் சந்திரசேகரம், உடுப்பிட்டி அபிவிருத்திச்சங்கத் தலைவர் தயானந்தா, ஈ.பி.டி.பி கரவெட்டி பிரதேச இணைப்பாளர், இ.செந்தில்நாதன் மற்றும் ஊர்ப்பெரியவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## பாராட்டு விழா

(வேலணை)

வேலணை வடக்கு சோளாவத்தை ஆத்திசூடி வித்தியாசாலையில் கடந்த வருடங்களில் அதிபராக நியமனம் பெற்று கடமை ஆற்றிய ஒன்பது பேருக்கான பாராட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் ஆத்திசூடி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேலணை மத்திய மகா வித்தியாலயத்தின் அதிபர் சி.கிருபாகரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வடமாகாணக்கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைசசின செயலாளர் சத்தியசிலன் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலச்சுந்தரம்பிள்ளை, தீவகக்கல்வி வலய பணிப்பாள்யோன் திருஞானம் குயின்ரன், வேலணை பிரதேச சபையின் தவிசாளர் சி.சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனா.

மேலும் சனசமூக நிலையங்களின சமாசத்தின் முன்னாள் தலைவர் செ.கந்தசாமி வேலணை சரஸ்வதி வித்தியாலய அதிபர் திருமதி. நந்தினி பஞ்சலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டு பாராட்டுரைகளை வழங்கவுள்ளனர். (05)

## மின் நிலையத்தில் தீ விபத்து

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் வெளியீடான காந்தீயம் பத்திரிகை யின் யூலை மாத இதழ் வெளிவந்துள்ளது.

இவ்விதழின் பிரதியொன்றை இலவசமாகப் பெற்றுக் கொள்ள விரும்புவோர் 5.ரூபா பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட,சுயமுகவரி இடப்பட்ட நீண்ட தபாலுறை ஒன்றை ஆசிரியர் காந்தீயம் ,காந்தி நிலையம் ,8ஆம் வாய்க்கால் உருத்திரபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ள முடியுமென இதழ் ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி தெரிவித்துள்ளார்.

## முள்ளி பாலங்கள் துரிதமாக புனரமைப்பு

(வரணி)

கொடிகாமம் பருத்தித்துறை பிரதான வீதியான முள்ளிப் பாலங்களின் புனரமைப்பு தற்போது துரிதமாக வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இவ்வீதிப் பாலங்கள் மிகவும் மோசமான நிலையில் புனரமைப்பு இன்றிய நிலையில் பிரயாணிகள்,மற்றும் வாகனங்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் சென்று வந்தமை ஊடகங்களில் பலமுறை சுட்டிக்காட்டப்பட்டது. தற்போது மூன்று பாலங்கள் புனரமைப்பு பணி நடைபெறுகின்றன. 1-2ஆம் பாலங்கள் வேலைகள் பூர்த்தியான நிலையில் 3ஆவது பாலவேலை நடைபெறுவதால் முள்ளிப்பாலங்கள் மீண்டும் உயிா பெற்றுள்ளதாக பிரயாணிகள் தெரிவிக்கின்றனர். (150)

## குற்றச்செயல்களில் ஈடுபட்ட இருவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 28ஆம் திகதி 3இலட்சத்திற்கும் கூடுதலான பெறுமதியான பொருட்களை திருடிய சந்தேக நபர்கள் இருவரும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 27,23 வயதுடைய இவர்கள் யாழ். திருநகரைச்சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2 இலட்சம் ரூபா காசோலை கொடுத்து பணமோசடி செய்தார் என்ற குற்றத்தின் பேரில் யாழ்.வீதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதே வேளை 1இலட்சத்து 36ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் களவாடினாா. என்ற சந்தேகத்தின் பேரில் சாவகச்சேரி பொலிஸாரினால நாவற்குழி யைச் சேர்ந்த 26 வயதுடையவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டு எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர் நேற்று முன்தினம் யாழ்.பொலிஸ் தலைமை யகத்தில் இடம்பெற்ற பொலிஸாரின் வாராந்த செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (இ)

## மாணவர்களுக்கு பேரீச்சம்பழம்

(அச்சுவேலி)

பாடசாலை மாணவர்களின் போசாக்குத்திறனை விருத்தியடையச்செய்யும் நோக்கில் மாணவர்களுக்கான பேரீச்சம்பழம் வழங்கும் திட்டம் குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இத்திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கல்விக் கோட்ட பாடசாலை மாணவர்களுக்கு பேரீச்சம்பழம் வழங்கும் நடவடிக்கைகள் இவ்வாரம் முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இம்முறை கடந்த காலங்களைப் போல் அல்லாது மாணவர் ஒருவருக்கு தலா ஒரு கிலோகிராம் என்ற விகிதத்தில் இப்பேரீச்சம்பழ விநியோகம் இடம்பெற்று வருகின்றது. (03)

## முரசின் இன்றைய பலன்



(07.07.2013 -ஞாயிற்றுக்கிழமை)

விஜய வருஷம் ஆனி மாதம் 23 ஆம் திகதி.அமாவாசைவிரதம்

மரணயோகம் மிருகசீரிடம் நட்சத்திரம் காலை 06.24 வரை. சதுர்த்தி-மு.ப 11.03வரை

இராகுகாலம 04.28-05.58வரை. சுபநேரம் 08.58-10.28 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**

எதிர்பாராத பயணமுயற்சி.சகோதரர் ஆதரவு, விவாகத்தால் உத்தியோகத்தை கைவிடும் தீர்மானம், கடனை அடைக்க நண்பரின் கருணை, குழந்தைப்பேறு, சம்சாரம்,மின்சாரத்தால் தொல்லை,வைத்தியச்செலவு, விவாகப்பேச்சு,தர்க்கத்தால் பகைமை,சரியாகக் கணக்கிடாமையினால் பணஇழப்பு, காவல்துறையின் எச்சரிக்கை.

**ரிஷபம்**

நீண்டநாள் பகை மறைதல்,சுபகாரியம்,பயணம் பச்சைக்கொடி காட்டல்,சத்திரசிகிச்சைக்கு நாட்குறித்தல், இழுபட்ட விவாகப்பேச்சு நன்மைதரல், விருந்துபசாரம், பிதாவழிச் சொத்து கிடைத்தல்,தாயாரின் தேகநலவிருத்தி, காதல் அரும்புதல்,வங்கிக்கடன் பெறல்,உறவுகளால் மகிழ்வு, சீட்டினால் பணவரவு,கௌரவிப்பும் பாராட்டும்பெறல், வாகனயோகம்.

**மிதுனம்**

மக்கள் பற்றிய கவலையின்மை,பயணத்திற்கான ஆரம்பம்,பிரிவுத்துயர்,நோயினால் விரக்திநிலை,சகோதரர் மத்தியில் நிலவியவேற்றுமை அகலல்,தொலைந்தது கிடைத்தல்,விபத்தினால் பாதிப்பு,அதிர்ச்சிச்செய்தியின் தீண்டுதல்,எதிரியுடன் சமரசம்,சொத்துப்பற்றிய பிரச்சினை சுமுகமாகத்தீர்வு,பணவரவு.

**கடகம்**

மாதாவின் தேகசுகக்கேடு, ஆவணங்கள் தொலைதல் பற்றிய எச்சரிக்கை,கடன்காரர் நச்சரிப்பினால் கவலை, பயணம் பற்றிய முடிவின்மை,குடும்பத்தில் சிறு பூசல், மின்சாரவிநியோகப்பாதிப்பால் வியாபாரமந்தம் ,சீனிச்சத்து கூடிய நிலையில் தேகநலப்பாதிப்பு, புள்ளிக்குறைவினால் உத்தியோகம் எட்டாமை.

**சிம்மம்**

குருமாற்றம் நன்மைப்பலன், ஒய்வூதியக்கடிதம், சத்திரசிகிச்சை,நோய்குணமாக்கல், வெயியூர்பயணம், கடமையில் பாராட்டு,தகவல் மறைத்து விவாகஞ்செய்யும் முயற்சி, நட்டம் குறைதல், சகதொழிலாளர் ஒத்துழைப்பு, புதிய ஒப்பந்தங்கள் கைச்சார்த்திடல்,காதல் கைகூடல், வெளியூரில் கல்விகற்க யோசனை,சுவீப்பில் சிறு தொகை எட்டல்.

**கன்னி**

ஏழரைச்சனி கடைக்கூறு,செயல்கள் வெற்றியைத்தரல், திடீர் இடமாற்றச் செய்தி,இடப்பக்க உறுப்பு சிறுவிபத்தினால் பாதிப்பு,வெளிநாட்டுயோகத்திற்கு மக்கள் அழைப்பு, பிரிந்திருந்த உறவு மீண்டும் ஏற்படல்,வங்கிக்கடன் இழுபடல்,குடும்பத்தில் அமைதி.

**துலாம்**

பயணம் வெற்றியில் முடிதல்,பிதாவின் உதவி,மூத்த சகோதரத்தால் வசந்தம்,பதவி முன்னேற்றம், இழுபட்ட திருமணம் நிறைவேறல்,கடன்தொல்லை நீக்கம், வங்கித்தொடர்பில் முன்னேற்றம்,தலைமறைவானவர் சந்திப்பு,மக்கள் பற்றிய சுபசெய்தி,வாகனயோகம்,சுவீப்பில் யோகம்.

**விருச்சிகம்**

ஏழரைச்சனி,செயலில் நிதானம் தேவை,உடையதை எவருக்கும் விளம்பவேண்டாம்,நடத்தையில் சந்தேகம், நட்டத்திற்கு விற்பனை,கால்நடைநோய்பற்றிய கவலை, திடீரென உறவினர் வருகை,இடைத்தங்கல் நாட்டினைக் கைவிடல்,கலைத்துறையில் கௌரவிப்பு,ஞாபகமறதியால் இழப்பு,திருமணப்பேச்சு,நோய் நீக்கம்.

**தனுசு**

தனம்,பொருள்சேரல்,மனைகோலும் திட்டம், சளிநோய் குணமடைதல்,தம்பதியர் மத்தியில் நிலவிய வேற்றுமை அகலல், பயணம் பற்றிய சுபசெய்தி,பதவி ஏற்றத்திற்கு கடிதம்,வங்கிக்கடனுக்கு சம்மதம், காதல் உறவில் திருப்தி,மக்களால் மகிழ்வு, குழந்தைப்பிரசவம், பூப்படைதல்,சுவீப்பில் பணம்.

**மகரம்**

வேலைச்சுமை,நோய் பற்றிய கவலை,மின்பொருட்கள் திருத்தம்,அதிகரித்த செலவு,வங்கிக்கடன் இழுபடல், விவாகச்சுணக்கம் பற்றிய ஏக்கம்,செய்யாத செயலுக்கு வீண்பழி,எதிர்பாராத சத்திரசிகிச்சை, நம்பியவர் கைவிடல், பயணம் இடைத்தங்கலில் சேர்த்தல், சுவீப்பில் பணவரவு.


**கும்பம்**


வெளியூர் நிதி கிடைத்தல்,பதவிக்கும் சம்பள ஏற்றத்திற்கும் இனிப்பான செய்தி,தேடி அலைந்தவரின் முகவரி கிட்டல்,வழக்கில் சமரசம்,புதிய ஜீவன் வருதல், நோய் பற்றிய பயம் நீங்கல், அயல்நாட்டு வேலை வாய்ப்பு, அந்நிய தேசத்தில் திருமணப் பேச்சு. வாகனயோகம், பிதாவின் உதவி.

**மீனம்**

சுபகாரியச்செலவு,கிரகதோஷ நிவர்த்திக்கு ஆலய தரிசனம்,பயணம் பற்றிய சுபசெய்தி,ஓய்வுபெறும் எண்ணம், மக்கள் மனைவி உறவில் திருப்தி,கடன்காரரைச் சமாளித்தல், வாகனயோகம், வெளிநாட்டு உறவினர் வருகை,கௌரவிக்கப்படல்,சுவீப்பில் சிறுதொகை கிடைத்தல்.

# முர்ரே, ஜோகோவிச் இன்று பலப்பரீட்சை





(லண்டன்)

விம்பிள்டன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒன்றையர் பிரிவின் இறுதிப் போட்டிக்கு உலகின் முதல் நிலை வீரர் ஜோகோவிச் மற்றும் பிரித்தானியாவின் ஆன்டி முர்ரே ஆகியோர் இன்று பலப்பரீட்சை நடத்தவுள்ளனர்.

விம்பிள்டன் ரென்னிஸ் போட்டி லண்டன் நகரில் நடைபெற்று வருகின்றது.. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதலாவது அரையிறுதியில் முதல்நிலை வீரர் சேர்பியாவின் ஜோகோவிச்சும், 8ஆம் நிலை வீரர் ஆர்ஜென்ரீனாவின் ஜுவான் மார்ட்டின் டெல் போட்ரோவும் பலப்பரீட்சை நடத்தினர்.

இருவரும் சரிசம பலத்துடன் சளைக்காமல் மல்லுகட்டியதால், ஆரம்பத்தில் இருந்தே ஆட்டத்தில் சூடுபிடித்தது. இருவரும் மாறி மாறி செட்டுகளை கைப்பற்றியதால், ஆட்டம் 5ஆவது செட்டுக்கு நகர்ந்தது. இறுதி செட்டில் ஜோகோவிச்சின் கை ஓங்கியதுடன், அவருக்கே வெற்றிமாலையும் விழுந்தது. 4 மணி 43 நிமிடங்கள் நீடித்த த்ரிலிங்கான இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 7-5, 4-6, 7-6 (7-2), 6-7 (6-8), 6-3 என்ற செட் கணக்கில் டெல் போட்ரோவை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

தொடர்ந்து நடைபெற்ற மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில் பிரித்தானிய வீரர் ஆனடி முர்ரே, போலந்து நாட்டு வீரரான ஜெர்சி ஜனோவிக்கை 6-7(2-7),6-4,6-4,6-3 என்ற செட்களில் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இன்று நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் ஆன்டி முர்ரே, ஜோகோவிக்கை எதிர்கொள்கின்றார். இதில் அவர் வெற்றி பெற்றால், 77 வருட காத்திருப்புக்குப் பின் விம்பிள்டனில் ஆண்கள் ஒற்றையர் போட்டியில் வெல்லும் பிரிட்டிஷ் வீரர் என்ற பெருமையைத் தட்டிச் செல்வார்.



# தற்காலிக ஓய்வு

(வெலிங்டன்)

நியூசிலாந்து அணியின் சுழற்பந்து வீச்சாளர் விட்டோரி தற்காலிய ஓய்வை அறிவித்துள்ளார்.

நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் சுழற்பந்து வீச்சாளர் வெட்டோரி (வயது-34) கணுக்கால் காயத்தால் அவதிப்பட்டார். சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் தொடர் முடிந்ததும் காயத்துக்கு அவர் அறுவை சிகிச்சை செய்து கொண்டார்.

இந்த நிலையில் வரும் சீசனுக்கான நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் புதிய ஒப்பந்தத்தை ஏற்க வெட்டோரி திடீரென மறுத்து விட்டார். அது ஏன் என்பது குறித்து நிருபர்களிடம் விளக்கி கூறினார்.

காயத்தில் இருந்து முழுமையாக குணமடைந்து மறுபடியும் எப்போது கிரிக்கெட் விளையாடுவேன் என்பதை என்னால் இப்போது உறுதியாக கூற முடியாது. இத்தகைய சூழலில் ஒப்பந்த்த்தை நான் ஏற்றுக் கொண்டால், அது தவறானதாக அமைந்து விடும். காயத்தில் இருந்து சீராக, அடுத்த 6 மாத காலத்திற்கு எந்தவித கிரிக்கெட் போட்டியிலும் விளையாடாமல் ஓய்வு எடுக்க முடிவு செய்துள்ளேன். இந்த காலக்கட்டத்தில் முழு உடல்தகுதியை எட்டுவதில் கவனம் செலுத்துவேன். அதன் பிறகு தான் எனது எதிர்கால கிரிக்கெட் குறித்து முடிவு செய்ய முடியும். கோடை கால சீசனில் மீண்டும் கிரிக்கெட் களத்திற்கு திரும்புவதே எனது இலக்காகும் என்றார்.

விட்டோரியின் தற்காலிக ஓய்வு அணிக்கு பலவீனமாக அமைந்தாலும் அதனை ஈடுசெய்யம் இளம் வீரர்கள் அணியில் உள்வாங்கப்பட்டிருக்கிறனர். இவர்கள் விட்டோரியின் இழப்பை ஈடு செய்யும் வகையில் ஆட முயற்சிப் பார்கள் என்று நம்புகின்றோம் என நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் தெரிவுக் குழு உறுப்பினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மிக்கி ஆத்தர் நீக்கம் தவிர்க்க முடியாததொன்று

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து மிக்கி ஆத்தர் நீக்கப்பட்டமை தவிர்க்க முடியாத ஒன்றென டொம் மூடி தெரிவித்துள்ளார்.

மிக்கி ஆத்தர் பதவி நீக்கப்படுவதற்கு முன்னர் வீரர்களுக்கும், பயிற்றுவிப்பாளருக்கும் இடையிலான மரியாதை இழக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியாவுடனான டெஸ்ட் தொடரில் விளையாடிய நான்கு அவுஸ்ரேலிய வீரர்களை ஒழுக்காற்று நடவடிக்கையின் பேரில் நாட்டிற்கு திரும்பி அனுப்பியதில் இருந்து இந்த நிலைமை ஏற்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

தற்போதைய பயிற்றுவிப்பாளர் டரன் லீமனுடன், 1999 ஆம் ஆண்டு உலக கிண்ணத்தை வென்றெடுத்த அவுஸ்ரேலிய அணியில் டொம் மூடி விளையாடியிருந்தார்.

டரன் லீமன் நியமிக்கப்பட்டுள்ளமை விளையாட்டின் மகிழ்ச்சியை அவுஸ்ரேலிய அணிக்கு ஏற்படுத்தும் என வும், அச்சமற்ற கிரிக்கெட்டை மீண்டும் உருவாக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரின் போது நிலையான ஓர் அணியாக அவுஸ்ரேலியா இருக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆஷஸ் தொடரில் அவுஸ்ரேலிய அணி முழுமையான பலத்தை வெளிப்படுத்தும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இங்கிலாந்து அணியும், அதன் ஊடகங்களும் ஆஸி அணியை பலவீனமான அணி எனக் கருதினால் அது அவர்களுக்கு பெரும் இழப்பாக அமைந்துவிடும். ஆஷஸ் தொடர் இரு அணிகளுக்கும் பெரும் சவால் மிக்கதாகவே அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# முரளி விஜய் நீக்கம்

## கப்டனாக நீடிக்கிறார் ஹோலி

(மும்பை)

சிம்பாப்வே அணிக்கெதிரான ஒரு நாள் தொடரிலிருந்து தமிழக வீரர் முரளி விஜய் நீக்கப்பட்டுள்ளார்.


இந்திய கிரிக்கெட் அணி இம்மாத இறுதியில் சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இம்மாதம் 24ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் 3ஆம் திகதியுடன் இப்போட்டிகள் நிறைவடைகின்றன.

இத்தொடருக்கான இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இந்த தொடரிலும் ஹோலி கப்டனாக நீடிக்கிறார். தற்போது நடைபெற்று வரும் முத்தரப்பு போட்டியின்போது டோனி காயம் அடைந்தார். இதனால் எஞ்சிய அனைத்து போட்டிகளில் இருந்தும் அவர் விலகினார். காயம் குணமடையாத நிலையில் சிம்பாப்வே தொடரிலும் அவருக்கு ஓய்வு அளிக்கப்பட்டிருக்கிறது.

தற்போது முத்தரப்பு தொடரில் விளையாடி வரும் ரகானே, அம்பாதி ராயுடு ஆகியோர் மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இசாந்த் சர்மா, அஸ்வின், உமேஷ் யாதேவ், புவனேஸ்வர் குமார் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் போட்டியில் விளையாடிய முரளி விஜய்க்கும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கம்பீரின் பெயரும் பரிசீலிக்கப்படவில்லை.

ஜம்மு காஷ்மீரைச் சேர்ந்த பர்வேஸ் ரசூல், அரியானாவைச் சேர்ந்த மோகித் சர்மா ஆகியோர் இந்திய அணி யில் இடம்பிடித்துள்ளனர்.

அணி விபரம்: ஹோலி, தவான், ரோகித் சர்மா, ரெய்னா, புஜாரா, தினேஷ் கார்த்திக், அம்பாதி ராயுடு, ரகானே, ரவீந்திர ஜடேஜா, அமித் மிஸ்ரா, பர்வேஸ் ரசூல், முகமது ஷமி அகமது, வினய் குமார், உனாத்கட், மோகித் சர்மா.



# என்னால் முடியும்

(லண்டன்)

ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் விளையாட உடற்தகுதி பெற முடியும் என இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரூவோட் புரோட் தெரிவித்துள்ளார்.

எசக்ஸ் பிராந்திய அணிக்கெதிரான பயிற்சிப் போட்டியில் விளையாடியஇங்கிலாந்து அணியில் இருந்து உபாதை காரணமாக புரோட் நீக்கப்பட்டிருந்தார்.

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் களத்தடுப்பில் ஈட்டுபட்டிருந்த போதே அவர் உபாதைக்கு உள்ளாகியிருந்தார்.

ஆஷஸ் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி இங்கிலாந்தின் ரெண்ட் பிறிஸ்சில் ஆரம்பமாகவுள்ளது.


# ஹோலி சதம்; வென்றது இந்தியா

ஹோலியின் அதிரடிச் சதத்துடன் மேற்கிந்தியத்தீவு அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் இந்திய அணி அபார வெற்றிபெற்றது. மேற்கிந்தியத்தீவில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒரு நாள் தொடரின் லீக் ஆட்டமொன்று நேற்று முன்தினம் போர்ட் ஓப் ஸ்பெயினில் நடைபெற்றது. இதில் இந்திய, மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் மோதின.நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் களத்தடுப்பைத்தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய இந்திய அணிக்கு ரோகித் சர்மா, தாவன் ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக் கொடுத்தனர். 123 ஓட்டங்களைப் பெற்ற வேளை இந்த ஜோடி பிரிக்கப்பட்டது. தொடர்ந்து களமிறங்கிய கப்டன் ஹோலி நிதானமாகவும், அதிரடியாகவும் ஆடிய அதேவேளை மறுமுனையில் சீரான இடைவெளியில் விக்கெட்டுக்கள் சரிந்தவண்ணமிருந்தது. இந்நிலையில் ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த அஸ்வின் ஹோலிக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் ஆடினார். இந்த ஜோடி 90 ஓட்டங்களைப் பெற்ற வேளை இறுதிப் பந்தில் பிரிக்கப்பட்டது. இறுதியில் இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 311 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஹோலி 83 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், 13 பவுண்டரிகள் அடங்கலாக 102 ஓட்டங்களைப் பெற்றார். ஒரு நாள் போட்டியில் ஹோலி பெற்றுக்கொண்ட 14ஆவது சதமாக இது அமைந்தது. மற்றும் தாவன் 69, ரோகித் சர்மா 46, அஸ்வின் ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெஸ்ட் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.பதிலுக்கு 312 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணி ஆரம்பம் முதலே விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. இந்நிலையில் மழை குறுக்கிட்டால் ஆட்டத்தில் தாமதம் ஏற்பட்டது. 10 ஓவரில் 2 விக்கெட்டுக்கு 56 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது. பின்னர் போட்டி 39 ஓவராக குறைக்கப்பட்டு, மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு 274 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இந்திய அணியின் பந்து வீச்சு ஈடுகொடுக்க முடியாமல் திணறிய மேற்கிந்தியத்தீவுகள் அணி 34 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் சார்லஸ் 45, ரோச் 34, சுனில் நரைன் 21 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய முன்னணி வீரர்கள் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்த வீச்சில் புவனேஸ்வர் குமார், உமேஷ் யாதேவ் தலா மூன்று, இசாந் சர்மா, ஜடேஜா தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஹோலி தெரிவானார். இந்த வெற்றியால், இந்திய அணிக்கு மேலதிக புள்ளிகள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வதிரி டயமன்ஸ் வசம் கிண்ணம்

விளையாட்டுச் செய்திகள்



(கரணவாய்)

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரில் வதிரி டயமன்ஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட கால்ப்பந்து அணிகளுக்கிடையில் நடாத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் முன்னணி அணிகள் உட்பட பல அணிகள் பங்குகொண்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு மின்னொளியில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியும், வதிரி டயமன்ஸ் அணியும் மோதின. இறுதிப்போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணியினை எதிர்த்து வதிரி டைமன்ஸ் அணி மோதியது.

இரு அணிகளுமே யாழ். மாவட்டத்தில் முன்னணி அணிகள் என்பதால் இப்போட்டி இறுதி வரை பரபரப்பாக இருக்கும் என இரசிகர்களால் எதிர்பார்க்கப்பட்டது. இரசிகர்கள் எதிர்பார்த்தது போன்று இரு அணிகளும் பந்தை மாறி மாறி தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தன. பின்னர் டயமன்ஸ் அணி ஆட்டம் வேகமுற்றது. இதன் காரணமாக டயமன்ஸ் அணியின் மேல்நிலை வீரர் பிறேம்குமார் அதிடியாக முதலாவது கோலினைப் பெற்றுக் கொடுத்து அணியைப் முன்னிலைப்படுத்தினார்.

இந்த ஆர்ப்பரிப்பு நீண்ட நேரம் நிலைக்கவில்லை. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஞானமுருகன் அணிக்கு தண்டனை உதை வாய்ப்பு கிடைத்தது.அந்த வாய்ப்பினை சரியாகப் பயன்படுத்திய ஞானமுருகன் அணி கோலாக்கியது. முதல் பாதியாட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையிலிருந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் அணி மேலதிக கோல் அடிக்கும் முயற்சியில் ஈடுபட அவ்வணி வீரர் பிறேம்குமார் மேலும் ஒரு கோல் போட்டு அவ் முயற்சியினை பயனுள்ளதாக்கினார்.

ஞானமுருகன் அணி தாக்குதல் ஆட்டத்தினை மேற்கொண்டு இறுதி நிமிடங்களில் கோலடிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. அதற்கு ஏற்றாற்போல் அவ்வணி வீரர் ஜஸ்ரின் ஒரு கோல் பெற்று ஆட்டத்தில் விறுவிறுப்பை ஏற்படுத்தினார்.

போட்டியின் நேரம் முடிவுக்கு வரும்போது இரு அணிகளும் தலா 2 கோல்கள் பெற்றிருந்தன.

இதன் காரணமாக தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில். வதிரி டயமன்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

இச்சுற்றுப்போட்டியின் ஆட்டநாயகனாக வதிரி டைமன்ஸ் அணியின் பிறேம்குமார், தொடர் ஆட்டநாயகனாக ஞானமுருகன் அணியின் ஜெகன், சிறந்த கோல் காப்பாளராக டயமன்ஸ் அணியின் மதன்ராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதனைவிட சிறந்த நன்னடத்தை வீரராக ஊரெழு றோயல் அணியின் கஜகோபன், மூத்த வீரராக அதே அணியின் தர்மகுலநாதன் (வெள்ளை), சுற்றுப்போட்டியின் சிறந்த அணியாக இளவாலை ஹென்றிஸ் அணியும் பெற்றுக் கொண்டன.

அராலி ஜேம்ஸ் வீ.க.வின் மாபெரும் கால்பந்து

## கிண்ணம் வென்றது தெல்லிப்பளை நாமகள்

(அராலி)

அராலி தெற்கு ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்திய மாபெரும் கால்பந்தாட்டத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை தெல்லிப்பளை நாமகள் அணி கைப்பற்றிக்கொண்டது.

அராலி தெற்கு ஜோம்ஸ் விளையாட்டுக்கழக வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்பட்ட மாபெரும் கால் பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி கடந்த வாரம் அராலி தெற்கு ஜேம்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடாத்தப்பட்ட இப்போட்டித்தொடரில் வலிகாமத்திற்குட்பட்ட ஏராளமான அணிகள் பங்குகொண்டன. இருப்பினும் இதன் இறுதிப் போட்டிக்கு தெல்லிப்பளை நாமகள் அணியும், றொட்ரேஸ்சர் அணியும் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கு ஒன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடி இரசிகர்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்தனர். இந்நிலையில் ஆட்டம் நிறைவடைந்தவேளை இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றுக் கொண்டு சமநிலையில் இருந்தன. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் தெல்லிப்பளை நாமகள் அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் பாரதி அணியும், சென். பீற்றர் அணியும் மோதின. இதில் பாரதி அணி 1-0 என்ற கோல் கணக்கில்வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

இப்போட்டி நிகழ்வில் அராலி விளையாட்டுக்கழக உறுப்பினர்கள், தலைவர், செயலாளர்கள், கிராமப் பெரியோர், கால்பந்தாட்ட இரசிகர்கள், விளையாட்டு நலன்விரும்பிகள் எனப்பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகழித்தமை குறிப்பிடத்தக்கது.

## 25ஆவது தேசிய இளைஞர் சேவை விளையாட்டு விழா பொலன்னறுவையில் ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(கொழும்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 25ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா எதிர்வரும் 25ஆம் திகதி முதல் 28ஆம் திகதி வரை பொலன்னறுவை பொது விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விளையாட்டு விழாவையொட்டிய ஆண்கள், பெண்களுக்கான சைக்கிளோட்டம், நடைப்போட்டிகள் எதிர்வரும் 12 மற்றும் 13ஆம் திகதிகளிலும், மரதன் போட்டிகள் எதிர்வரும் 12, 13 மற்றும் 14ஆம் திகதிகளிலும் பொலன்னறுவை நகரத்தை அண்டிய பிரதேசங்களில் நடைபெறவுள்ளன.

25ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா இம்முறை முதன் முறையாக நாட் டின் தலைநகருக்கு வெளியே ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன், இவ்விளையாட்டு விழாவில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலுமிருந்தும் பெருந்தொகையான இளைஞர், யுவதிகள் பங்கு பற்றவிருப்பதாகவும், இவ்விளையாட்டு விழாவினை மிகவும் விமர்சையாக நடாத்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான சட்டத்தரணி லலித் பியூம்பெரேரா தெரிவித்தார்.

## விரைவில் இரண்டாவது சுற்று

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு இரண்டின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் இரண்டாவது சுற்று ஆட்டங்கள்' விரைவில் நடைபெறவுள்ளதாகவும், இதற்கான நிரலிடம் இடம்பெற்று வருவதாகவும் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹொக்கியில் அசத்திய யாழ். மாவட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட மாகாண மட்ட ஹொக்கிப் போட்டியில் யாழ். மாவட்டம் இரு பிரிவுகளிலும் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வரும் மாகாண மட்ட ஹொக்கிப் போட்டி கடந்த சனிக்கிழமை சென்.ஜோண்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆண், பெண் அணிகள் பங்குகொண்டன.

ஆண்களுக்கான இறுதிப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணியினை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட வீரர் ஏ.ஜெயரூபன் ஒரு கோல் பெற்று அணியினை முன்னிலைப்படுத்தினார்.

தொடர்ந்து இரண்டாவது பாதியாட்டத்தில் ஜெயரூபன் மேலும் ஒரு கோல் பெற்று அணியின் வெற்றியினை உறுதி செய்தார். இறுதியில் யாழ்ப்பாண மாவட்ட அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது. இதே வேளை, பெண்களுக்கான இறுதிப்போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணியினை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட அணி ஒரு கோல் பெற்று 1:0 என்று முன்னிலையில் இருந்தது. இறுதியில் யாழ்ப்பாண மாவட்ட அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.(93)

## ஆண்டு நிறைவு கால்பந்து திருநெல்வேலி ஒலிம்பிக் சம்பியன்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் திருநெல்வேலி ஒலிம்பிக் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

கிராம மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட அணிகள் பங்கு கொண்ட இக்கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி அண்மையில் திருநெல்வேலி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது. பத்திற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்ட தொடரின் இறுதிப் போட்டியில் கலாஜோதி அணியும், திருநெல்வேலி ஒலிம்பிக் அணியும் மோதின. ஆரம்பம் முதலே இரு அணிகளும் கோல் போடும் முயற்சியில் மூர்க்கத்துடன் மோதிக் கொண்டன. இரு அணிகளும் ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காது பந்தை பரிமாறிக்கொண்டன. இறுதியில் ஆட்டம் நிறைவுற்ற வேலை 1-1 என்ற கணக்கில் போட்டி சமநிலையில் இருந்தது. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் திருநெல்வேலி ஒலிம்பிக் அணி 3-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (120)



# பாட்டும் நானே பாவமும் நானே!

- உஷா. வை -

**உ**ணர்ச்சிப் பொங்கலாலும், தன்னம்பிக்கையாலும், தனக்குரிய பாணியாலும் பாடி ரசிகர்களைக் கவர்ந்தவர் T.M.சௌந்தரராஜன். பின் நாட்களில் சிவாஜிக்கு வேறு பலரும் பாடியிருந்தாலும், TMS - சிவாஜி ஜோடிப் பாடல்களிலிருந்த பொருத்தம் அவற்றிலெல்லாம் இருக்க வில்லை. எங்கே நிம்மதி, போனால் போகட்டும் போடா, நான் உன்னை அழைக்க வில்லை, கல்லெல்லாம் மாணிக்க கல்லாகுமா, பாலூட்டி வளர்த்த கிளி, இரண்டு மனம் வேண்டும் இவற்றையெல்லாம் இன்னொரு குரலில் கற்பனை செய்யவும் முடியுமா என்ன? M.S.விஸ்வநாதன் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் இந்தப் பொருத்தம் பற்றி சொன்னார்: ஒருநாள் M.S.V யின் மகன் சிறுவனாயிருக்கை யில் பட்டினத்தார் படத்தை தொலைக்காட்சியில் பார்க்கையில் சொன்னாராம்: "டி.எம்.எஸ்-க்கு சிவாஜி பாடுறாரப்பா" என்று.

TMS ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாய்ப் பாடுவார். வார்த்தைகளை உச்சரிக்கும் விதத்தையும் குரலின் பாவத்தையும் மாற்றி யாருக்காகப் பாடுகி றரோ அந்த நடிகர் இதற்கு எப்படி பாவம் காட்டி நடித்திருப்பார் என்பதை காண்பித்துவிடுவார். பாட்டைத் தனியே கேட்டுவிட்டு, பாடல் காட்சியைப் பாட்டுடன் கேட்கையில், ஏற்கனவே படமாக்கிய காட்சிக்கு இவர் குரல் கொடுத்தாரா அல்லது இவர் பாடியபின் அதற்கு அந்த நடிகர் நடித்தாரா என்று யோசிக்க வைக்கும் அளவுக்கு குரலும் உணர்ச்சிகாட்டி காட்சியில் நடித்திருக்கும். தான் பாடும் ஒவ்வொரு நடிகருக்கும் அவர்களது நடிப்புப் பாணியிலேயே பாடி அந்த நடிகரின் முத்திரையை பாடலுக்குக் கொடுத்துவிடும் திறமைசாலி. "வரவு எட்டணா செலவு பத்தணா" என்ற பாடலில் பாலையாவுக்கும் நாகேஷுக்கும் இவரேதான் குரல். ஆனால் வரிகளிலுள்ள பாவ வித்தியாசத்தைப் புரிந்துகொண்டு பாலையாவின் நக்கலையும் நாகேஷ் அதற்குக் குத்தலாய் கொடுக்கும் பதிலடிகளையும் வித்தியாசம் காட்டிப் பாடியிருப்பார்.

சிவாஜி பாடல்களில் கம்பீரம், flamboyance என்றால் எம்ஜியார் பாடல்களில் கொஞ்சம் வீரம், கொஞ்சம் துள்ளல், நிறைய ரொமான்ஸ், (நான் ஆணையிட்டால், துள்ளுவதோ இளமை, தொட்டால் பூ மலரும், மெல்லப்போ மெல்லப்போ மெல்லிடையாளே) ஜெயசங்கர் பாடல்களில் கனிவும், மென்மை யும் (நான் மலரோடு தனியாக, அன்புள்ள மான்விழியே). இப்படி என்று எதைச் சொல்வது எதை விடுவது? ஒவ்வொன்றும் முத்துக்கள் என்று சொல்கையிலேயே இவரது "முத்துக்களோ கண் கள்" நினைவுக்கு வருகிறது.

சோகப் பாடல்கள் என்றாலோ கேட்கவே வேண்டாம். நெஞ்சைப் பிழிந்துவிடுவார். எனக்குத் தெரிந்து விரக்தியின் எல்லையில் ஒருதரமாவது "போனால் போகட்டும் போடா" என்று சொல்லாதவர்கள் இல்லை. கண்ணதாசனின் அமரத்துவம் பெற்ற பாடல்வரிகளுக்கு ஜீவன் கொடுத்த குரல் அது. கண்ணதாசனுக்கே கூட இரண்டு பாடல்கள் பாடியிருக் கிறாரே: "ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு", "பரமசிவன் கழுத்திலிருந்து பாம்பு கேட்டது, கருடா சௌக்கியமா?"

நாடகத்தனம் கூடிய மிகைப்படுத்தப்பட்ட நடிப்பிலிருந்து விலகி சினிமா இன்றைய சாதாரண மனிதர்களின் யதார்த்த வாழ்வை நோக்கி நகர்ந்துவிட்ட நிலையில் வாழ்வை விட பிரம்மாண்ட மான வகை சினிமாவும், ஹீரோக்களும் இல்லை. பொன்மகள் வந்தாள் பாடலையோ தொட்டால் பூ மலரும் பாடலையோ இன்றைய ஹீரோக்களுக்குப் பொருத்தவேண்டுமானால் வேறு குரலில்தான் பாடவேண்டி இருக்கிறது.

ஆனால் 60களையும் 70களையும் இவருடைய பாடல்களை நினைக்காமல் நினைவுகூர முடியாது என்ற அளவுக்கு அவ்விரு பத்தாண் டுகளையும் இவருடைய பிரம்மாண்டக் குரல் ஆக்கிர மித்தது. அதற்குப் பின் வந்த குரல்களில் ரொமான்ஸ் உண்டு, இனிமை உண்டு, அபார ஞானம் உண்டு ஆனால் அந்த அழுத்தம், கம்பீரம், ஆடம்பரம், flambo yance TMSஸோடு போய் விட்டது. 80களுக்குப் பின்னும் எங்கள் பசுமை நிறைந்த நினைவுகளில் அவரது குரல் தொடர்ந்திருப்பதினால் அந்த வருடங்களில் பிறந்து வளர்ந்த எங்களைப் பொறுத்தவரையில் அவருக்கு இறப்பு இல்லை.

# ஒன்றும் ஒன்றும் ஒன்று!



**எ**ல்லோரையும் எல்லாவற்றை யும் படிக்கவிட்டால், எல்லாம் ஒன்றுதான் என்று அறிந்து கொள்ளுவார்கள்.. அவ்வாறு அறிந்து கொண்டால் நிறுவனங் களாகிவிட்ட மதங்கள் தங்கள் தனித்தன்மைகளை இழக்க நேரி டும். எல்லாம் ஒன்றுதான் என்று சொல்லி எந்த மதவாதியாவது தனது தனி ஆட்சிக்குத் தானே உலை வைப்பாரா?...

இயேசு பெருமான் எருசலேம் பட்டணத்தில் உள்ள சாலமோ-னின் தேவாலயத்தைப் பார்த்தார். "இந்த தேவாலயத்தை இடித்துப் போடுங்கள் மூன்று நாட்களில் அதை நான் மீண்டும் கட்டுவேன்" என்றார். அவர் தமது உடலாகிய ஆலயத்தைக் குறித்து அவ்வாறு பேசினார் என்று பைபிளிலே வருகிறது.


"உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்" என்கிற திருமூலரின் வரிகள் அப்படியே விவிலியத்தில் காணப்படுகின்றன. இந்த அழகின் ஆழத்தில் ஏன் அமிழ்ந்து எழ வேண்டும் என்பதற்கான காரணத்தைக் கண்டு பிடித்தா சொல்ல வேண்டும். தாயுமான சுவாமிக-ளின் பாடல்களைப் படித்தால் "ஸென் புத்தம்" அப்படியே ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் குடியேறியிருப்பதை அறிந்து கொள்ளலாம். வள்ளலார் பாடல்களில் இயேசுவின் குரலையே கேட்க லாம். "ஆண்டவரே நான் உமது அடிமை, உமது வார்த்தையின் படியே எனக்கு ஆகட்டும்" என்கிற மரியாளின் (இயேசுவின் தாயார்) வேண்டுதலில் அருள்மிகு ராமானுஜரின் "பிரபத்தி" தத்துவத்தைப் பார்க்கலாம்.

ஏன் உலகத்தில் இறைவன் ஒரே ஒரு சமயம் மாத்திரம் இருக்கிற படியாகப் பார்த்துக் கொள்ளக் கூடாது என்றால் ஒரே ஒரு மதமாக இருப்பதில் இறைவனுக்கே நாட்டமில்லை என்று திருக்குரான் கூறுகிறது.

**('இந்த நாள் இனிய நாள்' நூலில் வலம்புரிஜான்)**

# சந்திரபாபு

**தூ**த்துக்குடியிலிருந்து புறப்பட்டு, கையில் ஆறணா காசுடன் சென்னை வந்து இறங்கினேன். எங்கு போவது, யாரைப் பார்ப்பது என்று புரியவில்லை. களைப்பு, பசி, ஏமாற்றம்! உடல் பதறியது. நிற்க முடியவில்லை. தடார் என்று தரையில் விழுந்துவிட்டேன். அருகே இருந்த அன்பர் ஒருவர் - விருத்தாசலம் என்று பெயர் - மருத்துவமனையில் சேர்த்து காப்பாற்றினார்.



திருவல்லிகேணி லாட்ஜ் ஒன்றில் தங்கினேன். அப்போதெல்லாம் இந்திப் பாட்டுக்களைப் பிரமாதமாகப் பாடிக்கொண்டு இருப்பேன். லாட்ஜ் சொந்தக்காரர், என்னை டைரக்டர் கே.சுப்ரமணியத்திடம் கொண்டு விட்டார். அங்கு பலவிதமான நடனங்களைப் பயின்றேன். மாதம் முப்பது ரூபாய் சம்பளத்தில் ஒரு நடனப் படத்தில் நடிப்பதாகவும் ஏற்பாடாயிற்று. ஆனால், அது பாதியிலேயே நின்றுபோய்விட்டது.

அப்புறம் மனம் உடைந்து போய், அலைஞ்சுக்கிட்டிருந்தேன். பி.எஸ்.ராமையா வின் முயற்சியால் "தன அமராவதி" என்கிற படத்தில் ஒரு சான்ஸ் கிடைச்சுது. முதல் நாள் ஷூட்டிங்கிலேயே தகராறு பண்ண ஆரம்பிச்சுட்டேன். குடுமி வைக்கிறதுக்காக மொட்டை அடிச்சுக்கணும்னு சொன்னாங்க. நான் மாட்டேன்னேன். அப்போ என் தலை முடி சுருள் சுருளாக அழகாக இருக்கும். அதைத் தியாகம் செய்ய மனசு வரலே. அப்போ செட்டிலேயிருந்த பழைய நண்பர் விருத்தாசலம் (அவர்தான் எழுத்தாளர் புதுமைப்பித்தன்) "மொட்டை அடிச்சுக்கோ! அதனால் என்ன? மறு-படியும் வளர்ந்துட்டுப் போகுது" என்றார். சரி என்று ஒத்துக்கொண்டேன். ஆனால் மொட்டை அடிச்சுக்கிட்டதுதான் மிச்சம். படம் கோவிந்தா ஆயிடிச்சு! அதற்கப்புறம் எங்கெங்கேயோ போனேன். யார் யாரையோ கேட்டேன். எல்லோரும் என்னைப் பைத்தியக்காரன் மாதிரிதான் ட்ரீட் பண்ணினாங்களே ஒழிய, திறமையுள்ள கலைஞன் மாதிரி மதிக்கலே. கடைசியிலே ஜெமினி அதிபர் வாசனைப் போய்ப் பார்த்தேன். அவரும் உற்சாகமா பதில் சொல்லலே. சரி, இனிமேல் உயி-ரோடு இருந்து பிரயோசனம் இல்லை என்று முடிவுக்கு வந்து ஜெமினி ஸ்டுடியோ வாசலிலேயே விஷம் குடிச்சு மயக்கமா விழுந்தேன். கமெராமேன் தம்புவும், ஜெமினி கணேசனும்தான் என்னை ஆஸ்பத்திரியிலே அட்மிட் பண்ணிக் காப்பாத்தினாங்க. அப்படி ஒரு ட்ராஜிடியிலே ஆரம்பிச்சதுதான் இந்தக் காமெடியனின் வாழ்க்கை.

**(01-03-1964 ஆனந்தவிகடனில் வந்த பேட்டியிலிருந்து)**

# களை நீக்கும் கலை!

## ஒரு தாவோ கதை....

ஒரு தாவோ குரு தன் மூன்று சீடர்களுடன் யாத்திரை செய்து கொண்டிருந்தார். வழியில் ஒரு பெரிய வயல்வெளி முழுவதும் களைகள் மண்டிக் கிடப்பதைக் கண்டார். தன் சீடர்களிடம் குரு கேட்டார். "இந்தக் களைகளை நீக்க சிறந்த வழி என்ன?"



முதலாம் சீடன் சொன்னான். "கையால் ஒவ்வொரு களையாக வேரோடு பிடுங்குவது தான் சிறந்த வழி. அது மிக எளிமையான வழியும் கூட."

இரண்டாம் சீடன் சொன்னான். "இத்தனை பெரிய வயலில் ஒவ்வொரு களையாக கையால் பிடுங்கிக் கொண்டிருந்தால் எப்போது அத்தனை களைகளையும் பிடுங்கி முடிப்பது. களை பிடுங்கும் உபகரணங்களை உபயோகப்படுத்தி களை பிடுங்கினால் குறுகிற நேரத்தில் நிறைய களைகள் பிடுங்கி விடலாம்."

மூன்றாம் சீடன் சொன்னான். "களைகளைத் தீயால் கொளுத்தினால் ஒரேயடியாக அத்தனை களைகளையும் அழித்து விடலாம். அது தான் விரைவான எளிமையான வழி"

குரு சொன்னார். "இந்த வயல் வெளியே மனித மனம் என்றும், களைகள் அவனுக்குத் தேவையற்றதும், முன்னேற்றத்திற்கு உதவாததுமான தீய எண்ணங்கள் என்றும் எடுத்துக் கொண்டால் அப்போதும் நீங்கள் சொன்ன வழிகள் மிகப் பொருத்தமான தாகவே இருக்கும் என்று நினைக்கிறீர்களா?"

முதல் சீடன் சொன்னான். "ஆம் குருவே. ஒவ்வொரு தீய எண்ணத்தையும் தனித்தனியாக கவனத்தில் எடுத்து அதன் தீய தன்மையையும், பலனற்ற தன்மையையும் புரிந்து கொண்டு அதை மனதில் இருந்து நீக்கி விடுவதே எளிமையான சிறப்பான வழி என்று நினைக்கிறேன்."

இரண்டாம் சீடன் சொன்னான். "மனதில் உள்ள தீய எண்ணக் களைகளை விரைவாக நீக்க தியானம், ஜபம், மந்திரங்கள் போன்ற உபகரணங்கள் சிறப்பாகப் பயன்படும் என்று நினைக்கிறேன் குருவே".

மூன்றாவது சீடன் சொன்னான். "புத்தர் அல்லது கடவுளர்களிடம் மனதை ஒப்படைத்தால் ஒரேயடியாக தீய எண்ணக் களைகள் கருகி விடும் என்று நான் நம்புகிறேன் குருவே"

குரு சொன்னார். "மூன்றுமே நல்ல வழிகள் தான். சிந்திக்க வேண்டிய வழிகள் தான். ஆனால் அவை தாவோ கண்ணோட்டத்தில் மிகப் பொருத்தமானது தானா என்பதை நாம் சிந்திக்க வேண்டி இருக்கிறது"

அதற்குப் பின் அவர் அதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. சீடர்கள் தத்தம் வழியே சிறந்தது என்று நினைத்தாலும் குருவின் அங்கீகாரம் கிடைக்காததில் ஏமாற்றம் அடைந்தனர்.

சில மாதங்கள் சென்றன. குருவும் சீடர்களும் அதே பாதை யில் இன்னொரு முறை வர நேர்ந்தது. களைகள் இருந்த வயல் வெளியில் விவசாயிகள் இப்போது நெற்பயிர் விளைவித்திருந்தார்கள்.

குரு அந்த நெற்பயிர் வயலைக் காட்டி சொன்னார். "இது தான் என் கேள்விக்குப் பதில். இது தான் தாவோ முறை"

சீடர்களுக்குப் புரியவில்லை. குரு விளக்கினார். "நீங்கள் மூவர் சொன்ன வழிகளும் தற்காலிகமான வழிகள். களைகளைப் பிடுங்கிய அளவு, அழித்த அளவு அவை மறுபடி மறுபடி முளைத்துக் கொண்டே இருக்கும். அதை நிரந்தரமாக அழிக்க ஒரே வழி அந்த வயலை அப்படியே வெற்றிடமாக வைத்திராமல் அதில் உபயோகமான பயிர்களை விதைப்பது தான்."

"அதே போல் தீய எண்ணங்களை அழிப்பதற்கு நீங்கள் சொன்ன வழிகளும் தற்காலிகமானவை தான். எந்த வழியில் அழித்தாலும் காலி இடம் இருக்கும் வரை அவை திரும்பத் திரும்ப மனதில் எழுந்து கொண்டு தான் இருக்கும். அந்த தீய எண்ணங்கள் இருக்கும் இடத்தில் நல்ல உபயோகமான எண்ணங்களை விதைப்பது தான் தாவோ முறைப்படி புத்திசாலித்தனமான பொருத்தமான செயல். அப்படிச் செய்தால், நல்லெண்ணங்கள் நிரம்பிய மனதில் தீய எண்ணங்கள் மீண்டும் எழ இடமே இருக்காது. அப்படியும் ஓரிரண்டு அங்கொன்றும் இங்கொன்றும் எழலாம் என்றாலும் அவற்றை நீக்குவது பெரிய கஷ்டமான காரியம் அல்ல."

## வீரன் மீசை எது?

மதுரை வீரனுக்கு கம்பீரமான மீசை இருப்பதைச் சிற்பங்களில், சித்திரங்களில் காணலாம். ஆனால், வீரனுக்கு அரும்பு மீசை வைப்பது தமிழ்ப்பட ஸ்டைல் ஆகிவிட்டது. மதுரை வீரனுக்கு அரும்பு மீசை வைக்கலாமா?




கட்டுடல் கொண்ட அழகான கதாநாயகன் எம்.ஜி.ஆருக்கு, "மதுரை வீரன்" படத்தில் அரும்பு மீசை! இது பற்றி அந்நாளைய ரசிகர்கள் குறைப்பட்டு, பத்திரிகைகளில் வாசகர் கடிதங்கள் எழுதினர்.

**('எது நல்ல சினிமா?' நூலில், பசுமைக் குமார்.)**

# சாதா குழந்தை To சூப்பர் குழந்தை

**- டாக்டர். பிரகாஷ் -**

**17**

விளையாட்டுகளின் மூலம் குழந்தைகளின் திறன்களை மேம்படுத்துவதில் அடுத்து, ஐம்புலன்களைப் பயன்படுத்தி, புலன்களின் திறனை, அறிவுத்திறனை எவ்வாறு மேம்படுத்தலாம் என்று பார்ப்போம்.

சிந்திக்கும் திறன் இன்னும் வளர்ச்சியடையாத குழந்தைப் பருவத்தில், புலன் அனுபவங்களின் மூலமே எல்லா புதிய விஷயங்களையும் கற்றுக் கொள்கிறது. புலன் அனுபவ விளையாட்டு (sensory play) என்பது, தொடுதல், நுகர்தல், பார்த்தல், ருசித்தல் மற்றும் கேட்டல் எனப்படும் ஐம்புலச் செயல்களில் ஒன்றையோ, ஒன்றுக்கு மேற்பட்ட புலன்களையோ பயன்படுத்தி விளையாடுவதாகும்.. நம் புலன்களே இந்த உலகைப் பற்றி நாம் அறிய உதவும் கடவுச் சொல் என்றும் கூறலாம். ஐம்புலன்களைப் பயன்படுத்தும் விளையாட்டுக்கள் குழந்தைகளுக்கு எண்ணற்ற அனுபவங்களைக் கொடுக்க வல்லது.

ஒரு புதிய கலர் பொம்மையைப் பார்த்தலும், ஒரு பறவையின் ஓசையைக் கேட்பதும், ஒரு பூவை முகர்ந்து பார்ப்பதும், பழரசத்தை ருசித்துப் பார்ப்பதும், கரடி பொம்மையைத் தொட்டுப் பார்ப்பதும், குழந்தையின் புலன்வழிக் கற்றலைப் பெரிதும் ஊக்குவிக்கின்றன.
புலன் அனுபவ விளையாட்டுக்கள், குழந்தைகளின், cognitive திறன், மொழித்திறன், சமூக மற்றும் உணர்ச்சித்திறன், உடல் வளர்ச்சித் திறன்களை மேம்படுத்துகின்றன.

சிறிய, பெரிய பாத்திரங்களில் நீரை ஊற்றி, அதை மாற்றி விளையாடுதல், கடலை, அவரை, தக்காளி, வாழைப்பழம் போன்ற பல்வேறு வடிவ பொருள்களைத் தொட்டு விளையாடுதல், அரிசி, காய்கறிகள், பழங்கள், பொம்மைகளை வகைப் படுத்துதல் போன்ற விளையாட்டுகள், காகிதக் கப்பல் செய்து நீரில் விடுதல் போன்றவை, குழந்தைக்கு, அதிகம் - குறைவு, நிரம்பி இருத்தல் - காலியாக இருத்தல், மிதத்தல் - மூழ்குதல் போன்ற அடிப்படைத் தத்துவங்களைக் கற்றுக் கொடுக்கின்றன. மேலும், இவை, கணிதத் திறனையும், cognitive திறனை யும் மேம்படுத்துகின்றன.

சென்சரி விளையாட்டுக்கள், குழந்தையின் மொழித் திறத்தை வளர்க்கின்றன. வார்த்தையின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளவும், அரைகுறையாகத் தெரிந்த வார்த்தைகளை நன்கு வெளிப்படுத்தவும், புதிய வார்த்தைகளைப் பேசவும் ஊக்குவிக்கின்றன.. தான் ரசித்த அனுபவத்தை வார்த்தைகளாக வெளிப்படுத்துகையில் மொழித்திறன் வளர்கிறது. மேலும், குழுவாக விளையாடுகையில், இன்னொருவர் பக்கக் கோணம் பற்றி புரிதல் வருகிறது. விட்டுக் கொடுத்தல், முறை வைத்து விளையாடுதல் போன்றவைகளுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது.

சென்சரி விளையாட்டுக்கள் குழந்தைகளின் படைப்பூக்கத்தைத் தூண்டுகின்றன. பொருள்களை அவர்களிடம் கொடுத்து, என்ன செய்கிறார்கள் என்று கவனித்தால், அவர்கள் புதிது புதிதாக விளையாட்டுக்களை ஆடுவர். எனவே, அவர்களுக்காக நாம் யோசிக்காமல், அவர்களையே யோசிக்க வைப்பது அதிக பலன்களைக் கொடுக்கும்.



**ஐம்புல விளையாட்டுக் களுக்கு சில உதாரணங்கள்**

**தொடுதல்:**

தசைகளைப் பயன்படுத்தும் விளையாட்டுக்கள், மெத்தையில் குதிப்பது, கயிறு இழுப்பது, முயல் - தவளை மாதிரி நடிப்பது, ஐஸ் கட்டிகளைத் தொடுதல், சோப் நுரையைத் தொடுதல், பல்வேறு வகையான பொம்மைகளைத் தொட்டு உணருதல்.

**பார்வை:**

பல்வேறு வகையான வெளிச்சங்களை அறிமுகப் படுத்துதல், மெழுகுவர்த்தி வெளிச்சம், ரோர்ச் வெளிச்சம், இருட்டில் கைகளைக் கொண்டு பொம்மை, விலங்கு உருவங்கள் காண்பித்தல், வண்ணங்களைக் கொண்டு விளையாடுதல், கலர்க் கரைசல்கள் விளையாட்டு, பார்வைத் திறனை சோதிக்க பலூன், பந்தைத் தூக்கிப் போட்டுப் பிடிக்கச் செய்தல், பில்டிங்ப்ளொக்ஸ் எனப்படும் சேர்க்கும் விளையாட்டுக்கள், ஒளிந்து விளையாடுதல்.

**கேட்டல்:**

இசையை, பாடலைக் கேட்டல், இசைக் கருவிகளை இசைக்க வைத்தல், விலங்கு, பறவைகளைப் போல மிமிக்ரி செய்தல், அமைதியாக அமர்ந்து வெளியில் இருந்து கேட்கும் ஒவ்வொரு சத்தத்தையும் என்னவென்று வகைப் படுத்தச் சொல்வது, ஒலி அளவைக் குறைத்து, பின் மிகுதியாக்கி, வேறுபாட்டை உணரச் செய்தல். சங்கீதக் கதிரை விளையாட்டு.

**நுகர்தல்:**

சமையலறையில் இருக்கும் மணமிகு பொருட்களை அடையாளம் காணச் செய்தல், வெங்காயம், பூண்டு, ஏலக்காய், எலுமிச்சை போன்றவை. பாதுகாப்பான செண்ட், கற்பூரம் இவைகளை நுகரச்செய்தல், தோட்டத்திற்கு அழைத்துச் சென்று பயிர்களின் வாசனையை நுகரச் செய்தல், பூக்கள், இலைகளின் வெவ்வேறு மணத்தை அறியச் செய்தல்.


**ருசித்தல்:**

குளிர்ந்த உணவு மற்றும் மிதமான சூடாக இருக்கும் உணவு, ஸ்ட்ரோ வைத்து உறிஞ்சும் ஜூஸ், முறுக்கு போன்ற கடித்து சுவையறியும் பலகாரம், பழ வகைகள் மற்றும் காய்கறிகள், இனிப்பு, புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, காரம் போன்றவைகளுக்கு உதாரணங்கள் கொடுத்து, அவர்களை இனங்கண்டறியச்செய்தல்.

(தொடரும்)

# கணினி உலா


# அப்பிள்; கூகுளுக்கு சவால் விட்ட மாணவர்கள்



அப்பிள், கூகுள் என பல முன்னணி நிறுவனங்கள் கையில் அணியக்கூடிய ஸ்மார்ட் கைகடிகாரத்தை தயாரித்து வருவதாக அடிக்கடி தகவல்கள் வெளியாகின்றன. எனினும் அப்பிளோ, கூகுளோ இதுவரை அவ்வாறானதொன்றை சந்தைக்கு அறிமுகப்படுத்தவில்லை.

இந்நிலையில் பெரிய நிறுவனங்களுக்கு சவால் விடும் வகையில் ஸ்மார்ட் கடிகாரத்தை இந்திய மாணவர்கள் சிலர் தயாரித்துள்ளனர். குறித்த ஸ்மார்ட் கடிகாரம் "அண்ட்ரோய்ட்லி" எனப் பெயரிடப்பட்டுள்ளதுடன் முற்றிலும் அண்ட்ரோய்ட்லி இயங்குதளம் மூலம் இயங்குகின்றது. இரண்டு அங்குல திரையைக் கொண்டுள்ளதுடன் 2 மெகாபிக்ஸல் கமராவினை கொண்டுள்ளது.

புளூடுத், ஜி.பி.எஸ், 256 எம்.பி. ராம், வை- பை, 8 மற்றும் 16 ஜி.பி. மெமரி என பல வசதிகளை இக்கைக்கடிகாரம் கொண்டுள்ளது. இதன் விலை 150 பவுண்ஸ்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.




தற்போது சந்தையில் கிடைத்திடும் பெரும்பாலான கணினிகள் 24 பின்களின் மின்னிணைப்பு மதர்போர்டாகவே உள்ளன ஆயினும் சிலநேரங்களில் 20 பின்களின் மின்னிணைப்பாக இருந்தால் என்ன செய்வது என தடுமாறவேண்டாம் அவ்வாறு 20 பின்களின் மின்னிணைப்பாக இருக்கும்போது மதர்போர்டின் 24 பின்களின் மின்இணைப்பில் நான்கினை (இந்த நான்கையும் பிரித்துவிடுமாறே அமைத்து வெளியிடப்பட்டு வருகின்றது) பிரித்துவிட்டு மிகுதி 20 பின்களுடன் மின் இணைப்பு கொடுத்தால் போதுமானது உடன் இந்த மின் இணைப்பானது வழக்கமாக செயற்படும்.


92.4.1 சிலநேரங்களில் மின்விநியோக அமைப்பு இவ்வாறு இந்த கூடுதலான நான்கினையும் பிரித்திட அனுமதிக்காத சூழ்நிலையில்

முதல்வழிமுறையாக 24 பின்களுக்கும் 20 பின்களுக்கும் ஆன இணைப்பினை வழங்கிடும் அடப்டரை வாங்கிப் பயன்படுத்தி கொள்க.

இரண்டாவது வழிமுறையாக24 பின் மின்னிணைப்பு 20 பின்களின் இணைப்பானுடன் நேரடியாக இணைத்திடுக இந்த இரண்டாவது வழிமுறை தவிர்க்கப்படவேண்டும். இது நம்முடைய கணனியினுடைய மதர்போர்டை வீணாக்கிவிடும்.

மூன்றாவது வழிமுறையாக இந்த கட்டுரையில் முதலில் சொன்னவாறு கூடுதலாக உள்ள நான்கு பின்களை பிரித்துவிட்டு 20 பின்களை மட்டும் இணைப்பு ஏற்படுத்தி கொள்க.

# கமெராவுக்குள் புகுத்தப்பட்ட தொழில்நுட்பம் - சென்டோகிராபி!



பொதுவாக கமராவில் புகைப்படம் எடுப்போம். ஆனால் கமெராவில் புகைப்படத்திற்குப் பதிலாக வாசனையை பதிவு செய்ய முடிந்தால்? எப்படி இருக்கும் என்று யோசிக்கிறீரகளா. அப்படி ஒரு கமராவை ஒரு பெண் ஆராய்ச்சியாளர் வடிவமைத்துள்ளார். லண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஏமி ராட்கிளிப் உருவாக்கியுள்ள இந்த இயந்திரத்திற்குப் பெயர் மடெலின் (Madeleine). பிறந்தநாள் கேக்கின் வாசனையையும், காதலியின் ஷாம்பூவின் நறுமணத்தையும் இது போல் இன்னும் பல மனதிற்கு நெருக்கமான நறுமணங்களை பதிவு செய்து கொள்ள முடியும் இந்த கமராவில் என்கிறார், இதனை வடிவமைத்த ஏமி ராட்கிளிப்.

இந்த சென்டோகிரா.:.பியில் ஒரு பனல் இருக்கிறது. நீங்கள் எந்தப் பொருளின், எந்த இடத்தின் வாசனையை பதிவு செய்ய வேண்டும் என விரும்புகிறோமோ அதன் மீது அந்த பனலை வைக்க வேண்டும். அதில் இருக்கும் ஒரு வகை குழாய் அந்த பொருளின் இடத்தில் இருக்கும் மணத்தை தன்னகத்தே பதிவு செய்து கொள்ளும். டெனக்ஸ் (Tenax) எனும் ஒரு வகை பொலிமர் டேப்பில் அந்த வாசனை பதிவாகும்.

# Google + இல் Photo மீது தமிழில் எழுதும் வசதி

மிகவேகமாக வளர்ந்து வரும் சமூக இணையத்தளமான Google +ல் ஒரு புதிய வசதியை வெளியிட்டு உள்ளனர். Google + இல் போட்டோக்கள் பகிரும் பொழுது அந்த போட்டோக்களில் நாம் விரும்பியதை எழுதலாம். தமிழ் மொழியையும் support செய்வது இதன் கூடுதல் சிறப்பாகும்.

Google +இல் எப்பொழுதும் போட்டோக்கள் பகிர்வது போல Add Photo cliஉம் செய்து புகைப்படத்தை தேர்வு செய்து கொள்ளுங்கள்., Add Text என்ற ஒரு புதிய வசதி இருக்கும் அதன் மீது click செய்யுங்கள்.

அடுத்து இன்னொரு window open ஆகும். அதில் Top, middle, Bottom என மூன்று கட்டங்கள் இருக்கும் எந்த இடத்தில் வாக்கியம் சேர்க்க வேண்டுமோ அந்த கட்டத்தில் உங்களின் வாக்கியத்தை type செய்யவும். கூகுளின் IME பயன்படுத்தி நேரடியாக தமிழில் type செய்யலாம்.

வலது புறத்தில் உள்ள T என்ற link click செய்து வேண்டிய Font Family தேர்வு செய்து கொள்ளவும். உங்கள் வார்த்தையை கொடுத்தவுடன் கீழே உள்ள Save button அழுத்தி வரும் window-வில் Share செய்து விடலாம்.

போட்டோவில் தமிழில் watermark சேர்க்க விரும்புவோருக்கு இந்த வசதி பயனுள்ளதாக இருக்கும். Watermark சேர்த்த பின் வேண்டுமென்றால் உங்கள் கணனியில் சேமித்து மற்ற இடங்களில் பகிர்ந்து கொள்ளலாம்.

**சனிக்கிழமை, 04 பெப்ரவரி 2012 12:16** Tamilcomputer **ஆல் எழுதப்பட்டது**

மிகவேகமாக வளர்ந்து வரும் சமூக இணையதளமான Google + இல் ஒரு புதிய வசதியை வெளியிட்டு உள்ளனர். Google + இல் போட்டோக்கள் பகிரும் பொழுது அந்தப் போட்டோக்களில் நாம் விரும்பியதை எழுதலாம். தமிழ் மொழியையும் support செய்வது இதன் கூடுதல் சிறப்பாகும்.

Google + தவிர வேறு எந்த சமூக தளத்திலும் இந்த வசதி இல்லை என நினைக்கிறேன். நாம் எழுதும் வாக்கியம் போட்டோக்கள் அளவிற்கு ஏற்ப எழுத்துக்களின் அளவு தானாகவே குறைந்து விடுகிறது.

Google + இல் எப்பொழுதும் போட்டோக்கள் பகிர்வது போல Add Photo click செய்து புகைப்படத்தை தேர்வு செய்து கொள்ளுங்கள். Add Text என்ற ஒரு புதிய வசதி இருக்கும் அதன் மீது click செய்யுங்கள்.


அடுத்து இன்னொரு window open ஆகும். அதில் Top, middle, Bottom என மூன்று கட்டங்கள் இருக்கும் எந்த இடத்தில் வாக்கியம் சேர்க்க வேண்டுமோ அந்த கட்டத்தில் உங்களின் வாக்கியத்தை type செய்யவும். கூகுளின் IME பயன்படுத்தி நேரடியாக தமிழில் type செய்யலாம்.

வலது புறத்தில் உள்ள T என்ற link click செய்து வேண்டிய Font Family தேர்வு செய்து கொள்ளவும். உங்கள் வார்த்தையை கொடுத்தவுடன் கீழே உள்ள Save button அழுத்தி வரும் window-வில் Share செய்து விடலாம்.

போட்டோவில் தமிழில் watermark சேர்க்க விரும்புவோருக்கு இந்த வசதி பயனுள்ளதாக இருக்கும். Watermark சேர்த்த பின் வேண்டுமென்றால் உங்கள் கணனியில் சேமித்து மற்ற இடங்களில் பகிர்ந்து கொள்ளலாம்

# இணையப் பக்கத்தை அச்சிடும்போது தேவையற்றதை தவிர்த்திட

இணையத்தில் நாம் ஏதேனும் செய்தியை தேடிடும் போது கிடைத்தவுடன் அந்த இணையப் பக்கத்தை உடனடியாக அச்சிட்டு பெறவிரும்பும் நிலையில் அச்சிடும்போது அந்தப் பக்கத்தின் தலைப்பில் அல்லது முடிவில் தானாகவே திகதி பக்கஎண் இணைய முகவரி போன்ற நமக்குத் தேவையில்லாத செய்திகளும் அச்சிடப்படும் இதனை தவிர்த்திட



நாம் பயன்படுத்திடும் தேடுபொறி இன்ரநெட் எக்ஸ்ப்ளோரர் 7 ஆக இருந்தால் மேல் பகுதியில் உள்ள அச்சுப் பொறியின் உருவ பொத்தானிற்கு அருகிலுள்ள கீழிறங்கு பொத்தானை தெரிவு செய்து சொடுக்குக

உடன் விரியும் கீழிறங்கு பட்டியில் Page Setup என்ற கட்டளை (வாய்ப்பை) தெரிவுசெய்து சொடுக்குக

பின்னர் தோன்றிடும் Page Setup என்ற உரையாடல் பெட்டியில் Header என்பதன்கீழ் உள்ள Title >Page# of total pages ஆகியவற்றின் கீழிறங்கு பட்டியலை விரியச் செய்து -Empty - என்பதையும் அவ்வாறே Footer என்பதன்கீழ் உள்ள URL ,Date in short format ஆகியவற்றின் கீழிறங்கு பட்டியலை விரியச்செய்து -Empty என்பதையும் தெரிவுசெய்து கொண்டு இந்த உரையாடல் பெட்டியின் கீழ்ப்பகுதியிலுள்ள OK என்ற பெத்தானை தெரிவுசெய்து சொடுக்குக

நாம் பயன்படுத்திடும் தேடுபொறி .:.பயர் .:.பொக்ஸ் ஆக இருந்தால் மேலே இடதுபுறமூலையின் கட்டளைப் பட்டையிலுள்ள file=>page setup=> என்றவாறு கட்டளைகளை தெரிவுசெய்து சொடுக்குக உடன்விரியும் page setup என்ற உரையாடல் பெட்டியில் Header என்பதன்கீழ் உள்ள Margins & Header / Footer என்ற தாவியின் திரையை தோன்ற செய்து அதில் Header / Footer என்பதன் கீழுள்ள Title >Page# of #> URL >Date /time ஆகியவற்றின் கீழிறங்கு பட்டியலை விரியச்செய்து அவைகளில் Blank என்பதைத் தெரிவு செய்து கொண்டு இந்த உரையாடல் பெட்டியின் கீழ்பகுதியிலுள்ள OK என்ற பெத்தானை தெரிவுசெய்து சொடுக்குக

இதன் பின்னர் இணைய பக்கத்தை அச்சிட்டால் திகதி பக்கஎண் இணையமுகவரி போன்ற நமக்குத் தேவையில்லாத செய்தியைத் தவிர்த்து அச்சிட்டு பெறமுடியும்.

# ஆங்கில ஆசிரியர் நியமனம் 71 பேருக்கு நேர்முகத் தேர்வு

யாழ். மாவட்டத்தில் உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா HNDE பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளது. இதன்படி நியமனத்துக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்ட 71 பேரின் விபரம் வருமாறு,

கயானந்தன் குணதரன் (791503701V), தர்மிந்தன் சுபாகினி (847571527V), கரன்டினாஜ் றஞ்சித்றீகன் (838234003V), பிரபாகரன் மரிகில்டா (815364635V) ஜெயரட்ணம் ஜெனிதா (896612549V), ராஜரட்ணம் சுகுணா (845381771V), நவ ரட்ணராஜா தர்சினி (87590 3373V), பிரதீபன் கஜானி (8278 44365V), சுயேந்திரன் தயானி (857812280V), மதுசுதன் சோபிகா (89 8030822V), விஸ்வலிங்கம் தேவநாயகி (776750859V).

அன்ரன் மேரி அனுசியா (887502803V), ராஜேந்திரம் ஜெயவாணி (888650431V), தேவகுருநாதன் அமுதா (866853150V), அருமைராஜா கிருத்திகா (897023636V), சலமன் நெலசன் (781454613V).

நடராஜா சாந்தகுமார்(802631898V),செல்வநாயகம் மதுரா (866383170V), தர்மலிங்கம் தனாசனி (866533563V), கணபதிப்பிள்ளை சிறிவிக்னேஸ்வரி (835433668V), யுகராஜ் வேணுகா (828104314V), பொன்னையா கஜன் (903133368V).

கமலேஸ்வரன் ஸ்ரீவித்தியா (878061934V),முகம்மது யூசுப் சபாஷ்ஷிபா (785900952V), றஸாக்தீன் தாஜுர்தீன் (790011473V), நடராஜா விஜிதா (766561764V), நடராஜா கௌசல்யா (886134053V), தாமோதரம்பிள்ளை சுகந்தன் (793351658V).

பாலசிங்கம் காண்டீபன் (803310688V),சரிதா தியாகன் (818502974V), கிருஸ்சருணதாசன் பிரியலோஜினி (897462923V), சிவகரன் சீதா ( 788224575V), யோகநாதன் துஸ்யந்தன் (822102140V).

மகாலிங்கம் அபிலோஜினி (918610880V), சின்னத்தம்பி சிறீகாந்தன் (732382496V), சிவசுப்பிரமணியசர்மா ஜெயதுர்க்கா (837191440V), சஞ்ஜீவ்காந் கோசலரூபினி (855793644V).

நவநீதன் சுதர்மினி (766820743V), கோவிந்தராஜா சிந்துஜா (847412070V), சிறீகாந்தன் சுப்பிரமணியம் (732933573V), மேரி ஜெறினா எமில்ராஜ் (837504309V), வசந்தன் வனிதா (816273323V).

கமலகுமார் தனமதி (738121910V), பகீரதன் கிருஜா( 848460699V), அன்ரன்ஜெரோம் வோஜினி (868230720V), ராசநாயகம் துளசினி (887971560V).

ராசரட்ணம் மனோஜ்குமார் (842673909V), நாகராஜா சர்மிளா (827572764V), பேர்டினன்ட் ஜெயசெல்வன் (810832681V), வினோகாந்தன் பிரகல்யா (888191259V), காண்டீபன் விசாகினி (855042665V).

சுந்தரதாஸ் பிரிமளாதேவி (877743390V), சுரேந்திரகுமார் ரமிலா (916732058V) பரமானந்தம் திவ்யா (825280928V), பிரதீபன் பிரியந்தி (777411500V), றஞ்சித்காந் விஜேகலா (805802820V), நிமலராசா புஸ்பராணி (865043007V). சுபசிங்க லௌக்தா (827794090V), மேரி வசந்தி அமல்ராஜ் (747051577V), ராமோஸ் ஜெகன் பேகம் பற்றிமா சிஹ்லா (937292236V), யேசுதாசன் கொன்கிளேடியஸ் (782442392V), சபாரட்ணம் கீதபாலினி (856611701V), கணேஸ் விஜிதா (836420022V), ஆன் சுபோதினி செல்ரன் (846262377VV), சின்னையா சிவஞானம் பிரியறஜனி (818280238V), செல்வநாயகம் றஞ்சித்குமார் (792021301V), மொஹமட் முகைதீன் ஆஸீம்.

சத்தியலிங்கம் சுனேத்ரா (786093880V), நடராஜா கதிரமலை (752221910V), சிவலிங்கம் சிவறாகினி (846812857V), கொன்சி இம்மகுலேற்றா லோறன்ஸ் (826242663V).

# மகிந்தோதய திட்டத்தின் கீழ் ஆய்வுகூடத்திற்கு அடிக்கல் நாட்டல்



(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துக் கல்லூரியில் "மகிந்தோதய" தொழில்நுட்ப ஆய்வு கூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கு மறுமலர்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் விசேட செயற்திட்டத்திற்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் "மகிந்தோதய" தொழில்நுட்ப ஆய்வு கூடம் அமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் ரூபா 9.2 மில்லியன் செலவில் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

ஆலய வளாகத்திலுள்ள கோயிலில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளை தொடர்ந்து அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம் பெற்றது. தொடர்ந்து பாடசாலை வளாகத்தில் மரம் நடுகையும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு.சி.சத்தியசீலன், மாகாண கல்விப் பணிப்பாளர் வை.செல்வராசா மற்றும் உயரதிகாரிகள், கல்லூரி சமூகத்தினர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## ஆண்டுவிழாவையொட்டி போட்டி முடிவுகள்

(வடமராட்சி)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடாத்தப்பட்ட கட்டுரை, கவிதைப்போட்டிகளின் முடிவுகள் கல்லூரியினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

1ஆம், 2 ஆம், 3 ஆம் இடங்களைப்பெற்ற மாணவர்கள் விபரம் பின்வருமாறு

கட்டுரைப்போட்டி
(கீழ்ப்பிரிவு)

எ்ஸ.றஜீவன் (யாழ்ப்பாணக் கல்லூரி) என.தார்மினி (உடுப்பிட்டி மகளிர் கலலூரி) எம்.சுபிர்ணா (கரவெட்டி ஞானாசாரியர் கல்லூரி).

## சுகாதார சீர்கேடான குருநகர் பிரதேசம்

(குருநகர்)

மககளின் செறிந்த குடியிருப்புகள் அமைந்துள்ள குருநகர் பிரதேசங்களில் சுத்திகரிப்பு வேலைகள் நடைபெறாததால் அப்பகுதி சுகாதார சீர்கேடாக காணப்படுகிறது.

குப்பைகள் வீதிகள் தோறும் நிரப்பிச் சிந்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. அதேவேளை, வடிகால்களில் தேங்கி நிற்கும் கழிவுநீரால் துர்நாற்றம் வீசுவதால் சுவாசிக்க முடியாமல் மக்கள் இன்னோரன்ன அவஸ்தைக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்நிலைமையால் டெங்கு மற்றும் தொற்று நோய்களின் தாக்கம் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. தினமும் சுத்திகரிக்கப்பட வேண்டிய இடங்கள் சமீபகாலங்களில் வாரம், மாதமென சுத்திகரிக்கப்படாமல் இருந்து வருகிறது.

சில மாதங்களுக்கு முன்பாக யாழ். மாநகரசபை சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வந்த சுத்திகரிப்பு வேலைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாலே நெருக்கடி கூடிய குருநகர் பிரதேசம் தொற்று நோய்களின் தோற்று வாயிலாக மாறும் அபாயம் தோன்றி வருவதாக எச்சரிக்கப்படுகின்றது. (68)

# பதிவிறக்கப் பெட்டகம்

### ஸக் ஃப்ரீட் லென்ஸின் "நிரபராதிகளின் காலம்" நாடகத்திலிருந்து

நான் சொல்வதுதான் சரி என்று சொல்லக் கூடிய அளவுக்கு தைரியம் எனக்கில்லை. துப்பாக்கி முனையில் நிறுத்தினாலும் என் சந்தேகத்தை நான் தெரிவிப்பேன். சந்தேகம் ஒன்றுதான் வாழ்க்கையைச் சகித்துக்கொள்ள உதவுகிறது.

◆◆◆

பேசுவது எனக்கு மிகவும் விருப்பமானது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் மௌனத்தில் விலைமதிப்பற்ற புத்திசாலித்தனம் மட்டும் வெளிப்படும் என்பதில்லை. முட்டாள் தனத்தையும் மறைக்க உதவுகிறது! முட்டாள்தனத்தையும், அத்துடன் எதுபற்றியும் அபிப்பிராயமற்ற தன்மையையும்.

◆◆◆

நாம் அறிய ஆசைப்படும் அளவுக்கு அறிய முடியாமல் போகும் போது நமக்குப் பிதற்றுவதைத் தவிர வேறு வழியில்லை.

◆◆◆

ஒரு கொடிய செயலைச் செய்தவனின் மனதில் ஏற்படுவதைவிட, அதைச் சும்மா பார்த்துக் கொண்டிருந்தவனின் மனதில் அதிகளவு மனவேதனையை உண்டாக்கும் குற்றங்களும் இவ்வுலகில் உண்டு.

◆◆◆

நடப்பில் அக்கறையின்றி இருப்பதன் மூலம் ஒருவன் குற்றமற்றவன் என்ற நிலையை அடைய முடியாது. குற்றம் சூரிய கிரகணத்தைப் போல் எல்லோருக்கும் பொதுவானது. அது எல்லோருக்கும் பொருந்தும். குற்றத்தை எதிர்கொள்வதற்கான ஒரே வாய்ப்பு, அதை உணர்வதிலும் ஏற்றுக்கொள்வதிலும் தான் இருக்கிறது.

◆◆◆

முற்றிலும் குற்றமற்ற தன்மை என்பது செத்துப்போனவர்களுக்கு மட்டுமே உரித்தான தனிச் சிறப்பு. வாழ வேண்டிய அவசியம் என்று கருதும் எவரும் குற்றவாளியாவதைத் தவிர வேறு வழியில்லை.

◆◆◆

தியாகிகளாக மாற வேண்டும் என்று நினைப்பவர்கள் எல்லோருமே ஒருவிதத்தில் கொலைகாரர்களே. நல்லது கெட்டது எது என்பதைப் பற்றியும், ஒரு கொள்கைக்காகச் சாவது எவ்வளவு உயர்ந்தது என்றும் இவர்கள் நமக்குப் போதிப்பார்கள். தங்களைப்போலவே மற்றவர்களும் உயிர்விடத் தயாராக இருக்க வேண்டுமென வற்புறுத்துவார்கள். இரத்த ஆறு ஓடுவதை இவர்கள் முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இரத்த ஆறு ஓடுவது ஒரு உயர்ந்த குறிக்கோளை அடைவதற்குத்தான் சாதாரண குறிக்கோளுக்காக அல்ல என்பது இவர்கள் கோட்பாடு. எவ்வளவுக்கு எவ்வளவு இவர்களின் துயர் கடுமையாகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு இவர்களுடைய கொள்கைப்பிடிப்பு என்ற வெறியும் முற்றுகிறது.

◆◆◆

எவன் வாழ விரும்புகிறானோ, அவனை அவன் மனதுக்குப் பிடிக்காத விஷயங்களை செய்யக் கட்டாயப்படுத்த முடியும். எவன் சாகத் தயாராக இருக்கிறானோ, அவன் மட்டும் தான் எல்லா விதமான பிரச்சினைகளையும் தவிர்க்க முடியும். ஆனால் அவனால் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முடியாது. மரணம் மட்டும்தான் நமக்குச் சாதகமான சாட்சியம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.


◆◆◆

நம்மில் ஒவ்வொருவரும் பலர் – விரோதிகள், நண்பர்கள் – சாக வேண்டுமென்று அவ்வப்போது ஆசைப்பட்டுள்ளோம். நாம் எல்லோரும் ரகசியமான உன்னதமான தனிப்பட்ட மயானம் ஒன்றை நிறுவியுள்ளோம். நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களுக்கு நாம் விரும்பியதெல்லாம் நேர்ந்திருந்தால் இந்த உலகத்தில் மக்கள் தொகைப் பெருக்கம் என்ற பிரச்சினையே இருந்திருக்காது. ஆனால் ஒன்று, விருப்பத்துக்கும் நடைமுறைக்கும் இடைவெளி இருக்கிறது மெல்லிய காகிதச்சுவர் போல.

◆◆◆

உங்கள் கடந்தகால நிகழ்ச்சிகளில் நீங்கள் உங்களுக்கு ஏறபட்ட துன்பத்தை மட்டுமே காண்கிறீர்கள். மனச்சாட்சி போடும் ஒவ்வொரு வரவு செலவுக் கணக்கையும் தன்னைப் பற்றிக் கழிவிரக்கம் கொள்ளவும் ஒரு சந்தர்ப்பமாக அந்த மனச்சாட்சி பயன்படுத்திக் கொள்கிறது. தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களையே நினைத்து வருத்தப்பட்டு அதன்மூலம் தன்னைத் தானே புகழ்பாடும் மனப்பான்மையை நான் மதிக்க முடியாது. வேண்டுமென்றே இப்படி ஒருவர் வருந்தும் போக்கை நான் வெறுக்கிறேன். அதனால் உண்மையான துயரத்தையோ, தியாகம் செய்தவரின் கடும் மனத் துயரையோ புரிந்துகொள்ள ஒருவனால் இயலாது. மற்றவர்களின் துயரங்கள், மற்றவர்களின் வேதனைக் கதறல், மற்றவர்களின் மரண பயம் ஆகியவற்றை நம் நினைவில் தேடும் பழக்கத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

# ஓட்டப் பந்தயத்தில் தோல்வியடைந்தகாளைமாடு போன்றதே இந்திய இலங்கை ஒப்பந்தம்



கடந்த 1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தம் ஓட்டப் பந்தயத்தில் தோல்வியை த்தழுவிய காளை மாடு போன்றது என்று இந்தியாவின் முன்னாள் புலனராய்வு அதிகாரியான கேணல் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

சீனா, சிறிலங்கா குறித்த மூலோபாயக் கொள்கைகளை இந்தியா மாற்ற வேண்டும் கேணல் ஹரிகரன்

சீனாவின் கடல்சார் நடவடிக்கைகள் அடுத்த பத்து ஆண்டுகளில் இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் அதிகரிப்பதால் ஏற்படுகின்ற ஆபத்தை தவிர்ப்பதற்கு, சீனா மற்றும் சிறிலங்கா தொடர்பான தனது மூலோபாயக் கொள்கைகளில் இந்தியா மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும்.

இவ்வாறு சண்டேலீடர் ஆங்கில வாரஇதழுக்கு அளித்துள்ள செவ்வியில் குறிப்பிட்டுள்ள இந்திய இராணுவத்தின் முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரியான கேணல் ஆர்.ஹரிகரன். மேலும் தெரிவித்துள்ளார். அதன்விபரம் பின்வருமாறு,

கேள்வி: சிறிலங்காவின் தேசிய பிரச்சினையில் இந்தியா கடந்த பல பத்தாண்டுகளாக ஆர்வத்துடனும் சில நேரங்களில் கண்டுகொள்ளாதும் நடந்துள்ளது. தற்போது சிறிலங்காவில் 13ஆவது திருத்தச்சட்டம் மற்றும் வடக்கு மாகாணசபைத்தேர்தல் போன்றன முக்கியமாக பேசப்படுகின்றன.

இவ்வாறான விடயங்களில் மன்மோகன் அரசாங்கம் சாதகமாகவும், உறுதியுடனும் செயற்படுகின்றது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? பதில்: சிறிலங்காவின் தேசியப்பிரச்சினை தொடர்பில் இந்தியா இரு வேறு நிலைப்பாடுகளைக் கொண்டுள்ளது. அதாவது பிராந்திய சக்தியாக உள்ள இந்தியா, சிறிலங்காவுடன் கேந்திர நலன் பயக்கும், நட்புரீதியான உறவைத் தொடர வேண்டும் என விரும்புகிறது. இது இந்தியாவின் ஒரு நிலைப்பாடாகும்.

தமிழ்நாட்டுக்கும் சிறிலங்கா வாழ் தமிழ் மக்களுக்கும் இடையிலான பாரம்பரிய தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு தேசிய ரீதியில் முரண்பாட்டைத் தோற்றுவிக்காது அரசியலைக் கொண்டு செல்ல வேண்டிய மற்றைய நிலைப்பாட்டை இந்தியா கொண்டுள்ளது.

இந்நிலையில் நீங்கள் இங்கே குறிப்பிட்ட இந்தியாவின் "மாறுபட்ட" நிலைப்பாடானது, குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படுகின்ற சூழ்நிலையின் முன்னுரிமைக்கேற்ப இந்தியா தனது கொள்கை வகுப்பை மாற்றிக் கொள்ளும். அதாவது சிறிலங்காவின் தேசிய பிரச்சினை தொடர்பில் பிராந்திய சக்தி என்கின்ற அதிகாரத்தை நிலை நாட்ட வேண்டும் என இந்தியா விரும்பினால் அல்லது தேசிய ரீதியில் தமிழ்நாட்டில் எழும் உணர்வலைகளைப் பொறுத்து இந்தியா தனது தலையீட்டை மேற்கொள்ளும். இந்தியா இவ்விரு வேறுபட்ட நிலைப்பாடுகளை சமப்படுத்தி தீர்வை எடுக்க முயற்சிக்கிறது.

இதன் ஒரு பகுதியாகவே 1987ல் இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திட ப்பட்டது. ஆனால் பிராந்திய மூலோபாயத் தேவையையோ அல்லது உள்நாட்டில் வாழும் தமிழ் மக்களின் அரசியல் அவாக்களையோ திருப்திப்படுத்துவதாக இந்திய -இலங்கை ஒப்பந்தம் உருவாக்கப்படவில்லை.

இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இரு தரப்புக்களினதும் அரசியல்வாதிகள் தமது கடப்பாட்டிலிருந்து விலகிக் கொள்வதற்கான சட்ட ஓட்டைகள் பல காணப்படுவதால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் உண்மையில் தோல்வியடைந்தகாளை மாடு போன்ற அனைவராலும் ஒன்றாகவே பார்க்கப்படுகிறது. இந்த உடன்பாட்டின் பிரகாரம் வரையப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. ஆனால் இத்திருத்தச் சட்டம் குறைந்தது சிறுபான்மை மக்களுக்கு சமமான நீதியை வழங்க வேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கிறது.

இத்திருத்தச் சட்டத்தை நான் முழுமையாக ஆதரிக்கவில்லை என்றாலும் கூட, தற்போது அதாவது தமிழீழ விடுதலைப் புலிகளின் துப்பாக்கிகள் மௌனமாக்கப்பட்டுள்ள இந்நிலையில் இத்திருத்தச்சட்டத்தை மீள ஆராய்ந்து சீர்செய்ய வேண்டிய தேவையுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## பயணிகள் பஸ் மீது கல் வீசி தாக்குதல்

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்ற இரு தனியார் பஸ்கள் மீது தென்மராட்சி எழுதுமட்டுவாள் பகுதியில் கற்கள் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு கடந்த வியாழன் இரவு கொழும்பு நோக்கி ஒன்றன் பின் ஒன்றாக வந்து கொண்டிருந்த இரு பஸ்கள் மீதே இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.எழுதுமட்டுவாள் பகுதியில் இரு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் பஸ்கள் மீது கல் வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் ஒரு பஸ்ஸின் முன் பக்க கண்ணாடி முற்றாக சேதமடைந்துள்ளது.

## மின் நிலையத்தில் தீ விபத்து

புத்தளம், முள்ளிபுரம் காற்றுமின் உற்பத்தி நிலையத்திலுள்ள காற்றாடிகள் ஒன்றில் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.15ஆவது காற்றாடியிலேயே இந்த தீ விபத்து நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் ஏற்பட்டுள்ளது. தீ ஏற்பட்டமைக்கான காரணம் உடனடியாக கண்டுப்பிடிக்கப்படவில்லை.என்பதுடன் அந்த பகுதியில் மின்சாரமும் தடைப்பட்டுள்ளது.காற்றாடி கடும் உயரத்தில் இருப்பதனால் அதில் ஏற்பட்ட தீயை அணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. எனினும், சில மணிநேரத்திற்கு பின்னர் அந்த தீ தானாகவே அணைந்து விட்டது. இந்த தீ விபத்து தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஆஸி.யில் இலங்கை அகதி நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

அகதி அந்தஸ்த்து வழங்கப்பட்ட நிலையிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக அவுஸ்ரேலியாவில் உள்ள இலங்கை அகதி ஒருவர் மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளார். ரஞ்சனி என்ற குறித்த பெண்ணுக்கு அவுஸ்ரேலிய குடிவரவுத் திணைக்களம் ஏற்கனவே அகதி அந்தஸ்த்து வழங்கியுள்ளது.

எனினும் ஏசியோ எனப்படும் அவுஸ்ரேலிய புலனாய்வு தரப்பினரால் கடந்த 14 மாதங்களாக அவர் விலாவுட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இவ்வாறு தம்மீது தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் குற்றச்சாட்டை முன்வைத்து தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளமை மனித உரிமை மீறல் எனவும், தேசிய சட்டத்துக்கு எதிரானது எனவும் தெரிவித்து இந்த வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## வடக்கில் இராணுவத்தினர் தவறாக வழிநடத்தப்படுகின்றனர்

### யாழ்ப்பாணத்தில் பொன்சேகா தெரிவிப்பு

இராணுவத்தினர் சிலர் தவறாக வழி நடத்தப்படுகின்றனர். அவ்வகையிலேயே உயர்பாதுகாப்பு வலயத்தில் பேணப்படும் படையினரது களியாட்ட விடுதிகளும் அமைந்துள்ளன. தவறானாவர்களது சுயநலநடவடிக்கை ஒட்டு மொத்த இராணுவத்திற்கும் அபகீர்த்தி ஏற்படுத்துவதாக கவலை தெரிவித்தார்

முன்னாள் இராணுவத்தளபதி சரத்பொன்சேகா. யாழ்ப்பாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போது யாழ்.ஊடக அமையத்தில் ஊடகவியலாளர் மாநாடொன்றினை நேற்று முன்தினம் நடத்தியிருந்தார்.

அங்கு எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த சரத்பொன்சேகா உயர்பாதுகாப்பு வலயங்கள் இப்போது ஏன் இருக்கின்றது எனவும் கேள்வி எழுப்பினார்.அப்பகுதியில் உள்ள தல்செவன மற்றும் பியர் கார்டன் என இவ்வாறான விடுதிகள் பற்றி நான் அறிந்திருக்கின்றேன்.

அங்கிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் அகதிகளாக அலைவதை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா என ஊடகவியலாளர்களினால் பதிலுக்கு எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர் இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்தும் சிலரால் தவறாக வழி நடத்தப்பட்டு வருகின்றனர். அவ்வகையிலேயே உயர்பாதுகாப்பு வலயத்தில் பேணப்படும் களியாட்ட விடுதிகளும் அமைந்துள்ளன. போர்களங்களில் நின்ற சிப்பாய்கள் இப்போதுசாராய வியாபாரத்தில் ஈடுபடுத்தப்படுவதாகவும் அவர் குற்றச்சாட்டை தெரிவித்தார்.

## டெங்கு நுளம்பை விரட்டும் மாணவர்களின் போராட்டம்



டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நேற்று யாழ்.புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்திற்கு விஜயம் செய்து அங்கு மாணவர்கள் டெங்கு ஒழிப்பு் சிரமதானப்பணி மற்றும் மாணவர்களின் விழிப்புணர்வு நடவடிக்கையையும் பார்வையிடுவதனையும் ஆளுநருடன் ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் மற்றும் அதிகாரிகள் பாடசாலை அதிபர் அங்கு பிரசன்னமாகியிருப்பதினையும் காணலாம்.

## மாகாணங்களுக்கு தேவையான அதிகாரங்கள் எவை?

### தெரிவிக்குழுவில் கருத்து தெரிவிக்க வாய்ப்பு

அரசாங்கத்திலும் எதிர்க்கட்சிகளிலும் உள்ள சில கட்சிகள் 13வது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தில் இருக்கும் சில அதிகாரங்களை நீக்குவது பற்றி பல்வேறு கருத்துக்களை முன்வைத்து வருகின்றன என்றும் அது பற்றி அரசாங்கம் நியமித்துள்ள நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொண்டு அந்த கட்சிகள் தத்தமது யோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைக்க முடியும் என்றும் அமைச்சர் ஜோன் செவிரட்ன தெரிவித்துள்ளார்.

இதற்கான ஜனநாயக ரீதியான உரிமைகளை அரசாங்கம் இந்த கட்சிகளுக்கு வழங்கியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.எனினும் மாகாண சபைகளை இரத்துச் செய்ய அரசாங்கம் தயாராக இல்லை. இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு என்றபடியால், அதிகாரங்களை பகிர்வதன் ஊடாக இனங்களுக்கு இடையில் சகவாழ்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே அரசாங்கத்தின் கொள்கை என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

இரு மாகாணசபைகள் நேற்று முன்தினம் நள்ளிரவு கலைக்கப்பட்டன.

மாகாண சபைகளை கலைப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலில், மாகாண ஆளுநர்களான டிக்ரி கொப்பேகடுவ, திஸ்ஸ பலல்ல ஆகியோர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைச்சாத்திட்டனர். வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களின் பதவிக்காலம் எதிர்வரும் 2014 மார்ச் மாதம் முடிவடையவிருந்தது. இந்நிலையில், மாகாணசபைகளை கலைக்குமாறு மாகாண முதலமைச்சர்கள் விடுத்த கோரிக்கையை அடுத்து மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ளன.

13 ஆவது அரசியல் அமைப்புச் சட்டத்திரு த்தத்தின் பிரகாரம் மாகாண சபையை பதவிக்காலம் முடிவதற்குள் கலைக்க வேண்டுமாயின், முதலமைச்சர்கள் அது பற்றி, மாகாண ஆளுநருக்கு அறிவிக்கவேண்டும்.

இதன்படி ஆளுநர் தனக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில் மாகாண சபையை கலைப்பார். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஆளுநர்கள் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரியவிற்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளனர். மேற்படி மாகாணங்களுக்கான தேர்தல் எதிர்வரும் செம்படம்பர் மாதம் 21 ஆம் திகதி நடத்தப்படலாம் என தெரிய வருகிறது.

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பொது அறிவும் பொது விவேகமும்

## ஆட்சிமாற்றம்

- பிரான்ஸின் புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்காக 2012 ஏப்ரலில் நடைபெற்ற முதலாம் சுற்று ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியாக விளங்கிய நிகொலஸ் சார்க்கோஸி (nicoloas sarkozy) 27.1 வாக்குகளையும் பிரதான போட்டி வேட்பாளரான சோசலிசக் கட்சியைச் சேர்ந்த பிரான்கொயிஸ் ஹொலன்ட் (francis hollande) 28.6 வாக்குளையும் பெற்று 50 இற்கு அதிகமான வாக்குகளை எவரும் பெற்றுக் கொள்ளாமையினால் இரண்டாம் சுற்று தேர்தல் 2012 மேயில் நடைபெற்றது.
- இதன் பிரகாரம் ஏற்கனவே ஜனாதிபதியாக பதவி வகிக்கும் ஒருவர் முதலிடத்தை கைப்பற்ற முடியாது போனமை இதுவே முதல்தடவையாகும்,
- 2012 மேயில் நடைபெற்ற இரண்டாம் சுற்று தேர்தலில் பிரான்கொயிஸ் ஹொலன்ட் 51.67 வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியானார்.
- பிரான்ஸ் ஜனாதிபதி பதவிக்காலமானது ஐந்து வருடங்கள் காலப்பகுதியை கொண்டதாகும்.

### உலக வங்கியின் புதிய தலைவர்

- சர்வதேச ரீதியாக நாடுகளின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்குவதற்காக 1944 இல் உலக வங்கி ஆரம்பிக்கப்பட்டது. 1944 இல் உருவாக்கப்பட்ட உலக வங்கியின் முதலாவது தலைவராக eugene mayer விளங்கினார்.
- 2012 யூலையில் இருந்து உலக வங்கியின் புதிய தலைவராக கொரிய அமெரிக்க சுகாதார நிபுணரான ஜிம் யொங்கிம் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உலகவங்கியின் தற்போதைய தலைவர் றொபேட் ஸொயல்லிக் விளங்குகிறார்.
உலக வங்கியின் தலைமைப் பதவிக்காலம் 05 வருடங்களாகும்.
- உலக வங்கியின் தலைமைப் பதவிக்கு அமெரிக்கர் ஒருவர் தெரிவு செய்யப்படுவதே வழமையாகும்..
- புதிய பரீட்சை ஆணையாளர் நாயகமாக எம்.ஜே.என் புஷ்பகுமார 2012 ஜனவரியில் நியமிக்கப்பட்டார்.

### யெமனின் புதிய ஜனாதிபதி

- 2012 பெப்ரவரியில் யெமனில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் புதிய ஜனாதிபதியாக அப்துல் அபு மன்சூர் ஷாடி பதவியேற்றார்.
- புதிய ஜனாதிபதித் தேர்தலில் 65 வாக்குகளைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.
- இதற்கு முன்னர் ஜனாதிபதியாக இருந்த அலி அப்துல்லா சலே இன் ஆட்சிக்காலத்தில் பத்து மாதஙகளுக்கு மேல் மக்கள் புரட்சி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### மாலைதீவு ஆட்சி மாற்றம்

- 2012 பெப்ரவரியில் ஜனாதிபதி திடீரென பதவி விலகி உள்ளார்.
இது சார்க் பிராந்திய நாடுகளில் ஒன்றாகும்.
- தற்போது பதவி விலகிய மொஹமட் நஷீட் முன்னாள் ஜனாதிபதி மைமூன் அப்துல் கையூமின் எதேச்சாதிகாரத்திற்கு எதிரான புரட்சி வீரராக விளங்கினார்.
- 2009 இல் ஜனாதிபதியாக பதவியேற்ற மொஹமட் நஷீட்டின் ஆட்சியில் ஊழல் முறைகேடுகள் நிலவியதாகவும், அதிகார துஷ்பிரயோகம் மலிந்திருந்ததாகவும் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்ததை அடுத்து பதவி விலகினார்.
- புதிய ஜனாதிபதியாக துணை ஜனாதிபதியாக இருந்த மொஹமட் வாஹிட்ஹசன் பதவி ஏற்றுள்ளார்.

### வடகொரியா

- வடகொரியா தலைவர் கிம் ஜொங் இல் 2011 டிசம்பரில் காலமானார்.
- வடகொரியா தலைவராக கிங் ஜொங் உன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- புதிய தலைவர் கிம் ஜொங் இல்இன் இளைய மகனாவார்.
- வடகொரியாவின் ஸ்தாபகர் கிம் இல் சுங் ஆவார்.

### மாலாவியின் புதிய ஜனாதிபதி

- 2012 ஏப்ரலில் மாலாவியின் புதிய ஜனாதிபதியாக உப ஜனாதிபதி ஜொய்ஸ் பண்டா பதவி ஏற்றுள்ளார்.
- ஜனாதிபதியாக பதவி வகித்த பிங்கு வா முதாறிகா மாரடைப்பினால் மரணமானதை அடுத்தே வெற்றிடம் ஏற்பட்டது.
- இவர் தென்னாபிரிக்க் பிராந்திய நாடொன்றின் முதலாவது பெண் தலைவர் எனும் பெருமையையும் பெறுகின்றார்.
- இவர் தென்னாபிரிக்க பிராந்திய நாடொன்றின் முதலாவது உப பெண் ஜனாதிபதி எனும் பெருமையையும் 2009இல் பதவி ஏற்றபோது பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.
- இவர் 2011 ஆம் ஆண்டு ஆபிரிக்காவின் சக்தி வாய்ந்த பெண்களில் மூன்றாவது பெண்மணியாக போபர்ஸ் சஞ்சிகையில் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### ஜேர்மனியின் புதிய ஜனாதிபதி

- 2012 மார்ச்சில் ஜேர்மனியின் புதிய ஜனாதிபதியாக முன்னாள் மதகுருவானஜோகிம் கோக் தெரிவானார்.
- நாடாளுமன்ற உறுப்பினர்களின் 1232 வாக்குகளில் 991 வாக்குகளைப் பெற்று தெரிவானார்.

2012 பெப்ரவரியில் முன்னாள் ஜனாதிபதியான கிறிஸ்ரியன் வூல்ப் நிதி ஊழல் குற்றச்சாட்டினால் பதவி விலகினார்.
- பண்டைய கிழக்கு ஜேர்மனியை சேர்ந்த ஒருவர் ஜனாதிபதியாவது இதுவே முதல் தடவை ஆகும்.
- கடந்த மூன்று ஆண்டுகளில் ஜனாதிபதி பதவிக்கு நடைபெறும் மூன்றாவது தேர்தல் இதுவாகும்.

### தொங்கா மன்னர்

- 2012 மார்ச்சில் தொங்கா மன்னர் ஐந்தாம் ஜோர்ஜ் துபோயு காலமானார்.
- நாட்டின் புதிய சீர்திருத்தம் ஏற்படுத்தும் நோக்கில் 2010 நவம்பரில் முதலாவது பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

இவர் ஜனநாயக முறையில் அரசியலமைப்பை மாற்றி 165 ஆண்டுகள் மன்னர் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

### அகிலேஷ்யாதவ்

- இந்தியாவின் மிகப் பெரிய மாநிலமாக கருதப்படுவது உத்தரபிரதேசமாகும்.
- 2012 மார்ச்சில் நடைபெற்ற மாநில சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி,பாரதிய ஜனதாக்கட்சி' என்பவற்றைவிட சமாஜ்வாதிக்கட்சி வெற்றி பெற்றது.

- இக்கட்சியின் தலைவரான முலாயம் சிங் யாதவின் மகன் அகிலேஷ் யாதவ் முதலமைச்சராகத் தெரிவாகி உள்ளார்.
- இதன்மூலம் இவர் மிக இளம் வயதில் பதவியேற்ற முதலாவது முதலமைச்சராவார்.

**கார்லொஸ் ஷ்லிம் (அமெரிக்கா)**

- உலக செல்வந்தர் வரிசையில் தொடர்ச்சியாக மூன்றாவது தடவையாக வும் (2012 ஆம் ஆண்டு) முதலிடத்தைப் பெற்றுள்ளார்
- போபஸ் இதழினாலேயே இச் செல்வந்தர் பட்டியல் வெளியிடப் பட்டது.
- மெக்சிக்கோவின் தொலைத்தொடர்புகள் மற்றும் கட்டு மானத்துறை முதலீட்டாளரான இவரின் சொத்து மதிப்பு 69 பில்லியன் டொலர்களாகும்.
- அடுத்த நிலையில் microsoft நிறுவன தலைவர் பில்கேட்ஸ் உள்ளார்.

**கொங்கோவின் புதிய பிரதமர்**

- 2012 ஏப்ரலில் கொங்கோவின் புதிய பிரதமராக அகஸ்ரின் மாதா பொன்யோ நியமிக்கப்பட்டுள்ளார்.
- இவர் நாட்டின் முன்னாள் நிதி அமைச்சராவார்.

**விளாடிமவர் புடின் -ரஷ்யா**

- 2012 மார்ச்சில் ரஷ்யாவில் ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது.
- இத்தேர்தலில் 63.7 வாக்குகளைப்பெற்று மூன்றாவது தடவையாக ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளதுடன், கடந்த நான்கு வருடங்களாக பிரதமராக பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.
- இவருக்கு அடுத்த நிலையில் 17.9 வாக்குகளைப்பெற்று கெனடிஸயுக்னோவ் விளங்குகிறார்.

**மேரி கத்தரின் கொல்வின்**

- மேரி கத்தரின் கொல்வின் எனும் பெயர் கொண்ட அமெரிக்கரான இவர் London Sunday Times பத்திரிகையின் போர்க்கள நிருபராவார்.
- இவர் கிழக்கு தீமோர், செச்சன்யா, லிபியா, ஈராக், இலங்கை ஆகிய நாடுகளின் யுத்தப் பிரதேசங்களில் கடமையாற்றியுள்ளார்.
- 2012 பெப்ரவரியில் சிரியாவின் Homs நகரில் இடம்பெற்ற தாக்குதலில் மரணமானார்.

**பராகுவேயின் புதிய ஜனாதிபதி**

- இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒன்றாகும்.
- பராகுவே ஜனாதிபதியாக விளங்கிய பெர்னாண்டோ லூகோ நிலத்தகராறு தொடர்பான குற்றச்சாட்டின் கீழ் குற்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு 2012 ஜூனில் பதவி விலகினார்.
- தற்போதைய புதிய ஜனாதிபதி பெடெரிகோ பிரான்கோ ஆவார்.

**பாகிஸ்தானின் பிரதமர்**

- 2012 யூனில் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தரிக்கு எதிரான ஊழல் வழக்கை விசாரிக்க தவறியமைக்காக நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டு சுமத்தப்பட்ட பிரதமர் யூசுப்ரஸா கிலானியை பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் தகுதி நீக்கம் செய்ததுடன், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியும் நீக்கப்பட்டது.

தற்போது புதிய பிரதமராக பாகிஸ்தான் ஆளுங்கட்சி வேட்பாளர் ராஜா பெர்வேஸ் அஷ்ரப் நியமிக்கப்பட்டார்.

இவர் 342 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 211 பேரின் வாக்குகளைப் பெற்றுத் தெரிவாகியுள்ளார்.

**எகிப்தின் ஜனாதிபதி தேர்தல்**

- 2013 யூலையில் எகிப்தின் முதலாவது ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியாக மொஹமட் முர்ஸி விளங்குகின்றார்.
- இத் தேர்தலில் முஸ்லிம் சகோதரத்துவ கட்சியின் மொஹமட் முர்ஸியும், ஹொஸ்னி முபாரக் அரசியல் பிரமுகராக இருந்த அஹமட் ஷபீக்கும் போட்டியிட்டனர்.
- இதில் மொஹமட் முர்ஸி 51.8% (132 மில்லியன் வாக்குகள்) பெற்று வெற்றி பெற்றதுடன், அஹமட் ஷபீக் 48.1% (12.3 மில்லியன் வாக்குகள்) பெற்றுத் தோல்வி அடைந்தார்.

**மெக்ஸிக்கோ ஜனாதிபதி**

- 2012 யூலையில் மெக்ஸிக்கோவில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளர் என்றிக் பெனா நியடோ வெற்றி பெற்றுள்ளார்.
- பி.ஆர்.ஐ கட்சியைச் சேர்ந்தவரும், முன்னாள் ஆளுநருமான இவர் 40% வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

## அட்டவணைகளை நிரப்புக

| பிரதியீட்டுப் பொருள் | பயன்படும் சந்தர்ப்பம் |
|---|---|
| 1) பேக்லையிற்று | ........................ |
| 2) நைலோன் | ........................ |
| 3) ........................ | உடையக்கூடிய உபகரணங்களை பாதுகாப்பாக பொதி செய்ய. |
| 4) ........................ | ஒட்டும் இயல்பற்ற பாத்திரம் செய்ய |
| 5) ........................ | ஆடைகள் செய்ய |

பின்வரும் பொருட்கள் கொண்டுள்ள அனுகூலங்களையும், பிரதிகூலங் களையும் தருக.

(அ) கடதாசி (ஆ) கண்ணாடி
(இ) பருத்தித்துணி (இ) இரும்பு

**மேலே தரப்பட்ட பொருட்கள் தொடர்பாக அட்டவணையை**

| பொருட்கள் | பிரதியீட்டுப் பொருட்கள் | பிரதியீட்டுப் பொருட்களின் அனுகூலங்கள் | பிரதிகூலங்கள் |
|---|---|---|---|
| 1) கடதாசி | .................. | .................. | .................. |
| 2) கண்ணாடி | .................. | .................. | .................. |
| 3) பருத்தித்துணி | .................. | .................. | .................. |
| 4) இரும்பு | .................. | .................. | .................. |

**பாரம்பரிய இயல்புகள்**

1) ஒரு பரம்பரையிலிருந்து இன்னோர் பரம்பரைக்கு எடுத்துச் .................. , .................. எடுத்துச் .................. இயல்புகளுமுண்டு. இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் இயல்புகள் .................. இயல்புகளாகும்.

2) மனிதனில் .................., .................., .................. என்னும் இயல்புகள் பாரம்பரியமானவை.

3) .................., .................., .................., .................. போன்ற .................. காரணிகள் இயல்புகள் மாற்றமடைய உதவுகின்றன.

4) வெண்மை நிறமான தோல், மயிர், புருவம் கொண்டவர்களும் எம்மிடையே உண்டு. இதன் காரணம் .................., .................. இது .................. எனப்படும்.

5) பரம்பரை இயல்புகளை ஊடுகடத்தும் காரணிகள் .................. கலன்களில் அமைந்துள்ளன.


6) பரம்பரையியல்புகள் ஊடுகடத்தல் பற்றிய ஆய்வினை மேற்கொண்டவர் .................. எனும் பாதிரியாராகும்.

7) இவர் தனது ஆய்விற்காக பட்டாணித் தாவரத்தை தேர்ந்தெடுத்தமைக்கான காரணங்களில் சில.
1) ..................
2) ..................
3) ..................
4) ..................

8) சில இயல்புகள் பல .................. வேறுபடாமல் நிலவுமாயின் அது .................. இயல்புகளெனப்படும்.

9) .................. போது வெளிக்காட்டப்படும் இயல்பு .................. இயல்பாகும்.

# பாடசாலையின் சிறந்த தலைமைத்துவமே வெற்றியின் பிரதான காரணமாகும்



ஒரு பாடசாலையின் வெற்றிக்கு அதன் சிறந்த தலைமைத்துவமே முதற் காரணமாக காணப்படுகிறது வெற்றி பெற்ற பாடசாலைகளின் பின்னால் அதன் சிறந்த தலைமைத்துவங்களே இருந்துள்ளது என நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணமய் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் அமரர் கனகசபை அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட பாடசாலை நுழைவாயிலினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார் அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

யாழ். வீரசிங்கம் மத்திய கல்லூரியின் செயற்பாடுகள் தற் போது வளர்ச்சி கண்டு வருகிறது குறிப்பாக இந்த பாடசாலை காலத்திற்கு காலம் நல்ல தலைமைத்துவங்கள் வழி நடத்தி வந்திருக்கின்றன அந்த வகையில் ஓய்வு பெற்ற அதிபர் விநாயகமூர்த்தி தனது சிறந்த தலைமைத்துவத்தை வழங்கிச் சென்றுள்ளார். தற்போது புதிய நல்ல தலைமைத்துமிக்க அதிபர் கிடைத்துள்ளார். எனவே வீரசிங்கம் மத்திய கல்லூரியின் தலைமைத்துவம் தொடர்ந்தும் தக்கவைத்து கொள்ள வேண்டும எனத் தெரிவித்த அவர் தென்மராட்சி கல்விவலயம் கடந்த காலங்களில் கல்விச்செயற்பாடுகளில் பின் தங்கிய" நிலையில் காணப்பட்ட பிரதேசம் தற்போது முன்னேற்றம் அடைந்து வருகிறது இந்த வலயத்திற்கு தற்போது சிறந்த வலய கல்விப் பணிப்பாளர் கிடைத்துள்ளார் அவர் இந்தப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறை எடுத்து செயற்பட்டு வருகின்றார்.எனவே நம்பிக்கைதர கூடிய முன்னேற் றத்தை நோக்கி சென்றுகொண்டி ருக்கிறது இந்த முன்னேற்றத்தை வலுப்படுத்த எல்லோரும் சேர்ந்து உழைக்க வேண்டும்

மேலும் மாணவர்கள் இந்த படசாலையின் பெருமைக்காகவும் தென்மராட்சியின் பெருமைக்காகவும் உழைக்க வேண்டும் எதிர்காலத்தில் சிறந்த கல்விச் சமூகமாக உருவாக வேண்டும். அதற்காக நாம் எம்மாலான எல்லா உதவிகளையும பங்களிப்புகளையும் நிச்சயம் மேற்கொள்வோம் அத்தோடு மாணவர்கள் தனியே பாடசாலை கல்வியுடன் மாத்திரம் நின்றுவிடாது ஏனைய திறமைகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் அது இன்றைய காலத்தின் கட்டாயமாக உள்ளது எனவும் வலியுறுத்தினார்.

கல்லூரியின் அதிபர் அம்பலவாணர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கிருஸ்ணகுமார் சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாய கட்சியின் பிரதேச அமைப்பாளருமான சூசைமுத்து அலெக்ஸ்,கோட்டக் கல்வி அதிகாரி சிவானந்தம். பாடசாலையின் முன்னால் அதிபர் விநாயகமூர்த்தி ஈழ மக்கள் ஜனநாய கட்சியின் கொடிகாம அமைப்பாளர் விஸ்வா, நுழைவாயிலினை அமைத்த குடும்பத்தினர் ஆசிரியர்கள் மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# மல்லாவியில் டெங்கு ஒழிப்பு

(மல்லாவி)

டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தை முன்னிட்டு மல்லாவி பிரதேசத்திலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருகிறது.

துணுக்காய் பிரதேசசபையினரும் மல்லாவி சுகாதார வைத்திய பணிமனையினரும் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையும் இணைந்து டெங்கு ஒழிப்பு நடவடிக் கையை முன்னெடுத்துள்ளனர்.

மல்லாவி நகர்ப்பகுதியில் பொதுமக்கள் கூடும் இடங்கள், பொதுச்சந்தைப் பகுதிகள், குப்பை கூழங்கள் தேங்கியுள்ள இடங்கள் என்பவற்றை பிரதேச சபை ஊழியர்களும் பொது மக்களும் சிரமதானம் மூலம் துபபுரவாக்கி வருகின்றனர்.

இந்தச் செயற்பாடு நேற்று முன்தினம் காலை ஆரம்பமாகி தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

மரணத்தை விளைவிக்கும் டெங்கு நேயை கட்டுப்படுத்த அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என இதன் போது அறிவுறுத்தப்பட்டது.

பாடசாலைகளிலும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைளை முன்னெடுக்கும் வகையில் துணுக்காய் பிரதேச சபையினால் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (140)

# பல்வேறு குற்றங்கள் புரிந்த 142 பேர் யாழ்.குடாநாட்டில் ஒரு வாரத்தில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒருவார காலம் இடம்பெற்ற பல்வேறு குற்றச் செயல்களால் 142 பேர் கைதுசெய்யப்பட்டதாக நேற்று இடம்பெற்ற பொலிஸாரின் வாராந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பொலிஸ் பிரிவில் மோசடி செய்த 3 பேரும் அடித்துக் காயப்படுத்திய 28 பேரும் சந்தேகத்தில் 3 பேரும் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 8 பேரும் குடிபோதையில் வாகனம செலுத்திய 9 பேரும் வீதி விபத்துக்களில் 3 பேரும் கள்ளச் சாரய வியாபாரத்தில் ஒருவரும், பொது இடங்களில் மது அருந்தியதாக 16 பேரும், வீட்டுக்குள் அத்துமீறி நுழைநதமைக்காக 5 பேரும் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய 2 பேரும்சூழல் மாசடையச் செய்தமைக்காக 4 பேருமாக மொத்தம் 86 பேரும் கைது செய்யப்பட்டதாகவும்

காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட' 9 பேரும் கள்ளச் சாராயம் விற்ற ஒருவரும், சந்கேத்தின் பேரில் 3 பேரும் ஏனைய குற்றங்களுக்காக 43 பேரும் மொத்தமாக 56 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்.பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (இ)

# தாலிக்கொடி மோசடி பெண்ணுக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

இரவலாகப் பெற்ற தாலிக்கொடியை மோசடிசெய்த பெண்ணொருவர் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, யாழ்.கோவில் வீதியிலுள்ள உறவினர் ஒருவரிடம் 3 இலட்சம் ரூபா பெறுமதியான தாலிக்கொடியை வைபவம் ஒன்றிற்குஅணிந்து கொள்வதற்காக இரவலாக வாங்கிய யாழ்.மாடம் வீதியைச் சேர்ந்த 33 வயதுடைய பிரஸ்தாப பெண் மோசடிசெய்து நீண்டகாலமாக ஏமாற்றியுள்ளார். இது குறித்து யாழ்.பொலிஸில் கடந்த 29 ஆம் திகதி பதிவு செய்த முறைப்பாட்டிற்கு அமைய அப்பெண் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 11 ஆம் திகதி வரை அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக நேற்று யாழ்.பொலிஸ் தலைமையகத்தில் இடம்பெற்ற வாராந்த செய்தியாளர் சந்திப்பில் தெரிவிக்கபட்டுள்ளது. (இ)

# முட்டை வீச்சு

பாடசாலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த ஆசிரியை ஒருவர் மீது அவர் கற்பிக்கும் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் சிலர் முட்டை வீசித்தாக்குதல் நடத்திய சம்பவமொன்று மொரட்டுவை பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

முச்சக்கரவண்டியில் பயணித்துக்கொண்டிருந்த மேற்படி ஆசிரியையை வழிமறித்தே இம்மாணவர்கள் முட்டைகளை வீசித்தாக்குதல் நடத்தியுள்ளனர்.

# டெங்கு தொற்று பரிசோதகர்களை அச்சுறுத்தியவருக்கு விளக்கமறியல்

டெங்கு பரிசோதகர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களை அச்சுறுத்திய வர்த்தகர் ஒருவரை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு ஆனமடு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

நவகத்தேகம பிரதேச வியாபாரி ஒருவருக்கே கடந்த வியாழக்கிழமை மாலை இந்த விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

டெங்கு ஒழிப்பு வாரத்தை யொட்டி கடந்த புதன்கிழமை நவகத்தேகம நகரில் டெங்கு பரிசோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது, மேற்படி நபரின் வர்த்தக நிலையத்திலும் டெங்கு பரிசோதனை மேற் கொள்ளப் பட்டுள்ளது.


இப்பரிசோதனையின்போது குறித்த நபரின் வர்த்தக நிலையமானது டெங்கு நுளம்பு பெருகுவதற்கு ஏற்ற வகையில் காணப்பட்டதால் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் டெங்கு தடுப்பு வேலைத் திட்ட அதிகாரிகள் குறித்த நபரை எச்சரித்துள்ளனர்.

இதனையடுத்து மேற்படி நபர் பொதுச்சுகாதாரப் பரிசோதகரையும் ஏனைய அரச உத்தியோகத்தர்களையும் எச்சரித்துள்ளதுடன், நவகத்தேகமயின் வடமேல் மாகாண சபை உறுப்பினருக்கு 14 நாட்கள் விளக்கமறியலில் இருக்க முடியுமாயின் தனக்கு அதற்கு அதிகமாகவும் இருக்க முடியும் எனவும் கூறியுள்ளார்.

அதே வேளை அவரது பெயர் விபரஙகளையும் அதிகாரிகளுக்கு வழங்க மறுத்துளளார். இச சம்பவம் தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நவகத்தேகம பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப் பாட்டையடுத்து சந்தேக நபர் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை கைது செய்யப்பட்டு ஆனமடு நீதிமன்றத்தில் ஆஜர்ப் படுத்தப்பட்ட போதே அவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.


இச்சம்பவம் தொடர்பில் நவகத்தேகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





யாழ்ப்பாணம் சென்.ஜோண்ஸ் கல்லூரியின் 190 ஆவது ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணிக்கு இடம்பெற்றது. (20)

# அருளப்பர் சின்னப்பருக்கு புனிதர் பட்டம்



நித்திய இளைப்பாற்றல் அடைந்த பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் புனிதராக திரு நிலைப்படுத்தப்படவுள்ளதாக வத்திக்கான் அறிவித்துள்ளது.

அவருக்கு புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்வு இந்த வருட இறுதியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. போலந்தில் பிறந்த இரண்டாவது அருளப்பர் சின்னப்பர், 1978 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு அவர் நித்திய இளைப்பாறுதல் அடையும் வரை ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் பாப்பரசராக இறைபணியாற்றி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.


# சீனா ரக்ஷ்யாவுடன் இணைந்து கூட்டுக் கடற்படைப் பயிற்சி

சீனாவும் ரஷ்யாவும் இணைந்து பாரிய கடற்படை பயிற்சிகளை ஆரம்பித்துள்ளது.

மிகப்பெரிய வல்லரசு நாடு ஒன்றுடன் இணைந்து மேற் கொள்ளும் பாரிய யுத்த பயிற்சி நடவடிக்கை இதுவென பீஜிங் தெரிவித்துள்ளது.

ஜப்பான், கலை பிராந்தியத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்த கடற்பயிற்சிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளன.

இந்த கடற்படை பயிற்சிகள், எந்த காரணத்தை கொண்டும் மூன்றாவது நாடு ஒன்றை குறி வைத்து மேற்கொள்ளப்படவில்லை என சீன மக்கள் விடுதலை இராணுவ தலைவர் ஜென்ரல பெங்ஜ் பெங்குய் தெரிவித்துள்ளார்.



எப்படியிருப்பினும், கடல் எல்லைகள் குறித்து ஜப்பான், பிலிப்பைன்ஸ் நாடுகளுடன், சீனாவிற்கு ஏற்பட்டுள்ள முறுகல் நிலையில் இந்த பயிற்சி நடவடிக்கைகள் ஆரமபமாகியுள்ளன.

கிழக்கு சீனாவினால் உரிமை கோரப்படும் கடற்பிராந்தியத்தை டோக்கியோவும் உரிமை கோரும் அதேநிலையில் தென் சீன கடற்பிராந்தியத்தின் ஒரு பகுதியினை மனிலா உரிமை கோருவது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, கடந்த வாரம் அமெரிக்க மற்றும் ஜப் பான் நாடுகளின் கடற் படையினர் இணைந்து சேன்டைகோ பிராந்தியத்தில் பிறிதொரு கடற்பயிற்சியினை மேற் கொண்டிருந்தனர் என்பது சுட்டிகாட்டதக்கது.

# தங்க நாணயங்கள் விற்பனை நிறுத்தம்

(சென்னை)

சர்வதேச பொருளாதார சந்தையில் இந்திய ரூபாய் மதிப்பு வீழ்ச்சி எதிரொலியாக, நகைக்கடைகளில் தங்க நாணயங்கள் விற்பனையை 20ஆம்திகதி முதல் நிறுத்துவது என்று தங்கநகை வியாபாரிகள் முடிவு செய்துள்ளனர்.

அந்நிய செலாவணியை கருத்தில் கொண்டு, இந்தியாவில் தங்கத்தின் இறக்கு மதியை குறைக்கும் வகையில் மத்திய அரசு கடந்த மாதம் தங்கத்தின் மீதான இறக்குமதி வரியை 4 சதவீதத்திலிருந்து, 6 சதவீதமாக உயர்த்தியது. தங்கத்தின் மீதான இறக்குமதி வரி உயர்வு காரணமாக இந்தியாவின் தங்கத்தின் தேவை அதிகரித்து, தங்கத்தின் விலை அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டது.

ஆனால் சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை வீழ்ச்சி காரணமாக இந்தியாவில் தங்கத்தின் இறக்குமதி வரி உயர்வு எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை, இறக்கு மதியும் குறையவில்லை. இந்த நிலையில் சர்வதேச பொருளாதார சந்தையில் இந்திய ரூபாயின் மதிப்பு வீழ்ச்சி எதிரொலியாக, மத்திய அரசுக்கு ஏற்படும் அந்நிய செலாவணி இழப்பீட்டினை குறைக்கும் வகையில் தங்கத்தின் இறக்குமதியை குறைக்க தங்கநகை வியாபாரிகள் திட்டமிட்டுள்ளனர்.



தமிழகத்தில் திருவாரூரில் இயந்திரம் மூலம் நாட்டப்பட்ட பயிர்களை மாவட்டச் செயலர் அருண்மொழி பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்..

## ஸ்னோடனுக்கு அடைக்கலம்; வெனிசுலா இணக்கம்




அமெரிக்க ரகசியங்களை வெளியிட்ட எட்வர்ட் ஸ்னோடனுக்கு அடைக்கலம் அளிக்க தயாராக இருப்பதாக வெனிசுலா மற்றம் நிகராகுவே நாட்டு அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

ஸ்னோடன் அடைக்கலம் கேட்டு அளித்த கோரிக்கையை பல்வேறு நாடுகள் நிராகரித்த நிலையில் இவ்விரு நாடுகளும் அடைக்கலம் அளிக்க தயாராக இருப்பதாக அறிவித்துள்ளன.

மேலும் மனிதாபிமான அடிப் படையில் அவருக்கு அடைக்கலம் அளிக்கப்படுவதாகவும் வெனிசுலா மற்றும் நிகராகுவே நாட்டு அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

## கடன்பெற இணக்கம்



சர்வதேச நாணய நிதியத் திடம் இருந்து 5.3 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை பெறுவதற்கு பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளது.மூன்று வருடத்திற்கான இந்த கடன், மத்திய வங்கியின் கையிருப்பினை நிரப்புவதற்கு உதவும் என சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. அத்துடன் வரவு செலவு திட்ட பற்றாக் குறையை குறைக்கவும், எரிசக்தி துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை சீர் செய்வதற்கும் இந்தக் கடனுதவி பயன்படுத்தப் படவுள்ளது.

# 31 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒன்று சேர்ந்த சகோதரர்கள்

மத்திய அமெரிக்க நாடான, குவாடிமாலாவில், உள்நாட்டு சண்டையின் போது பிரிந்த சகோதரர்கள் இருவர், 31 ஆண்டுகளுக்கு பின், மீண்டும் ஒன்று சேர்ந்துள்ளனர். குவாடிமாலா நாட்டில், 36 ஆண்டுகளாக உள்நாட்டு சண்டை நடந்தது. இரண்டு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டனர். 96ல், இந்த சண்டை ஓய்ந்தது.

இந்த சண்டையின் போது, ஏராளமான குடும்பங்கள், பாதுகாப்புக் கருதி, பல்வேறு இடங்களில் குடி புகுந்தன. இதில் பலர் காணாமல் போயினர். தற்போது தன்னார்வ அமைப்பு ஒன்று, போரின் போது காணாமல் போனவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில ஈடுபட்டுள்ளது.

இதுவரை, இந்த தொண்டு அமைப்பு, 108 பேரை, மீண்டும் ஒன்று சேர்த்துள்ளது. இந்த வகையில், 11 வயதில் காணாமல் போன, அல்பெர்டோவையும், 19 வயதில் பிரிந்த, கிரிகாரியோவையும் கண்டு பிடித்து, இந்த தொண்டு அமைப்பு ஒன்று சேர்த்துள்ளது.கடந்த, 82 இல், இவர்கள் கிராமத்தை, இராணுவத்தினர் முற்றுகையிட்டு, வீடுகளுக்கு தீ வைத்ததால், மலை குகைகளில தஞ்சம் புகுந்தனர். அப்போது இவர்கள் பிரிந்து விட்டனர். 31 ஆண்டுகளுக்கு பின், ஒன்றிணைந்துள்ள சகோதரர்கள், மீதமுள்ள எட்டு சகோதர, சகோதரிகளை, தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

# இரவுப் பணிகளில் ஈடுபடும் பெண்களுக்கு மார்பகப் புற்று நோய் பாதிப்பு



இரவு நேரப் பணியில் இருக்கும் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து கனடாவை சேர்ந்த உடலியல் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்தனர்.

பெண்களுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கும் மார்பக புற்றுநோய் குறித்து இதில் தீவிரமாக ஆராயப்பட்டது.

கனடாவின் வான்கூவர், பிரிட்டிஷ் கொலம்பியா, கிங்ஸ்டன், ஆன்டாரியோ நகரங்களில் மார்பக புற்றுநோய பாதித்த 1,134 பெண்களிடமும், அதே வயதில் நோய் பாதிக்காத 1,179 பெண் களிடம் ஆய்வு நடத்தப்பட்டது.

ஆய்வில் பங்கேற்ற பெண்களில் 3 இல் ஒருவர் தொடர்ந்து இரவு பணியில் வேலை பார்ப்பவர். 15 முதல் 29 வயது வரையில் அதாவது 14 ஆண்டுகள் வரை தொடர்ந்து இரவுப் பணிக்கு சென்றுவந்த பெண்களுக்கு எந்தப் பாதிப்பும் தெரிய வில்லை. ஆனால், 30 அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டுகள், தொடர்ந்து இரவு பணியில் இருந்த பெண்களுக்கு மார்பக புற்றுநோய்க்கான வாய்ப்பு 2 மடங்காக இருந்தது. இதற்கு முக்கிய காரணம், உடல் சுரப்பிகள் தான் என்று தெரியவந்துள்ளது.

அதாவது தூங்காமல் வேலை செய்வதால், உடலில் தூக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சுரப்பியில் பாதிப்பு ஏற்படுகிறது. தூக்கத்தை கட்டுப்படுத்தவும் மற்றும் தூக்கத்தை வரவழைக்கவும் உதவும் மெலடோனின் சுரப்பு குறைய ஆரம்பிக்கிறது. இதனால் உடல் பாதிக்கப்படுகிறது.


மேலும் விற்றமின் டி குறைவது, உடல் கடிகாரத்தில் மாற்றம் ஏற்படுவது, வாழ்க்கை முறை மாற்றம் ஆகிய அனைத்தும் மார்பகப் புற்று நோய்க்கு காரணமாகும்.



மேற்கு வங்கத்தின் பிர்பூம் மாவட்டத்தின் இளம்பசார் என்ற இடத்தில் நடைபெறும் "ஹூல்' திருவிழாவில், மலைவாழ் மக்கள் பல்வேறு நடனங்கள் ஆடி, கலை நிகழ்ச்சிகள் நடத்தினர்.

# சுயநல நோக்கங்களுக்காகவே வளர்க்கப்படுகிறது இனவாதம்

## யாழில் அமைச்சர் டியூ



(யாழ்ப்பாணம்)

சாதாரண தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இனவாதிகள் அல்லர். நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சிலர் தங்களுடைய சுயநல நோக்கங்களுக்காக இனவாதத்தை வளர்க்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

யாழ். பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டு நினைவு தினக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிட்டத்தட்ட 35 ஆண்டுகளிலேதான் இந்த நாட்டில் பிரச்சினைகள் வளர்ந்ததுடன் யுத்தம் தலைதூக்கியதும் முரண்பாடுகளும் உருவெடுத்தன. இலங்கையின் இனப்பிரச்சினையை தனி ஒரு நாட்டினாலும் அரசினாலும் தீர்த்துவைக்க முடியாது. முழு நாடும் ஐக்கியப்பட்டாலே தீர்த்துவைக்கமுடியும் என்று அன்றிலிருந்து இன்றுவரை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலைக்கு நேபாள நாடு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது. எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அனைவரும் ஐக்கியப்பட வேண்டும்.

இதன் காரணமாகத்தான் கம்யூனிஸ்ட் கட்சி சாதாரண மக்களது பிரச்சினைகளை முன்நிறுத்தி செயற்படுகின்றது. தொழில் பிரச்சினை தொடர்பில் நாங்கள் நடத்திய போராட்டங்களில் அடிவாங்கியிருக்கிறோம்.

எனவே தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து தமது பிரச்சினைகளைத் தீர்க்க முயல வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (பா)

# மேனனின் வருகை அடுத்த வாரமே

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் இலங்கைக்கு தனது விஜயத்தை அடுத்தவாரமே மேற்கொள்ள விருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்றைய தினம் அவர் இலங்கைக்கு விஜயம் செய்யவிருந்தார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ இந்தியாவில் உயர்மட்டத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டமையினால் மேனனின் விஜயம் அடுத்த வாரத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அந்தச் செய்திகளில் மேலும் தெரிவித்தன.

இந்திய, இலங்கை மற்றும் மாலைதீவுக்கு இடையிலான முத்தரப்பு கடல் பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கே அவர் கொழும்பிற்கு விஜயம் செய்யவிருப்பதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் விரைவில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பெண்ணின் சடலம் புத்தூரில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

புத்தூர் பகுதியில் பெண் ஒருவர் கழுத்தில் தூக்குக்கயிறு மாட்டிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

தனது மகளுக்காக புதிய வீட்டைக் கட்டிக்கொண்டிருக்கும் வீட்டின் உரிமையாளர் தேவை நிமித்தம் வீட்டினுள் நுழைந்தபோது மகளின் சடலம் கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவலளிக்கப்பட்டதையடுத்து அச்சுவேலி பொலிஸார், சம்பவ இடத்துக்கு வந்த மல்லாகம் நீதவான் விசாரணைகளை மேற்கொண்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

சாந்தரூபன் நிலானி (வயது - 27) என்ற பெண்ணே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் திருமணமாகி கைதடிப்பகுதியில் தற்போது வசித்து வருகின்றார். நேற்று முன்தினம் இவர் புத்தூருக்கு வந்த நிலையில் நேற்று தனக்காக தந்தையினால் கட்டப்படும் வீட்டிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. (15,116)



வடக்கில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதற்கான நேர்முகப் பரீட்சையொன்று நேற்று யாழ். செயலகத்தில் இடம் பெற்றது. இதன்போது பட்டதாரிகள் பெருமளவில் நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்வதற்காக வரிசையில் காத்திருப்பதைக் காணலாம். (படம் - பார்த்தீபன்)

## வேட்புமனு...

சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இந்தச் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாண சபைத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் தொடர்பிலான அறிவித்தல் எதிர்வரும் பதினோராம் திகதி வெளியிடப்படும். குறித்த அறிவித்தலின் பிரகாரம் 24, 25 ஆம் திகதிகளிலோ அல்லது 31,01 ஆம் திகதிகளிலோ வேட்புமனுத் தாக்கல்கள் இடம்பெறும்.

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் ஏழாயிரத்து 89 பேர் வாக்காளர்களாக பதிவு செய்திருக்கின்றனர். அதன் அடிப்படையில் முல்லைத்தீவில் 923 பேரும் மன்னாரில் ஐந்தாயிரத்து 114 பேரும் யாழ்ப்பாணத்தில் 135 பேரும் வவுனியாவில் 917 பேரும் வாக்களார்களாகப் பதிவதற்காக விண்ணப்பித்திருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## முப்பரிமாண...

பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு இரண்டு நாள் பயணமாகச் சென்ற அமைச்சர் பசில் ராஜபக்ஷ அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அனைத்து அபிவிருத்தி செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தக் கூடிய்வாறு இலங்கையில் ஸ்திரத்தன்மை எற்படுத்தப்பட்டுள்ளது.

வட மாகாண சபை தேர்தலுக்கான எற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிவித்தமை வரலாற்று சிறப்புமிக்க ஒரு நாளாக அமைந்துள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் வட மாகாண சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வட மாகாண சபைக்கான தேர்தலை நடத்துமாறு தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கும் ஆவணத்தில் ஜனாதிபதி கையொப்பமிட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மனித உரிமைகள்...

எலீன் டொனாஹோ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகராலயத்தின் கவனத்தை மனித உரிமைகள் விடயத்தில் ஈர்ப்பதற்காக நடைபெற்ற பொது விவாதத்தின்போது அமெரிக்கா பல்வேறு நாடுகள் தொடர்பில் தகவல்களை சமர்ப்பித்திருந்தது.

மனித உரிமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் மற்றும் ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதிகளுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் அமெரிக்கப் பிரதிநிதி எலீன் டொனாஹோ இதன்போது வலியுறுத்தியுள்ளார்.

கருத்துச் சுதந்திரம் மற்றும் அமைதியாக ஒன்றுகூடுவதற்கு உள்ள உரிமை இலங்கையில் தொடர்ந்தும் மீறப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் ஊடகவியலாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கு எதிராக பகைமை உணர்வுடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் நம்பகத்தன்மையுடன் கூடிய விசாரணையோ அல்லது சட்ட நடவடிக்கையோ மேற்கொள்ளப்பட்டதற்கான அறிகுறிகள் தென்படவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தெரிவுக்குழு...

ஒன்றுகூடுவது தொடர்பாக இந்தியாவின் அழுத்தம் தேவையற்ற ஒன்றாகும். எதிர்க்கட்சியினர் பங்குபற்றாத போதிலும் நாடாளுமன்ற விசேட தெரிவுக்குழு ஒன்று கூடுவதில் எந்தவொரு தடையுமில்லை. தெரிவுக்குழுவில் பங்குபற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் தமது பிரதிநிதிகளின் பெயர்களை இதுவரை வெளியிடவில்லை.

இதேவேளை, தமது இந்திய விஜயத்தின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து நாளைய தினம் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெளிவுபடுத்துவாரெனதான் நம்புவதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

## 13 ஆவது திருத்தச்...

வரவேற்பைத் தெரிவித்த இந்திய அமைச்சர் குர்சித், அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதுடன், அதற்கும் அப்பாலும் சென்று இலங்கையில் அர்த்தமுள்ள ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் எதுவும் செய்யப்படக் கூடாது என்றும் அவர், அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் கேட்டுக்கொண்டதாகவும் அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (மற்றொரு செய்தி 06 ஆம் பக்கத்தில்)

## ஒருங்கிணைப்புக்...

தலைவர் செல்வம் அடைக்கலநாதன், என்.சிறீகாந்தா, ஹென்றி மகேந்திரன், புளொட் சார்பில் சிவநேசன் (பவன்) ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது தேர்தல் அறிவிக்கப்பட்டமை தொடர்பிலும், இடம்பெயர்ந்த வாக்காளர் பதிவுகள் பற்றியும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## 13 ஆவது திருத்தத்தை...

தேர்தலை மக்கள் சரியாக பயன்படுத்துவார்களேயானால் வடமாகாணத்தை செல்வங்கொழிக்கின்ற வளங்கொழிக்கின்ற நிலைக்கு மாற்றியமைக்க முடியுமென்பதுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினது ஆசியுடன் பலாலியிலும் மக்களை மீளக்குடியேற்ற முடியுமென்றும் சுட்டிக்காட்டினார்.

வடமாகாணசபைத் தேர்தல் என்பது எனது நீண்டகால கனவு எனது நீண்டகால கனவு என்பதற்கு அப்பால் எமது மக்களின் நலன்களுக்காக அதை எதிர்கொள்ளவும் தயாராகவுள்ளேன்.

எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக வாழவேண்டுமானால் அதனை மாகாணசபையூடாக நிறைவேற்ற முடியுமென்பதில் எமக்கு நம்பிக்கையும், தகுதியும் இருக்கிறது.

. வடமாகாண சபைத் தேர்தலில் நாம் நிச்சயம் போட்டியிடுவோம் என்பதுடன், அரசுக்கும் எனக்கும் இடையே முரண்பாடுகள் காணப்படின் அதை எவ்விதமான இடர்பாடுகளுமின்றி இலகுவாக தீர்த்துக்கொள்ளவும் முடியும்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு நாம் நீண்டகாலமாக கூறிவருகின்றோம். அதுமட்டுமல்லாமல் 13 ஆவது திருத்தம் தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றபோதும் தெரிவுக்குழுவை அமைத்து அதனூடாக தமிழர் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணமுடியுமென்பதையும் நாம் வலியுறுத்தியும் வருகின்றோம்.

இந்நிலையில் முக்கியமாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை அரசு பலவீனமாக்க முயலும் பட்சத்தில் அதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். அது சாதகமாகயிருந்தால் நாம் ஆதரவளிக்கும் அதேவேளை, பாதகமாகயிருந்தால் நிச்சயம் அதை எதிர்ப்பதுடன் எமது மக்களுக்கான பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு காண்பதே எமது முக்கிய நோக்கமாகுமென்றும் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே ஆனையிறவு ஊடான போக்குவரத்தை போலத்தான் ஓமந்தை ஊடான போக்குவரத்தும் இருக்க வேண்டுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடி வருகின்றேன்.


கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக நாம் எதைக் கூறிவந்தோமோ அதையே இன்றும் கூறிவருகிறோம். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி, எக்காலத்திலும் பிரிக்க முடியாத வடக்கு கிழக்கு ஒரு அலகு. என்ற எமது கட்சியின் கொள்கைக்கு அமைவாக மக்களின் விருப்பு வெறுப்புக்களையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியதாகவுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மயிலிட்டிப் பகுதியில் இடம்பெறவிருந்த சிறப்புப் பூசை வழிபாடுகள் குறிப்பிட்ட தொகையைவிட அதிகளவான மக்கள் அங்கு சென்றதனாலும் ஒருசிலரது சுயலாபவாதிகளின் குழப்பநிலை காரணமாகவும் பூசைவழிபாடுகள் பிற்போடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே கடந்த கால தமிழ் அரசியல் தலைமைகளின் வழிநடத்தல்களினால் மக்கள் எதிர்கொண்ட இழப்புகள் மற்றும் துன்ப துயரங்களையும் அமைச்சர் இதன்போது எடுத்து விளக்கினார்.

இதன்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் அமைச்சர் பதிலளித்தார்.

# இருதரப்பு உறவு மேம்பாடு; மாலைதீவு ஜனாதிபதி பேச்சு



இருதரப்பு உறவுகளை மேம் படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கும் மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் வஹீட்டுக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கைக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள மாலைதீவு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் வஹீட் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்துள்ளார்.

இதன்போதே மேற்படி கருத்துக்கள் பரிமாறப்பட்டதாக ஜனாதிபதியின் பேச்சாளர் மொஹான் சமர நாயக்க தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் பொது வான நிலைப்பாட்டிற்கு வர வேண்டியதன் அவசியம் குறித்தும் இந்தச் சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மாலைதீவு ஜனாதிபதி இலங்கையில் தங்கியிருக்கும் காலப் பகுதியில் வர்த்தக சமூகத்தினர் மற்றும் இலங்கையில் வாழும் மாலைதீவு பிரஜைகளையும் சந்திக்கவுள்ளார்.

# முல்லை மின்விநியோகம் இன்றைய தினம் சீராகும்

## – யானைக் காட்டுக்குள் திருத்தவேலை

(முள்ளியவளை)

ஒட்டிசுட்டான் பகுதியில் தேக்கமரம் முறிந்து விழுந்துள்ளதால் முல்லைத்தீவிற்கான மின் விநியோக மார்க்கத்தில் சேதம் ஏற்பட்டு மின் விநியோகம் நேற்றுக் காலையில் இருந்து துண்டிக்கப்பட்டமையால் பலரும் சிரமங்களை எதிர்நோக்கினர். இதனால் இத்திருத்தப்பணிகளை மின்சார சபை ஊழியர்கள் துரிதமாக மேற்கொண்டு வருவதாக நேற்று இரவு தெரிவிக்கப்பட்டது.

இதனால் முள்ளியவளை, தண்ணீரூற்று, முல்லைத்தீவு மற்றும் நகர்ப்பகுதிகளுக்கான மின் வழங்கலே பாதிப்படைந்துள்ளது. இதனால் வியாபார நிலையங்கள், குளிர்பானக் கடைகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளன.

எனினும் இப்பகுதிகளுக்கான மின் விநியோகத்தை சீரமைக்கவென பொலிஸாரும், இராணுவத்தினரும் உதவிகள் மேற்கொண்டிருந்தனர். இம் மினிவிநியோகம் குறித்து மின்சாரசபை பொறியிலாளர் செந்தில் செல்வனிடம் வினாவியபோது யானைகள் நடமாடும் இக்காட்டுப்பகுதியில் இரவு நேரத்தில் நம் ஊழியர்கள் இப்பகுதிகளுக்கு விரைவாக மின் விநியோகத்தை வழங்கவென கடமையாற்றுகின்றார்கள்.

மிக விரைவாக இரவுக்குள் மின்விநியோகம் சீர் செய்யப்படும். இதற்கான பணிகள் யாவும் பூர்த்தியாகிக் கொண்டிருப்பதாகவும், இன்று காலையில் மின்விநியோகம் சீராகிவிடும் என்றும் அவர் நேற்று இரவு தெரிவித்தார். (125)

# இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டு விழா யாழில்





(யாழ்ப்பாணம்)

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் 70 ஆவது ஆண்டு நிறைவு விழா, யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் தோழர் சிவராஜா தலைமையில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் ஆரம்பமாகிய இந் நிகழ்வில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான டியூ. குணசேகர, கட்சியின் உபதலைவரும் புனர்வாழ்வு அமைச்சருமான சந்திரசிறி கஜதீர, நேபாள அரசின் முன்னைநாள் பிரதமரும், நேபாள கம்யூனிஸ்ட் கட்சியின் சிரேஷ்ட தலைவருமான தோழர் மாதேவ்குமார் நேபாள், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராஜா, பத்மநாபா-ஈ.பி.ஆர்.எல்.எவ் பொதுச்செயலர் தி.சிறீதரன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும், கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்மட்டக்குழு உறுப்பினர்களும் பெருமளவிலான பொது மக்களும் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் நேபாள முன்னைநாள் பிரதமரும், நோபாள கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவருமான தோழர் மாதேவ் குமார் நேபாள் மற்றும் தோழர் டியூ குணசேகர ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள். அத்துடன் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

# புகலிடதாரிகள் குறித்து பிரிட்டனில் முக்கிய தீர்ப்பு

(லண்டன்)

ஐக்கிய இராச்சியத்தில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையர்களின் கோரிக்கைகளை பரிசீலிக்கும்போது, போரின்போது அவர்களின் செயற்பாடு மற்றும் புலம்பெயர்ந்த நாடுகளில் அரசியல் நடவடிக்கைகளில் அவர்கள் காட்டிய ஈடுபாடு போன்ற காரணிகளை கருத்தில் கொள்ள வேண்டும் என்று பிரிட்டிஷ் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பளித்துள்ளது.

புகலிடதாரிகளின் மனுக்களை தீர்மானிக்கும் முக்கிய அம்சமாக மனுதாரரின் நாடு குறித்த பரிந்துரையின்படி அதிகாரிகள் செயற்பட வேண்டும்.

சமீபத்தில் அளிக்கப்பீட்ட தீர்ப்பில் விடுதலைப் புலிகள் அமைப்போடு தொடர்புடையவர்கள் மட்டுமல்லாது வெளிநாடுகளிலிருந்தபடி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள்கூட இலங்கைக்கு அனுப்பப்பட்டால் துன்புறுத்தப்படலாம் என்று குடியேற்றம் தொடர்பான உயர் தீர்பாயம் தீர்ப்பளித்துள்ளதாக வழக்கறிஞர் அருண் கணநாதன் பி.பி.சியிடம் தெரிவித்தார்.

புகலிடதாரர்கள் தொடர்பாக நீதிமன்றங்கள் அளிக்கும் தீர்ப்புகள் பெரும்பாலான சமயங்களில் அந்தக் குறிப்பிட்ட வழக்குக்கு மட்டுமே பொருந்தக் கூடியது என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் கூறிவருகின்றனர்.

இந்த தீர்ப்பை எதிர்த்து ஐக்கிய இராச்சியத்தின் உள்துறை அமைச்சு மேன்முறையீடு செய்ய வாய்ப்புள்ளது.

இந்த வழக்கு விசாரணையின் போது, புகலிடதாரர்கள் குறித்த பரிந்துரையை வழங்க 9 நாட்கள் விசாரணை நடந்ததாகவும், இந்த வழக்கின் தீர்ப்பு மற்றவர்களுக்கும் பொருந்தக் கூடியது என்றும் அருண் கணநாதன் தெரிவித்தார்.

நிராகரிக்கப்பட்ட புகலிடதாரர்கள் இலங்கைக்கு திரும்ப அனுப்பக் கூடாது என்றும் மனித உரிமை அமைப்புகள் அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றன.

# சுகாதார சீர்கேடு; உணவகத்திற்கு சீல்

(முழங்காவில்)

முழங்காவில் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்றுக்கு நீதிமன்றத்தின் பணிப்புரைக்கு அமைவாக சீல்வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட சுகாதார பரிசோதகர்கள் இந்நடவடிக்கையை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

ஏற்கனவே மேற்படி உணவகத்தின் சுகாதார சீர்கேட்டை கண்டறிந்த சுகாதாரத் திணைக்களத்தினர், குறிப்பிட்ட உணவகத்தின் சுகாதார சீர்கேட்டை மூன்று மாத காலத்தில் சீர் செய்யும்படி தவணை கொடுத்து இருந்தார்கள்.



அதனை உணவகத்தின் உரிமையாளர் கவனத்திற்கொள்ளாத நிலையில், சுகாதாரத் திணைக்களத்தினர் இதனை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்தார்கள்.

இந்நிலையில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட பதினான்கு நாட்கள் அவகாசத்தி லும் உணவக உரிமையாளர் சுகாதார நடவடிக்கையை மேற் கொள்ளாத நிலையில் உணவ கத்திற்கு நேற்று முன்தினம் சீல் வைக்கப்பட்டது.

# புனர்வாழ்வளிக்கும் கைதிகளை தெரிவு செய்வதில் பாரபட்சம்

## – சட்டத்தரணி நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

புனர்வாழ்வு அளிப்பதற்காக அரசியல் கைதிகளை சட்ட மா அதிபர் தேர்ந்தெடுக்கும் போது பாரபட்சம் காட்டப்படுவதாக அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான அமைப்பின் தலைவர் நமால் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

பணம், அரசியல் செல்வாக்கு போன்றவற்றுக்காகவும் மற்றும் அரசோடு இணைந்து செயற்பட இணக்கம் தெரிவிப்போருக்குக்கும் சலுகை காட்டப்படுவதாகவும் வழக்கறிஞர் நமால் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

விடுதலைப்புலிப்போராளிகள் மற்றும் அந்த அமைப்போடு தொடர்புடையவர்கள் புனர்வாழ்வு பயிற்சியில் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றனர்.

நீண்ட காலம் சிறையில் இருப்பவர்களும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு தற்போது உட்படுத்தப்படுகின்றனர்.

இவ்வாறு கைதிகளை தேர்ந்தெடுக்கும் பொறுப்பை சுயாதீன அமைப்புக்கு கொடுக்க வேண்டும் என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்



## சின்னையா தவரெட்ணம் (JP)

(வடமாகாண கடற்தொழில் அமைப்புத் தலைவர், யாழ்.மாவட்ட கூட்டுறவு சபை பணிப்பாளர், முன்னாள் தலைவர் யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனம்)

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தவரெட்ணம் 3.07.2013 அன்று காலமானார்.

இவர் பிலோமினா (றோஸ்) வின் அன்புக் கணவரும், Dr.திருமாறன், றதிமதி, Dr.மதிமாறன் (I.O.M) அவர்களின் பாசமிகு தந்தையும், Dr.அனோமா, கனியூட், Dr.மகிழ்நங்கை, (கொழும்பு தேசிய வைத்தியசாலை), ஆகியோரின் பாசமிகு மாமனாரும், யுனிஸ்ரன், ஹேமந்த, பிரசாதினி, பிராங்கோ, திருநயனி ஆகியோரின் பாசமிகு பேரனும், சீவரெட்ணம் (சிவம்), காலஞ்சென்ற அழகரட்ணம் மற்றும் சிவஞானரட்ணம், (ராசா), ஜெயரட்ணம் (கிளி), ஜெயராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான திரேசம்மா (லில்லி), சேவியர், மற்றும் சின்னத்துரை (ஜேம்ஸ்), சின்னராசா (லக்ஸ்மாலா), புஸ்பராசா (ஜோசப்) சிவயோகம், மல்லிகாதேவி, மியூரியல், சிவஞான சேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அலோசியஸ் அலெக்சாண்டர் (ஓய்வுபெற்ற அதிபர்), அல்வீனம்மா (ராணி), செல்வி அலோசியஸ், சகாயமேரி (பபி) ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி மரியாதைக்காக எரிஞ்ச அம்மன் கோயிலடி (வியாபாரி மூலை பருத்தித்துறை) மயிலிட்டிச் சங்க மண்டபத்தில் நாளை 08.07.2013 திங்கட்கிழமை காலை 7.00 - 8.00 மணிவரையும், பின்னர் யாழ்.பிரதான வீதியில் உள்ள யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனத்தில் 11 - 11.30 மணி வரையும் அதன்பின்னர் குருநகர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 11.30 - 11.45 மணிவரையும், அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அங்கிருந்து மீண்டும் அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்படும். அவரது பூதவுடல், அவரது இல்லத்திலிருந்து பிற்பகல் 2.45 மணியளவில் நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டு குருநகர் கிழக்கு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் 3.30 மணியளவில் மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இரங்கல் திருப்பலியின் பின், கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

83/11 கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.
021 222 2563, 077 343 7167.

தகவல்
(C/2903) குடும்பத்தினர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாம்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 யூலை 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.